விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(6-87749)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 26 வெள்ளிக்கிழமை (09.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 172

# வன்முறை நீடித்தால் ஜி.எஸ்.பி பிளஸ் மீளப்பறிபோகும்!

## ஜேர்மன் தூதுவர் ஜான் எச்சரிக்கை

(பேர்லின்)

**இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் இடம் பெறுமானால் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை திரும்ப பெறப்படலாம் என எச்சரித்துள்ள ஜேர்மனி தூதுவர் ஜான் ஒட்கே, சிறுபான்மையினருக்கு எதிராக குறிப்பாக தற்போது முஸ்லிம்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்செயல்கள் தொடர்பாக தாம் மிகவும் கரிசனை கொண்டு உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஜேர்மன் தூதுவர் ஜான் ஒட்கே.

தற்போது இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் நாங்கள் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம். இலங்கை அரச பிரதிநிதிகளுடனான சந்திப்பில் நான் பங்கேற்காத போதும் எமது கலாசார அலுவலகர் பங்கேற்றிருந்தார்.

மதக்குழுக்கள் இனக் குழுமங்களுக்கு இடையில் வெறுப்புணர்வை உண்டுபண்ணுவதானது பிழையான வழி முறையாகும் என்ற செய்தியை நாம் அரசிடம் வலியுறுத்தியிருந்தோம்.

இந்தச் செய்தியை அரசாங்கத்திற்கும் மிகத் தெளிவாக நாம் வெளிப்படுத்தியுள்ளோம். அவர்கள் இது விடயத்தில் நடவடிக்கை எடுப்பதுடன் எந்த மதமாக இருப்பினும் இனமாக இருப்பினும் அதனைப் பொருட்படுத்தாது சட்டத்தின் ஆட்சியானது நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனவும் குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன்னர் நிறுத்தப்படவேண்டும் எனவும் அழுத்திக்கூறியுள்ளோம். 23

## கடன் சுமை; பெண் மரணம்

(கரணவாய்)

கடன் சுமை காரணமாக குடும்பப் பெண் ஒருவர் உயிரை மாய்ப்புச் செய்த சம்பவம் தொண்டைமானாறு 23

## வாள்வெட்டு முயற்சி!

(பரந்தன்)

கிளிநொச்சி நகர பகுதியில் நேற்று மாலை வாள்வெட்டு தாக்குதல் முயற்சி ஒன்று 23

## ஜப்பான் குழு ஆராய்வு!

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு தொடர்பில் ஆராய்வதற்காக ஜப் 23

## முதலமைச்சர் விக்னேஸ்வரனை ஞானசாரருடன் ஒப்பிடக்கூடாது

### ஊடக சந்திப்பில் ராஜித கருத்து

(கொழும்பு)



வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பொது பல சேனாவின் ஞானசார தேரரைப் போன்று செயற்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று 23

### திருகோணமலையில் திருட்டு

## தங்க நகைகள் யாழில் மீட்பு!



24

## அசமந்த போக்கு

(தெனியா)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவுகள் பற்றிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் உதாசீனம் செய்து வந்திருக் 23

## கேப்பாப்பிலவு # 100–வது நாள்

## வாழ்விட மீட்பு போராட்டம் தொடர்வு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாப்பிலவு மக்கள் தங்கள் வாழ்விடங்களை மீட்கும் போராட்டத்தை கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலையில் இப் போராட்டம் நேற்று வியாழக்கிழமையுடன் 100 ஆவது நாளை எட்டியுள்ள போது 23



## சீனாவின் திட்டத்தில் இலங்கை; இந்தியாவிடம் எதிர்ப்பு இல்லை

### அமைச்சர் ரவி கருணாநாயக்க தகவல்

(கொழும்பு)



சீனாவின் பாதை மற்றும் அணை திட்டத்தில் இலங்கை இணைந்து கொண்டமை குறித்து இந்தியா கவலை தெரிவிக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்கள் பய 24

## 150 கிலோ க.அட்டை மீட்பு

### யாழ்ப்பாணத்தில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

விற்பனைக்காக கொண்டு செல்ல முயற்சிக்கப்பட்ட 150 கிலோ கடல் அட்டை நேற்றைய தினம் யாழ்.பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதுடன் இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



நாச்சிக்குடா முழங்காவெளிப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே யாழ். பண்ணை பகுதியில் வைத்து நேற்றைய தினம் அதிகாலை வேளையில் கைது செய்யப்பட்டுள்ளனர். 23

## கோவில் வளாகத்தில் கஞ்சா பொதி மீட்பு!

(யாழ்ப்பாணம்)

பளை மாமுனை பகுதியில் உள்ள கோவில் வளாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதி நேற்றைய தினம் பளை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மாமுனை பகுதியில் அமைந்து 23

### வடக்கு மாகாண சபையின்

## தேசிய பட்டியல் ஆசனம் அடுத்து புளொட்டுக்கு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான சுழற்சிமுறை தேசிய பட்டியல் ஆசனம் தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) உரியது என அக்கட்சியின் தலைவ 23

## "தூக்கி அடித்து கொன்று விடுவேன்"

(கொழும்பு)

"பொய்யான தகவல்களை பரப்பினால் தூக்கி அடித்து கொன்று விடுவேன்" என ஊடகவியலாளரை மிரட்டிய சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ மத விவகாரங்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, தகாத வார்த்தைகளால் திட்டி ஊடகவியலாளரை தாக்குவதற்கு முயற்சி செய்து கொலை அச்சுறுத்தலும் விடுத்துள்ளார்.

போபிடிய பகுதியில் குப்பை கொட்டுவது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் 23

## திருமுருகன்காந்தி கைது; யாழில் கண்டன கவனயீர்ப்பு



## இடைக்கால திட்டம்!

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலான இடைக் காலத்திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் 23

## பள்ளிவாசல் தீ வைப்பு; தமிழ் இளைஞர் கைது!

(திருகோணமலை)

திருகோணமலை நகரத்தை அண்மித்த பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற தீ வைப்புச் சம்பவம் தொடர்பில் தமிழ் இளைஞர் ஒருவரை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.


திருகோணமலை துறைமுகப் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நோர்வே ரூ.180 மில்லியன் நிதியுதவி

(ஒஸ்லோ)

வெள்ளத்தாலும் நிலச்சரிவாலும் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கான மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கு நோர்வே 10 மில்லியன் நோர்வேஜியன் குரோனர்களை (இலங்கை மதிப்பில் 180 மில்லியன் ரூபாய்கள்) வழங்குகிறது என நோர்வேயின்




வெளியுறவு அமைச்சர் பர்கே பிரெண்டே அறிவித்துள்ளார்.

இவ்வுதவியானது ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் ஊடாகச் செயற்படுத்தப்படும்.

இயற்கை அனர்த்தங்களாலும் பருவநிலை மாற்றங்களாலும் ஏற்படும் அழிவுகளைத் தடுக்கவும் அதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்குமான நீண்டகால நோக்கின் தேவையை வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் "மட்டுப்படுத்தல் செயன்முறையானது நட்டஈட்டை வழங்குவதைவிடப் பயனுள்ளதென்பதோடு மனித உயிர்களையும் காக்கவல்லது" எனவும் பர்கே பிரெண்டே குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்; வெள்ளத்தாலும் நிலச்சரிவாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உதவுகிறது. அவ்வகையில் நோர்வேஜிய உதவியானது இக்குடும்பங்களுக்கான நீர், சுகாதாரம், தூய்மை, சிறுவர் பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றில் கவனம் குவிகிறது.

மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கான உதவியினூடாக நீர் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் சேகரிப்பு நிலையங்களின் தரத்தை அதிகரித்தல், கிணறுகளைச் சுத்தம் செய்தல், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கையை மீளத் தொடங்குவதற்கான அடிப்படையான வாழ்வாதார வசதிகளை வழங்குதல் ஆகியன இடம்பெறவுள்ளன.

கொழும்பில் உள்ள நோர்வே தூதரகமானது தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் நோர்வேஜிய நிலவியல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுக்கிடையேயான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கு நிதியுதவி அளிக்கிறது.

இதன்மூலம் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் திறன் மேம்பாடு, அவ் வமைப்புக்கு நிலச்சரிவை தடுக்க உதவும் மேன்மையான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதோடு முன்னெச்சரிக்கையையும் நிலச்சரிவைச் தடுக்கும் வழிகளை அறியும் திறனும் மேம்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புதிய கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் அ.ஆனந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## மண்டலாபிஷேக பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வண்ணை கில்னர் ஒழுங்கை ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். மதியம் அன்னதானம் வழங்கப்படும். (இ-3)

## 69-வது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 69ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு நிலைய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வில் முதலாம் நாள் நிகழ்வுகளை நிலைய போசகர் வ.சிவலிங்கம், நிர்வாக சபை உறுப்பினர் பொ.செல்வநாதன் ஆகியோர் ஆரம்பித்து வைப்பர்.

இரண்டாம் நாளன்று நிலைய போசகர் க.மணியம் இல்லங்களுக்கான மரதன் ஓட்டத்தினை ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து கயிறு இழுத்தல், தலையணை அடிப்போர், உடற்பயிற்சிக் கண்காட்சி, சங்கீதக் கதிரை, விநோத உடைப் போட்டி என்பன நடைபெறும்.

இறுதி நாளான நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் யாழ்.மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி இடம்பெறும். இதனை அரசடி செல்லப்பிள்ளையார் ஆலய தலைவர் செ.துசிந்ததாஸ் ஆரம்பித்து வைப்பார்.

இதனைத் தொடர்ந்து அமரர் அ.தேவன் (செல்லக்கிளி) ஞாபகார்த்த கலை அரங்கில் பரிசளிப்பு நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்று நிலையக் கல்விப் பொறுப்பாளர் இ.இரவீந்திரராசா தலைமையில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும். (இ-3)

## ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டவர் விளக்கமறியலில்

50 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் பொலிஸாரினால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்றுக் காலை கல்கிஸை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதனை தொடர்ந்து, எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-7)

## சிறுநீரக நோய் கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

சிறுநீரக நோயாளிகளுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிபாரிசின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மாதாந்தக் கொடுப்பனவுத் தொகை ரூபாய் 3000இல் இருந்து ரூபாய் 5000 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரம் பேருக்கு தற்போது அரசாங்கத்தினால் இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## உணவகத்தில் தீ

(கொழும்பு)

மருதானை, மாளிகாகந்தை வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமான உணவகம் ஒன்று நேற்று முன்தினம் நள்ளிரவில் தீ பிடித்துள்ளது.

உணவகத்தின் பின்புறமாகவுள்ள பூட்டு உடைக்கப்பட்டுள்ளதால், ஏதேனும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது!

கடந்த சிலநாட்களாக மூடப்பட்டிருந்த இந்த உணவகத்தில் ஹாஸ் சிலிண்டர் வெடிப்போ மின்சார கசிவோ ஏற்பட்டிருக்கவில்லை எனக் கடை ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தீயணைப்புப் படையின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-11)

## மரண அறிவித்தல்

### மதுமதி செல்வராசா (மது அக்கா - கொக்குவில் வளர்மதி முன்பள்ளி தலைமை ஆசிரியர்)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட மதுமதி (மது அக்கா) செல்வராசா அவர்கள் 08.06.2017 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னார் Pastor ஜேசன் ஜெ. செல்வராசா (Pastor, Assembly of God Chavakachchari, இயக்குநர் கொழும்பு இறையியல் கல்லூரி Cts) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் வாமதேவன் - வாமதேவன் கமலாதேவி அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற கு.டெ. செல்வராசா, Phoep ராஜலக்சுமியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மதி அமுதனின் சகோதரியும், ஜோசுன்னா (சென்.ஜோன்ஸ் கல்லூரி Staff), ஜென்மதுரஷா (மருத்துவக் கல்லூரி பங்களாதேஷ்), ஜொனத்தன் மிர்கேஷ் (HNB Jaffna) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜோன் பிரியந்த் அவர்களின் அத்தையும், மகாலிங்கம் திஷான் திலீபன் (Londan) அவர்களின் மாமியாரும், கீதாஞ்சலி, ரூபாஞ்சலி, டங்கன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து நாளை (10.06.2017) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 14, இராசாவின் தோட்டம் அசெம்பிளி ஒவ் கோட் திருச்சபைக்கு எடுத்து செல்லப்பட்டு, நல்லடக்க ஆராதனை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் கொட்டடி கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

32/1, சுண்டிக்குளி விதானையார் வீதி,
யாழ்ப்பாணம்.

(9185)

தகவல்:
குடும்பத்தினர்

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலைக்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை. (தையல் நன்கு தெரிந்தவர்கள்) வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (9182)

12.06.2017இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.
077 017 8009, 076 895 1970



அகவை 85 இல் அகமகிழ்ந்து

வாழ்த்துக்கள்

திருமதி

**மகேஸ்வரி நாகப்பர்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

2017.06.09

இன்று தனது 85வது அகவையில் மகிழ்ந்திருக்கும் எமது அன்புத் தெய்வத்துக்கு இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள். இன்னும் பல அகவைகள் கண்டு இனிதே வாழ எமது உளமார்ந்த வாழ்த்துக்கள் பலப்பல...

வத்தனை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(C-8761)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் கந்தையா சாமி

(K.S.அம்பாள் மினிபஸ் உரிமையாளர்)

மலர்வு
01 ✸ 11 ✸ 1934

உதிர்வு
09 ✸ 06 ✸ 2009



அன்பின் உருவாகி
எமை ஆண்ட தெய்வமே!
உண்மை பொய்மை எதுவென்று
எமக்கு சொல்லித் தந்தீர்
ஓடும் உலகத்தில்
உழைப்பைக் கற்றுத்தந்தீர்

துன்பம் வரும் வேளையில்
துணிந்து நிற்கச் சொல்லித்தந்தீர்
வறுமையில் வாடுவோர்க்கு
வாரிவழங்கக் கற்றுத்தந்தீர்

இப்படி வாழ்வைக் கற்றுதந்த நீங்கள்
எமைவிட்டு பிரிந்து
எட்டு ஆண்டு கடந்தனவோ?
ஆண்டுகள் ஓடி மறையும்
அன்பின் உம் நினைவுகள்
அகலாது எம் ஐயனே!

என்றும் உங்கள்
நினைவுடன் வாழும்
- குடும்பத்தினர்

1/5 பலாலி வீதி,
2ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

(9156)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா நிர்ணயித்த இமாலய இலக்கை விரட்டி வென்றது இலங்கை சிங்கங்கள்



இந்தியாவுக்கெதிரான சம்பியன்ஸ் டிராபி ஆட்டத்தில் மெண்டிஸ், குணதிலக, மத்தியூஸின சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணி நிர்ணயித்த 322 என்ற இமாலய இலக்கை எட்டிப் பிடித்த இலங்கைக் அணி 7 விக்கெட்டுக்களால அபார வெற்றி பெற்றது.

சம்பியன் டிராபி தொடரில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஷிகர் தவான், ரோகித் சர்மா, தோனி ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் இந்தியா 321 ஓட்டங்க்ள் குவித்தது.

சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரின் 8-வது ஆட்டம் லண்டன் கெனிங்டன் ஓவல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. முக்கியமான இந்த லீக் ஆட்டத்தில், குரூப் "பி" பிரிவில் உள்ள இந்தியா - இலங்கை அணிகள் விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

பின்னர் விளையாடிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 321 ஓட்டங்கள் குவித்தது. ஷிகர் தவான் சிறப்பாக விளையாடி சதம் விளாசினார்.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 138 ஓட்டங்கள் எடுத்தது. சிறப்பாக விளையாடி 78 குவித்து ரோகித் சர்மா ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஹோலி டக் அவுட ஆனார். யுவராஜ் 7 ஓட்டங்களில் போல்டாகி பெவிலியன் திரும்பினார்.

பின்னர், ஷிகர் தவானுடன், தோனி ஜோடி சேர்ந்தார். தொடர்ந்து சிறப்பாக விளையாடிய ஷிகர் தவான் சதம் அடித்தார். 128 பந்துகளில் 125 ஓட்டங்கள் எடுத்த போது ஷிகர் தவான ஆட்டமிழந்தார். வந்த வேகத்தில் சிக்ஸர் விளாசிய பாண்டியா 5 பந்துகளில் 9 ஓட்டங்கள் எடுத்து தனது விக்கெட்டை பறிகொடுத்தார்.

தொடர்ந்து சிறப்பாக விளையாடிய தோனி 46 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். இருப்பினும், 52 பந்துகளில் 63 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தோனி ஆட்டமிழந்தார். கடைசியில் ஜாதவ 13 பந்துகளில் 25 ஓட்டங்கள் அடிக்க இந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 50 ஓவர்கள் முடிவில் 321 ஓட்டங்கள் குவித்தது.

இலங்கை அணி தரப்பில் மலிங்க இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். இருப்பினும மலிங்க, லக்மல், பிரதீப் ஆகியோர் தலா 70 ஓட்டங்களுக்கு மேல் வாரி வழங்கினர்.

இதனையடுத்து 322 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது.





இலங்கை அணி சார்பில் டிக்வெல்ல மற்றும் குணதிலக ஆகியோர் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்கினர் டிக்வெல்ல 7 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த குஷல் மெண்டிஸ் குணதிலகவுடன் ஜோடி சேர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக சிறப்பாக ஆடி இணைப்பாட்டமாக 159 ஓட்டங்களை சேர்த்த வேளை குணதிலக 76 ஓட்டங்களுடனும் குஷல் மெண்டிஸ் 89 ஓட்டங்களுடனும் ரன்னவுட் ஆனார்கள்.

அடுத்து குஷல் பெரேராவுடன் ஜோடி சேர்ந்த அணித் தலைவர் மத்தியூஸ் இருவரும் சிறப்பாக ஆடி இணைப்பாட்டமாக 76 ஓட்டங்களை பெற்றனர். ஓட்ட எண்ணிக்கை 271 ஆக இருந்த போது குஷல் பெரேரா 47 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை உபாதை காரணமாக வெளியேறினார். மாற்று வீரராக அசேல குணவர்த்தன மத்தியூஸ்டன் இணைந்து 47.4 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தனர். இதன்மூலம் இலங்கையணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணியின் சார்பில் பந்து வீச்சில் புவனேஸ்வர் குமார் மாத்திரமே ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் குஷல் மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டார்.




## கலப்பு இரட்டையர் பட்டம் வென்றது போபண்ணா - கேப்ரிலா



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் கலப்பு இரட்டையர் போட்டியில் போபண்ணா - கேப்ரிலா இணை சம்பியன் பட்டம் வென்றது. இறுதி போட்டியில் ராபர்ட் பெரா- லீனா ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது. கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் முதல்முறையாக போபண்ணா சம்பியன் பட்டம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 2-6,6-2,12-10 என்ற செட் கணக்கில் போராடி போபண்ணா - கேப்ரிலா இணை சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

## பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் முர்ரே - வாவ்ரிங்கா மோதுகின்றனர்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸின் அரையிறுதியில் உலகின் முதல் நிலை வீரரான அன்டி முர்ரேவும் மூன்றாம் நிலை வீரரான வாவ்ரிங்காவும் மோதுகிறார்கள்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் இரண்டாம் நிலை வீரரான ஜோகோவிச் (செர்பியா) காலிறுதியில் அவுஸ்திரேலிய வீரர் டொமினிக்கிடம் அதிர்ச்சிகரமாக தோற்றார்.

உலகின் முதல் நிலை வீரரான அன்டி முர்ரே, ரபெல் நடால், வாவ்ரிங்கா ஆகியோர் காலிறுதியில் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றனர். ஒரு அரையிறுதியில் உலகின் முதல் நிலை வீரரான அன்டி முர்ரே (இங்கிலாந்து)- மூன்றாம் நிலை வீரரான வாவ்ரிங்கா (சுவிடசர்லாந்து) மோதுகிறார்கள்.

மற்றொரு அரையிறுதியில் 9 முறை சம்பியனும், 4-ம் நிலை வீரருமான ரபெல் நடால் (ஸ்பெயின்)- டொமினிக் மோதுகிறார்கள்.

பெண்கள் அரையிறுதி போட்டிகளில் ஹெலப் (ருமேனியா)- பிளிஸ் கோவா (செக்குடியரசு) ஒஸ்டா பென்கோ (லாத்வியா)- பாசின்ஸ்கி (சுவிட்சர்லாந்து) மோதுகிறார்கள்.

## நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற பந்து வீச்சே காரணம் மோர்கன் கருத்து



சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் இடையேயான ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் பந்து வீச்சு பிரதானமாக இருந்ததாக அணித் தலைவர் மோர்கன் கூறியுள்ளார்.

சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட்டில் கார்டிப்பில் நடந்த இங்கிலாந்து - நியூசிலாந்து லீக்கில் இங்கிலாந்து அணி 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை தோற்கடித்தது. இதில் இங்கிலாந்து நிர்ணயித்த 311 ஓட்டங்கள் இலக்கை நோக்கி ஆடிய நியூசிலாந்து அணி 44.3 ஓவர்களில் 223 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. 2-வது வெற்றியை ருசித்த இங்கிலாந்து முதல் அணியாக அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்தது.

வெற்றிக்கு பிறகு இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் கூறுகையில், துடுப்பாட்டம் பரவாயில்லை. ஆனால் முதல் பாதி ஆட்டம் எங்களுக்கு முழு திருப்தி அளிக்கவில்லை. ஏனெனில் எதிர்பார்த்ததை விட 20 முதல் 30 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட்டோம். அதே சமயம் பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியை கச்சிதமாக செய்து காட்டினர். ஒருங்கிணைந்து அற்புதமாக செயல்பட்டனர். இந்த ஆட்டத்தில் பந்து வீச்சு தான் பிரதானமாக இருந்தது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் பயணம் இன்னும் மூன்றாண்டுகள் மட்டுமே

## ரத்ன தேரர் கணிப்பு

நாட்டின் பொருளாதார கொள்கையிலும் சர்வதேச உடன்படிக்கைகளையும் மிகவும் மோசமான கொள்கைகளையும் அரசாங்கம் கடைப்பிடித்து வருகின்றது. தேசிய அரசாங்கத்தினுள் ஒற்றுமையும் புரிந்துணர்வும் இல்லாது போயுள்ளது. எனவே இந்த அரசாங்கத்தின் மீது இனியும் நம்பிக்கை வைக்க முடியாது என தேசிய மகா சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு மாத்திரமே செயற்பட முடியும். அதன் பின்னர் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை தேசிய மகா சபையின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (இ-7)



மானிப்பாயைச் சேர்ந்த வசீகரன் கிருபாமேரி தம்பதியரின் புதல்வனும் கலாபூஷணம் க.ப.சின்னராசாவின் மாணவனும் யாழ். புனித பத்திரிசியாார் கல்லூரி மாணவனுமாகிய செல்வன் ஜீவிதனின் மிருதங்க அரங்கேற்றம் அண்மையில் அருட்பணி செ.அன் புராசா (அ.ம.தி) அடிகளாரின் தலைமையில் மானிப்பாய் நகர சபை மண்டபத்தில் நடை பெற்றது. இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாக யாழ்.ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் சிறப்பு விருந்தினராக யாழ். பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

## திருட்டு ஓ.ஐ.சிக்கு விளக்கமறியல்

திருட்டுக் குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொரளை பொலிஸ் நிலையத்தின், போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரியின் (ஓ.ஐ.சி) விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாண சபையின் உறுப்பினர் றொய்ஸ் பெர்னாண்டோவின், 50 ஆயிரம் ரூபாய் பணம், தங்கம் மற்றும் இடிதாங்கி ஆகியவற்றை திருடினார். என்றே அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கொழும்பு பிரதான நீதவானால் ரணசிங்க முன்னிலையில், நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாகவும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, பிரதான நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.


சம்பவம் தொடர்பில், அடையாள அணி வகுப்பு இடம்பெற்ற போது, சந்தேக நபர்கள் இருவரினால், அவர் அடையாளம் காணப்பட்டார். ஆகையால், அவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டதாக நீதிமன்றம் அறிவித்தது. (இ-7)

## மஹோற்சவம்

ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவானின் லோக கல்யாண மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம், நீரா வியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலை கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். (இ-3)

# ரஜினி விரும்பினால் இலங்கைக்கு வரலாம்

## வெளிவிவகார அமைச்சர் அழைப்பு



வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற பின்னர் ரவி கருணாநாயக்க, தனது முதல் பயணமாக இந்தியா சென்றுள்ளார். அவரது இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்நிலையில் ரஜினிகாந்த் இலங்கைக்கு வருவதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளதாக இந்திய ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன. ரஜினிகாந்த் விரும்பினால் இலங்கை வரலாம் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் இலங்கை தமிழர்களுக்கு வீடுகளை வழங்க சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இலங்கை வர இருந்த நிலையில், தமிழக அரசியல் கட்சிகள் ரஜினி இலங்கைக்கு செல்லக் கூடாது என்று வலியுறுத்தியதை அடுத்து, ரஜினி தனது இலங்கை பயணத்தை ரத்து செய்தார். மேலும் தான் ஒரு நடிகன். எனது முடிவுகளை, பயணங்களை அரசியலாக்க வேண்டாம் என்று அரசியல் கட்சிகளுக்கு அவர் கோரிக்கை விடுத்திருந்தார். இந்நிலையில், இந்தியா சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ரஜினி விரும்பினால் இலங்கை வரலாம் என அழைப்பு விடுத்தி ருக்கிறார்.

இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலும் ரஜினிகாந்த் பிரபலமானவரே என்று குறிப்பிட்டுள்ள ரவி கருணாநாயக்க, இலங்கையில் ரஜினிக்கு அதிகளவில் ரசிகர்கள் இருக்கிறார்கள் என்றார்.

இலங்கை தரப்பில் அவருக்கு எதிராக எந்த எதிர்ப்பும் கிடையாது. ரஜினி ஆசைப்பட்டால் இலங்கை வரலாம் என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-7)

# பொலிஸ் அதிகாரிகள் இன, மத பேதமின்றி சேவையாற்ற வேண்டும்

## பொலிஸ் மா அதிபர் அழைப்பு



(கொழும்பு)

அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் இன,மத,சாதி பேதமின்றி சேவையாற்ற வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

மக்களின் துக்க நிலமைகளின் போது பாதுகாப்பளிப்பது பொலிஸாரின் பொறுப்பாகும் என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

அநுராதபுரம், பரசன்கஸ்வெவ பொலிஸ் நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

யாழ். பொதுச்சந்தைகளில் மரக்கறிகளின் விலை அதிகமாக காணப்படுகிறது. பூசணிக்காய் ஒரு கிலோ 100 ரூபாவாகவும் பச்சை மிளகாய் ஒரு கிலோ 300 ரூபாய்க்கும் வெங்காயம் ஒரு கிலோ 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய்க்கும் ஏனைய மரக்கறிகளின் விலையும் 100 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-5-105)



நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று முற்பகல்10 மணியளவில் நடைபெற்றது.

# இராசி பலன்

09.06.2017

(வைகாசி 26, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு

பூரணை முன்னிரவு 7.04 மணிவரை

கேட்டை பின்னிரவு 5.39 மணிவரை

சுபநேரம் 5.52-7.22 மணிவரை

இராகுகாலம் 10.22-11.52 மணிவரை

பூரணை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை அதிகாலை 6.01 இற்கு தனு-சந் | | |
| | | | ராகு |
| | சனி சந் | | குரு |

**மேடம்:** குடும்பத்தினிடையே குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் கூடிய கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**இடபம்:** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள்.

**மிதுனம்:** செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கடகம்:** பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உறவினர் பகை மாறும்.

**சிம்மம்:** தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன்வருவர், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** செயற்பாட்டில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**துலாம்:** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடி[illegible] ரின் [illegible]

**தனுசு:** அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது, தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்:** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், நண்பர்களால் ஆதயமுண்டு, பயணங்கள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடமாகாணசபை விவகாரம் முதல்வரின் நகர்வு சரியானது

## அமைச்சர் மனோ தெரிவிப்பு



இலங்கையில் மிகவும் பிரபல மாகாணசபைகள் வட மாகாணசபையும் கிழக்கு மாகாணசபையும்ஆகும். இதற்கு காரணம் இல்லாமல் இல்லை. இந்நாட்டில் அதிகாரப்பகிர்வு கோரி போராடியது, தமிழர்களாகும். அகிம்சா போராட்டம், ஆயுதப் போராட்டம் இரண்டையும் முன்னெடுத்து பெரும் துன்பங்களுக்கு முகங்கொடுத்தவர்கள் தமிழர்களாவர்.

ஆகவே அதிகாரப்பகிர்வின் ஒரு கட்டமாக மாகாணசபைகள் வழங்கப்பட்டபோது, உருவாகிய நிலைமையை அரசியல்ரீதியாக சமாளிக்கவே ஏனைய ஏழு மாகாணங்களுக்குமாக இந்த முறைமையை ஜனாதிபதி ஜேஆரும், பிரதமர் ராஜீவும் தந்தார்கள். ஆகவே இன்று தெற்கில் இருக்கின்ற மாகாணசபைகள் சும்மா கிடைத்தவை ஆகும்.

ஆனால் வடக்கில், கிழக்கில் அவை சும்மா கிடைக்கவில்லை என்பதை பொறுப்புகளில் உள்ளோர் உணர வேண்டும். இவற்றின் பின்னால், தமிழ் மக்களின் பெரும் தியாக வரலாறு இருக்கின்றது என்பதை அனைவரும் உணர வேண்டும். இது தான் உண்மை. ஆகவே, ஏனைய மாகாணசபைகளில், குழப்பம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் இல்லையா? என்று கேள்வி கேட்டு வடக்கில், கிழக்கில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு எவரும் சப்பை கட்டு கட்ட முடியாது.

எனவே இன்று இந்த விவகாரம் தொடர்பில் முதல்வர் விக்னேஸ்வரன் ஒரு விசாரணைக் குழுவை நியமித்து அறிக்கையை பெற்று நடவடிக்கை எடுத்துள்ளது, நல்ல முற்போக்கான நடவடிக்கையாகும்.

தனி ஒரு நாட்டை கோரிய காலங்களுக்கு, ஒரு மாகாண சபையையே பரிபாலிக்க முடியவில்லையா? என தெற்கில் எழும் கூச்சலுக்கு உரிய பதிலை தரும் பொறுப்பு முதல்வரிடம் இருக்கின்றது. கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கையின் பிரகாரம் காரியங்களை முன்னெடுக்க அவருக்கு அவர் வணங்கும் தெய்வம் அருள் பாலிக்கட்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரு மான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது பற்றி நான் பேசுவது, மத்திய அரசு அமைச்சர் என்ற உரிமையில் மாத்திரம் அல்ல. எனக்கு இதில் விசேட தார்மீக காரணங்களும் உள்ளன. ஒன்று, மகிந்த ஆட்சியில், அவர் வடக்கில் தேர்தலை நடத்தாமல், காலம் தள்ளிக்கொண்டே போன போது, அதை நடத்த வேண்டும் என்று இங்கிருந்து அழுத்தமாக போராடியவர்களில் நான் ஒரு முன்னணியாளன். அடுத்தது, விக்னேஸ்வரன் அவர்களை முதல்வர் வேட்பாளராக போட்டியிட சம்மதிக்க வைத்தவர்களில் நானும் ஒரு முன்னணியாளன்.

அடுத்தது, முதல்வர் விக்னேஸ்வரன், தமிழரசு தலைவர் மாவை, எம்.பி.சிறிதரன் ஆகிய நண்பர்களின் அழைப்பை ஏற்று நான் என் கட்சி பணியாளர்களையும் அழைத்துக்கொண்டு வடக்கு சென்று, ஒரு வாரத்துக்கு மேல் முகாமிட்டு கிளிநொச்சி, யாழ், வன்னி மாவட்டங்களில், கூட்டமைப்பின் வெற்றிக்காக வடமாகாணசபை தேர்தல் பிரசாரத்தில் கடுமையாக ஈடுபட்டேன். இவை இன்று பலருக்கு மறந்து விட்டாலும், அவை அசைக்க முடியாத உண்மைகளாகும்.

குறிப்பாக, இன்று சர்ச்சையில் இருக்கின்ற கல்வி அமைச்சர் த.குருகுலராசா மற்றும் அவருடன் சேர்ந்து போட்டியிட இன்னும் இரண்டு உறுப்பினர்களின் வெற்றிகளை கிளிநொச்சியில் உறுதிப்படுத்துவதில் எங்கள் பிரசாரம் பாரிய பங்கை வகித்தது.

அந்நேரம் என்னை இன்முகத்துடன் கையெடுத்து வணங்கி கூட்டங்களுக்கு



அழைத்து போன அமைச்சர் த.குருகுலராசா, தேர்தலுக்கு பிறகு இடைநாட்களில் கிளிநொச்சி மற்றும் வடக்குக்கு நான் சென்ற போது என்னை யார் என்றே தெரியாதவர் போல் நடந்துக்கொண்டார். வடமாகாணசபை பாடசாலைகள் விவகாரங்களில் தொடர்பில், நான் அவருக்கு அனுப்பி வைத்த, என்னை நாடி வந்து உதவி கோரிய வடக்கில் வாழும் ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பலரின் கோரிக்கைக் கடிதங்களையும் புறக்கணித்தார்.

எனினும் நான் தேர்தல் காலங்களில் அங்கே போனது அவரை அறிந்து அல்ல. மாறாக என் நண்பர் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் அழைப்பை ஏற்றே. மேலும் நீண்டகாலமாக சொல்லொணா துன்பங்களில் உழன்ற வடக்கு வாழ் உடன்பிறப்புகளின் வாழ்வுகளில் உண்மையான வசந்தம் வீச வேண்டும் என்ற ஆதங்கத்தின் காரணமாகவே என்பதை கூறியாக வேண்டும்.

ஆகவே இது பற்றி பேச எனது அமைச்சு அதிகார உரிமையைவிட தார்மீக உரிமையே அதிகமாக இருக்கின்றது என்பதை வட மாகாணசபை அறிந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# கவிஞர் நாகேஸ்வரனின் கவிதை நூல் வெளியீடு

கவிஞரும் தமிழாசிரியருமாகிய சாவகச்சேரியூர் த.நாகேஸ்வரன் எழுதிய இயக்கனல் என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 22ஆம்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் சங்கத்தானையில் உள்ள கம்பன் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்க் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி இலக்கிய அணி அமைப்பாளர் அ.வாசுதேவா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவார். தெ.திருவேரகன் கடவுள் வாழ்த்து இசைப்பார். திருக்கணித பதிப்பக முகாமையாளர் சமூகஜோதி கா.சிவஞானசுந்தரம் வரவேற்புரை ஆற்றுவார். ஆசியுரைகளை கம்பவாரிதி இ.ஜெயராஜ், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரைகளை வலம்புரி பத்திரிகை பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன், பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன் ஆகியோர் வழங்குவர்.

நூலின்வெளியீட்டுரையை சாவகச்சேரி ட்ரிபேர்க் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் க.அருந்தவபாலன் ஆற்றுவார். நயப்புரைகளை செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், பேராசிரியர் தி.வேல்நம்பி ஆகியோர் ஆற்றுவர். (இ-29)

# கருவி நிறுவனத்தின் ஆண்டு விழா

மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையமான கருவி நிறுவனத்தின் ஆண்டு விழா நாளை மறுதினம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இல. 345, கோவில் வீதியிலுள்ள துர்க்கா தேவி மணிமண்டபத்தில்இடம்பெறும்.

க.தர்மசேகரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி, யாழ்.மாநகரசபை, சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பொ. ஜெசிதரன், கௌரவ விருந்தினர்களாக யாழ். வையகல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் த. சிவகுமார், கருவி நிறுவனவளவாளர் வைகனகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# 'குரலற்றவரின் குரல்' நூலின் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கியக்குவியத்தின் ஏற்பாட்டில் கோமகன் எழுதிய "குரலற்றவரின் குரல்" என்ற நூலின் அறிமுக நிகழ்வு 159/A, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள I- Lead நிறுவன வளாகத்தில் (ஈச்சமோட்டை உப தபாலகத்திற்கு முன்பாக) நாளை மறுதினம் 11ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு வேலணையூர்- தாஸ் தலைமையில் நடைபெறும்.

நூல் அறிமுகம் மற்றும் மதிப்புரைகளை சத்தியன், தனுஜன் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

அத்துடன் நூல் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும் (இ-3)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் விரைவாக நடத்தப்பட வேண்டும்

## ஐ.நா.பிரதிநிதிகளிடம் டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் விரைவாக நடத்தப்பட்டு அச்சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய சமுத்திர வலய நாடுகளின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவினருடன் நேற்று முன்தினம் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய தேர்தல் திருத்த யோசனைகள் தொடர்பில் சிறுபான்மை கட்சிகளும் சிறிய கட்சிகளும் சில குறைபாடுகளை சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். ஆகவே புதிய முறையில் தேர்தல் நடத்துவதாக இருந்தால் சிறுபான்மை கட்சிகளுக்கும் சிறிய கட்சிகளுக்கும் இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணப்பட்டே தேர்தல் நடத்தப்பட வேண்டும். அது உடனடியாக சாத்தியமில்லாவிட்டால் பழைய முறைமையிலாவது உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும்.

பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதும், அதன் பின்னர் இனங்களுக்கிடையே நம்பிக்கையையும், ஐக்கியத்தையும் வளர்த்தெடுப்பதற்கு ஏற்றவகையில் தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை. எதிர்காலத்திலாவது நல்லிணக்கச் செயற்பாடுகள் அர்த்தமுள்ள வகையில் சகல இனங்களுக்குள்ளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஒருவேளை புதிய அரசியலமைப்பு 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து கட்டங்கட்டமாக முன்னோக்கிச்செல்ல வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அவ்வாறு நடைமுறைப்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே அரசியலமைப்பில் அது இலங்கை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது டன், பெரும்பான்மை மக்கள் அதன் பலாபலன்களை அனுபவித்து வருகின்றார்கள்.

ஒருவேளை புதிய அரசியலமைப்பு 13ஆவது திருத்தத்தை விடவும் மேம்பட்டதாகவும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாகவும் அமையுமானால் அதை நாம் வரவேற்புடன் சாத்தியமான வகையில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் தயாராகவே இருக்கின்றோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தொடர்வதாலோ, இல்லாமல் செய்வதாலோ எமக்குப் பிரச்சினை இல்லை. அதேவேளை அரசியல் தீர்வொன்றுக்காக நடைமுறைச்சாத்தியமான அதாவது "அழுதும்பிள்ளையை அவளே பெற வேண்டும்" என்ற வகையில் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்வதில் தமிழர் தரப்பு நேர்மையோடு முயற்சிக்க வேண்டும்.

இவ்விடயத்தில் சர்வதேச சமூகம் உதவியாகவும், ஒத்தாசையாகவும் ஒரு மருத்துவிச்சியின் பணியைச் செய்ய முடியும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்றும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். (இ-3)

# பொதி கண்டெடுப்பு

கோப்பாய் இராஜ வீதியில் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளடங்கிய பொதி ஒன்று தேசிய கல்வியியற் கல்லூரி மாணவனால் நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் இராஜ வீதி, நான்கு சந்திக்கும், தேசிய கல்வியியற் கல்லூரி வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு பொதியொன்று வீழ்ந்து கிடந்துள்ளது.

அதனுள் எம். பிரதீபன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அதனுடன் இணைந்த பத்திரங்கள், 400 ரூபாய் பணம், ஒரு காற்சட்டை, சேட், தலைக்கவசம் ஒன்றும் உள்ளது. குறித்த பகுதியில் தவறவிட்டவர்கள் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் தொடர்பு கொண்டு அந்த உடமைகளை பெற்றுக்கொள்ள முடியும் என கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலை உற்பத்திக்கு 2020ல் முற்றாகத் தடை

## சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

புகையிலை உற்பத்தி எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் முற்றாகத் தடை செய்யப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஐ.தே.க. உறுப்பினர் புத்திக பத்திரண வினால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர்,

"இலங்கையில் தற்போது 30 ஆயிரம் பேர் புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாற்றுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் தற்போது 2200 ஏக்கரில் புகையிலை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவு விவசாயிகள் புகையிலை செய்கையை நம்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிலியந்தலையில் துப்பாக்கிச்சூடு! நிதியுதவி செய்த இருவர் கைது

பிலியந்தலையில் கடந்த மாதம் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோக சம்பவத்திற்கு நிதியுதவி வழங்கிய குற்றச்சாட்டின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்கள் 27 மற்றும் 34 வயதுடையவர்களெனவும் தர்கா நகரில் வைத்தே குறித்த இருவரையும் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலையில் கடந்த மே மாதம் 9 ஆம் திகதி போதைப்பொருள் சுற்றிவளைப்பொன்றுக்குச் சென்ற பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் சிறப்பு விசாரணையாளர் பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் உயிரிழந்த நிலையில் 4 பேர் காயமடைந்திருந்தனர்.

இதேவேளை, இச் சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்கள் ஏற்கனவே பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

- பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7401
- பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ பொறியியலாளர் அவுஸ்ரேலியா<br>தொ.இ: B/7402
- பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா: 35சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ QS கட்டார்<br>தொ.இ: B/7403
- பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 24சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 164cm<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR<br>தொ.இ: B/7404

### இவர்களுக்கு மணமகன் தேவை

- பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: PHD/நோர்வே<br>தொ.இ: G/7405
- பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7414
- பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா:33செவ் 1 இல்<br>உயரம்: 5'தகைமை/ தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/7415
- பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா: 28சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.COM/ஆசிரிய உதவியாளர் கனடா<br>தொ.இ: G/7420

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# பருத்தித்துறையில் மிகப்பெரிய மீன்பிடித் துறைமுகம்- அமரவீர

இலங்கையின் மிகப் பெரிய மீன்பிடித் துறைமுகம் பருத்தித்துறையில் அமைக்கப்படவுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைக் கூறினார்.

"வடக்கில் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பேசாலையிலும் பருத்தித்துறையிலும் இரண்டு மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும். இந்த திட்டத்துக்கான நிதியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியில் 40 சதவீதம் வடக்கில் இருந்தே பெறப்பட்டது. போர் நிலவிய 1983 இற்கும் 2009இற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தப் பங்களிப்பு 4 வீதமாக குறைவடைந்தது. தற்போது, இது 12 வீதமாக உள்ளது. இது திருப்தியான நிலை அல்ல.

வடக்கில் உள்ள மீனவர்கள் இன்னமும் பாரம்பரிய மீன்பிடி முறைகளையே பயன்படுத்துகின்றனர். அவர்களின் படகுகள் மிகப் பழைமையானவை. தென்பகுதியுடன் ஒப்பிடும் போது வடக்கில் மீன்பிடி 20-30 ஆண்டுகள் பின்தங்கியுள்ளது. தற்போது நவீன தொழில்நுட்ப முறைமைக்கு மாற்றி வருகிறோம்.

அண்மையில் மொரட்டுவ பல்கலைக்கழகம் பருத்தித்துறையில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான சாத்திய ஆய்வை மேற்கொண்டது.

பருத்தித்துறை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கு உள்ளூர் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும், நான் அங்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன். இந்தத் திட்டம் தொடர்பான அவர்களின் கரிசனைகள் தீர்த்து வைக்கப்படும்.

எமது அதிகாரிகள் கடற்றொழில் அமைப்புகளுடன் பேச்சு நடத்தியுள்ளனர். இப்போது பலர் இந்த திட்டத்தை ஆதரிக்கின்றனர். இந்த திட்டத்துக்காக தனியார் நிலங்



களை நாம் சுவீகரித்தால், அதற்கான இழப்பீடு வழங்கப்படும்.

மீன்பிடித் துறைமுகம் கட்டப்படுவதால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெருமளவு வேலைவாய்ப்பு கிடைக்கும். தெற்கில் இருந்து யாரையும் அங்கு வேலைக்கு அமர்த்தும் திட்டம் எம்மிடம் இல்லை. இந்த முயற்சியால் வடக்கில் உள்ள மக்களே பயனடைவார்கள்.

கடல்வள கைத்தொழில் பூங்கா ஒன்று மன்னாரில் உருவாக்கப்படவுள்ளது. 3000 ஏக்கரில் உருவாக்கப்படும் இந்தப் பூங்காவினால் 10 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இயற்கை அனர்த்தம்; கூட்டு எதிரணியின் குற்றச்சாட்டு அரசாங்கத்தால் நிராகரிப்பு



(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் சரியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை என கூட்டு எதிர்க்கட்சியினர் சுமத்தும் குற்றச்சாட்டை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது.

அம்பாந்தோட்டை, அங்குனு கொலபலஸ்ஸ பலமி போறுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீரை வழங்குவதற்காக நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாச உரையாற்றினார். இதன் போது கருத்துத் தெரிவித்த அவர், இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அனைத்து மதிப்பீட்டு நடவடிக்கைகளும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

சமகால நல்லாட்சி அரசாங்கம் எந்தவித நிதி மோசடியையும் மேற்கொள்ளவில்லை. பொதுமக்களுக்காக விநியோகிக்கப்படும் நிவாரணங்கள் மூலம் முறையற்ற அரசியல் நன்மையைப் பெற்றுக் கொள்வதற்கு நல்லாட்சி அரசாங்கம் செயற்படாது என்றும் அமைச்சர் கூறினார்.

நிவாரணம் வழங்கப்பட வேண்டிய தரப்பினருக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக அரசாங்கம் நிதியொதுக்கீடு செய்துள்ளது என்று குறிப்பிட்ட அமைச்சர், வெளிநாட்டு நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதில் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

# மூன்று வாழைப்பழத்திற்கும் எனக்கும் தொடர்பு இல்லை

## அமைச்சர் கயந்த மறுப்பு

பொதி செய்யப்பட்ட மூன்று வாழைப்பழத்திற்கும் தனக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. அதில் எனது படத்தை திட்டமிட்டு ஒட்டி போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தத்திற்குள் சில மோசமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மூன்று வாழைப் பழத்திற்கும் எனக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. போலியான பிரசாரத்திற்காக எனது பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு உண்மையான நிலை தெரியும்.

எனவேதான் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கோரினேன். சம்பந்தப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தில் உள்ளவர்களை குறிவைத்து இவ்வாறான போலி பிரசாரங்களை முன்னெடுப்பது அவர்களின் பணியாக உள்ளது. முக்கியமான குடும்பத்தின் புதல்வரே இதனை செய்துள்ளார்.

இதற்கென மத்திய நிலையம் ஒன்றும் வைத்துள்ளார். முகநூல் ஊடாகவும் ஏனைய சமூக வலைத்தளங்களூடாகவும் அமைச்சர்களுக்கு எதிராகவும் அரசாங்கத்திற்கு எதிராகவும் போலிப்பிரசாரங்களை பரப்புவது இவர்களின் பணியாக உள்ளது. இது மிகவும் மோசமான நிலையாகும் எனவும் அவர் கூறினார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 கோடியே 91 இலட்சத்து 56 ஆயிரம் ரூபா நிதி

# 10 ஆயிரத்து 270 விவசாயிகளின் நெற்செய்கை பாதிப்பிற்கு பகிர்ந்தளிப்பு

## வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு



வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட எட்டு கமநல சேவைகள் நிலையங்களின் கீழ் கடந்த 2016 - 2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையின் போது காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்பட்ட வரட்சியினால் குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்தமையால் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் மற்றும் நீர் பற்றாக்குறை காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் நெற் செய்கை மேற்கொள்ளாத 10 ஆயிரத்து 270 விவசாயிகளின் 28 ஆயிரத்து 804.225, ஏக்கர் வரட்சி பாதிப்புக்கு 24 கோடியே 91 இலட்சத்து 56 ஆயிரத்து 546 ரூபா பணம் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகள் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இராஜரட்ணம் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 8 கமநல சேவைகள் நிலையங்களின் கீழ் கடந்த ஆண்டு காலபோக நெற் செய்கையை மேற்கொண்ட நிலையில் வரட்சியினால் பயிரழிவிற்குட்பட்ட 6 ஆயிரத்து 154 விவசாயிகளின் 17 ஆயிரத்து 866.25 ஏக்கர் நெற் பயிரழிவிற்கு தலா ஒரு ஏக்கருக்கு 8 ஆயிரத்து 650 ரூபா வீதம் மொத்தம் 15 கோடியே 45 இலட்சத்து 43 ஆயிரத்து 63 ரூபா பணம் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கு இலக்கம் ஊடாக பகீர்தளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வரட்சி காரணமாக நெற் செய்கை மேற்கொள்ள முடியாது போன விவசாயிகளின் நலன் கருதி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இழப்பீட்டை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இதற்கமைய எட்டு, கமநல சேவைகள் நிலையங்களின் கீழ் 4 ஆயிரத்து 116 விவசாயிகளின் 10 ஆயிரத்து 937.975 ஏக்கர் காணிக்கு தலா ஒரு ஏக்கருக்கு 8 ஆயிரத்து 650 ரூபா வீதம் மொத்தம் 9 கோடியே 46 இலட்சத்து 13 ஆயிரத்து 484 ரூபா பணம் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகள் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (2-15)

## மு/வித்தியானந்த கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

(முல்லைத்தீவு)

மு.வித்தியானந்தக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மு.வித்தியானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

ஆதலால் அனைத்துப் பழைய மாணவர்களையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (2)




# வன்னிவிளான்குளம் அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் இன்று

## ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

(முல்லைத்தீவு)

வரலாற்றுச் சிறப்புமிக்க வன்னி விளான்குளம் அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் விசேட அபிஷேக அலங்கார பூஜைகள் என்பன நடைபெற்று, இரவு 09 மணிக்கு மடைப் பண்டம் எடுக்கும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து பொங்கல் நிகழ்வும் நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையின் தலைவர் பொ.பிரதாபன் தெரிவித்துள்ளார்.

இந்த திருவிழா நிகழ்வுகளின் போது, பக்த அடியார்களின் நலன் சார்ந்த விடயங்களை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையிலும், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இரண்டு பிரதேச செயலக பிரிவுகளின் செயலாளர்கள் உள்ளிட்ட வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட விழா ஏற்பாட்டாளர்கள் அடங்கிய அணியினர் நெறிப்படுத்துவர்.

இதன்போது, போக்குவரத்து சேவைகளை வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சின் கீழ் உள்ள அரச மற்றும் தனியார் துறையினர் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் இருந்தும் முன்னெடுத்துள்ளனர்.

பாதுகாப்பு கடமைகளை, மாங்குளம், மல்லாவி ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் தலைமையிலான பொலிஸாருடன் இணைந்து , மல்லாவி பகுதியில் உள்ள முன்னணி பாடசாலைகளின் சாரணிய மாணவர்களும் கடமையாற்றவுள்ளனர்.

சுகாதாரம், மருத்துவ வசதிகள் என்பனவற்றை மல்லாவி பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பணிமனையினரும், குடிநீர் வசதி மற்றும் ஏனைய பராமரிப்புப் பணிகளை துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இரண்டு பிரதேச சபையினரும் மேற்கொள்ளவுள்ளதாக ஆலய பரிபாலன அறங்காவலர் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (2-15)

# வவுனியாவில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரினுள் பிளாஸ்ரிக் துண்டுகள்

வவுனியா நகரில் விற்பனை நிலையமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட அடைக்கப்பட்ட குடிநீர் போத்தலினுள் பிளாஸ்ரிக் துண்டுகள் காணப்பட்டதாக நுகர்வோர் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து வவுனியாவில் குடிநீர் போத்தலினுள் பிளாஸ்ரிக் துண்டுகள் மீட்கப்பட்டுள்ளமை தொடர்பில் வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகர் அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வவுனியா நகரில் விற்பனை நிலையமொன்றில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள குடிநீர் போத்தலினுள் இந்த பிளாஸ்ரிக் துண்டுகள் இருந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

அதனை கொள்வனவு செய்த நுகர்வோர் குறித்த நிறுவனத்திற்கு இது தொடர்பில் தொலைபேசி ஊடாக அழைப்பு விடுத்து அறிவித்த போது, தன்னை அந்த நிறுவனத்தின் பிரதானியொருவர் திட்டியதாக குறித்த நுகர்வோர் தெரிவித்துள்ளார்.

எனினும் சம்பவம் தொடர்பில் எழுத்தும் மூலம் முறைப்பாடு செய்யுமாறு வவுனியா பொதுச் சுகாதார பரிசோதனை அலுவலகம், பிரஸ்தாப நபருக்கு அறிவித்துள்ளது.

இதனுடன் அந்த குடிநீர் போத்தலை விற்பனை செய்த வர்த்தக நிலையம் மற்றும் அந்த குடிநீர் போத்தலையும் முன்னிலைப் படுத்துமாறு அவருக்கு மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

## முழுமதி நோன்பு தினத்தை முன்னிட்டு

# கர்ப்பவதிகளுக்கு போசாக்கு உலருணவுப்பொதிகள் வழங்கல்

துணுக்காய் ஆலங்குளம் பகுதியில் அமைந்துள்ள 65 ஆவது இராணுவ படைப் பிரிவின் ஏற்பாட்டில் "முழும்தி நோன்பு தினத்தை முன்னிட்டு" மல்லாவி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் உள்ள 40 கர்ப்பவதிகளுக்கு போசாக்கு உலர் உணவு பொதிகள், சுகாதாரப் பொருட்களைக் கொண்ட பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாவி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றுள்ளது. இதன்போது, 65 ஆவது இராணுவ படைப்பிரிவின் மல்லாவி பிரதேச இராணுத் தளபதி மேஜர் ஜெனரல் ஜே.ஜெயவர்த்தனா, துணுக்காய் பிரதேச செயலாளர் இ. பிரதாபன், மல்லாவி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அதிகாரிகள், 65ஆவது இராணுவ படைப்பிரிவின் காலாட்படை பிரிவின் கட்டளை அதிகாரி, 65 ஆவது படைப் பிரிவின் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்துள்ளனர். (2-15)

# விசுவமடு பொதுச்சந்தை வளாகத்தினுள் நவீன வசதிகளுடன் மலசலகூடம் அமைக்கப்படும்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீடான 1,54 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள விசுவமடு பொதுச் சந்தை வளாகத்தில் பொதுமக்கள், வர்த்தகர்கள் ஆகியோரின் நலன் கருதி நவீன வசதிகளுடன் கூடிய பொது மலசலகூடம் அமைக்கப்பட்டவுள்ளதுடன், சந்தை வளாகத்தினுள் கிரவல் மண் இட்டு செப்பனிடும் வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் பாஸ்கரமூர்த்தி - சிவபாலராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையின் நடப்பாண்டுக்குரிய நிதி ஒதுக்கீடான 1.54 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் விசுவமடு பொதுச் சந்தை வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய மலசலகூடமும் மற்றும் சந்தை வளாகத்தில் கிரவல் மண் இட்டு செப்பனிடும் வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 60 நாட்களுக்குள் முடிவுறுத்தப்பட்டு பொது மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது.

எனவே சந்தை வளாகத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் நடைபெறவுள்ள வேலைகள் தொடர்பில் கண்காணிப்பு செய்வதுடன், வேலைகளில் ஏதும் குறைபாடுகள் காணப்படின் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ [illegible] அறியத் தருமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கிளிநொச்சி படையினரின் ஏற்பாட்டில் குறைந்த வருமானத்தை கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த நூறு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, மல்லாவி, பூநகரி, விசுவமடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புத்தகப்பை, பயிற்சி கொப்பிகள், தண்ணீர்ப் போத்தல் என்பவற்றோடு காலணி கொள்வனவு செய்வதற்கு ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி இரணைமடு தாமரைத் தடாக மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவன, பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பிரதான பேருந்து நிலையத்தில் தனியார் மற்றும் இ.போ.சபை ஊழியர்களுக்கிடையில் கைகலப்பு





(குருமன்காடு)

வவுனியா பிரதான பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்களுக்கும் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கும் இடையில் நேர முகாமைத்துவத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இருதரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறிய சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியா புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டும் அது பயன்பாடின்றி மூடப்பட்டுள்ள நிலையில், பழைய பிரதான பேருந்து நிலையத்தில் இருந்து இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளும் முதலாம் குறுக்கு தெரு உட்பட ஐந்து இடங்களில் இருந்து தனியார்பேருந்துகளும்சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இந் நிலையில் நேற்று முற்பகல் சுமார் 10.30 மணியளவில் தனியார் பேருந்துகளும் இ.போ.சபை பேருந்துகளும் பயணிகளை ஏற்றிய நிலையில், நேர முகாமைத்துவத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இரு தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது.



இதன்போது இ.போ.ச ஊழியர்களே தமது பேருந்தின் நடத்துநர் மீது முதலில் தாக்குதல் நடத்தியதாக தனியார் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் குற்றம் சாட்டும் நிலையில், தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் தமது நேர கண்காணிப்பு அலுவலகத்திற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதாக இ.போ.ச. ஊழியர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந் நிலையில் இரு தரப்பினரும் மோதிக்கொண்ட நிலையில் பொலிஸார் தலையிட்டு மோதலை தடுத்திருந்த போதிலும் இரு தரப்பிலும் தாம் தாக்கப்பட்டதாக இருவர் வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸார் முறைப்பாடுகளை பதிவு செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதேவேளை இணைந்த நேர அட்டவணை வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினால் முன்வைக்கப்படாத நிலையில் புதிய பேருந்து நிலையம் திறக்கப்படாது காணப்பட்டு வருகின்றது.

சுமார் 195 மில்லியன் ரூபா பெறுமதியில் கட்டப்பட்ட இப்பேருந்து நிலையம் மக்கள் பயன்பாடு இல்லாமல் காணப்படும் நிலையில் இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்களுக்கிடையில் தொடர்ச்சியாக கைகலப்பு ஏற்பட்டு வருகின்றமை வவுனியா வாழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (2-250)




## செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலாளர் நியமிக்கப்பட வேண்டும் மக்கள் கோரிக்கை

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலாளர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

செட்டிகுளம் பிரதேச செயலாளராக பணியாற்றியவர் பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் உதவி பிரதேச செயலாளரே தற்போது பிரதேச செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.

இந் நிலையில் நீண்ட காலமாக பிரதேச செயலாளரின்றி செயற்படும் செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு நிரந்தரமாக பிரதேச செயலாளர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்பதுடன் அப்பகுதி மக்களின் தேவைகளை பூரணப்படுத்த உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்எனவும்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)

## மரக்காலையில் திருட்டில் ஈடுபட்ட நபர்கள் சி.சி.ரி.வி.கமராவில் சிக்கினர்

(குருமன்காடு)

வவுனியாவில் மரக்காலையில் திருட்டில் ஈடுபட்ட இருவர் சி.சி.ரி.வி.கமராவில் சிக்கி வவுனியா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, கந்தசுவாமி கோவில் வீதியிலுள்ள மரக்காலை ஒன்றில் கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை திருட்டில் ஈடுபட்ட இருவர் வவுனியா பொலிஸாரால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

குறித்த மரக்காலையில் வேலைசெய்த இருவர் உரிமையாளர் வெளியில் சென்ற தருணம் பார்த்து பணம் வைக்கும் பெட்டகத்தை உடைத்து ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் பணத்தை திருடியுள்ளனர். உரிமையாளர் மீண்டும் வந்து பார்த்த போது பெட்டகம் உடைக்கப்பட்டிருந்தது.

இவ் விடயம் தொடர்பாக செவ்வாய்க்கிழமை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத்தொடர்ந்து குறித்த மரக்காலையில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவை பரிசீலித்த பொலிஸார் அங்கு பணி புரியும் இருவரை இச்சம்பவம் தொடர்பில் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்களிடம் ஒரு தொகைப் பணம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. குறித்த இருவரையும் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (2-250)

## சந்தை வளாகத்தினுள் வாகன பாதுகாப்பு நிலையம் அமைக்கப்படாமையால் துவிச்சக்கரவண்டிகள் திருட்டு

### சி.சி.ரி.வி. கமராக்கள் இருந்தும் பயனில்லை; பாதிக்கப்பட்ட பொது மக்கள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு வருகை தரும் பொதுமக்கள் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு வாகன் பாதுகாப்பு நிலையம் இதுவரை அமைக்கப்படாமையினால் தாம் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகுவதுடன் அண்மைக்காலமாக வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்படும் துவச்சக்கர வண்டிகள் களவாடப்படுவதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சி பொது சந்தை வளாகத்தைச்சுற்றிநான்கு பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நான்கு பாதைகளிலும் நான்கு பேர் நின்று சந்தை வளாகத்தில்இருந்து வெளியே செல்லும் மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள், முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு பணம் எனக் கூறி மறித்து மக்களிடம் பணம் அறவிடுகின்றனர்.

ஆனால் சந்தை வளாகத்தினுள் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்படாமையினால் யாருடைய வாகனங்கள், துவிச்சக்கர வண்டிகள் எனத் தெரியாமல் அவற்றைக் கொண்டு வரும் நபர்களிடம் பணத்தை அறவிட்டு வெளியேறுகின்றனர்.

இதேவேளை மேற்படி சந்தை வளாகத்தினுள் 16 சி.சி.ரி.வி. கமராக்கள் கரைச்சி பிரதேச சபையினரால் அண்மையில் பொருத்தப்பட்ட நிலையில் 7 சி.சி.ரி.வி. கமராக்கள் மட்டுமே தற்போது இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 100 இற்கு மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள் சந்தை வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் களவு போயுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பில் பல முறை எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வியாபாரிகள், பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஆகையால் துவிச் சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமொன்றை அமைக்குமாறு வியாபாரிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-271)

## சுதந்திர பூங்கா திறந்து வைப்பு



வவுனியா ஏ-9 வீதி இரட்டை பெரியகுளத்தில் நேற்று சுதந்திர பூங்கா பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், ஜெயதிலக்க, முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.பி.நடராஜா, வவுனியா மன்னார் பிரதி பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன், [illegible] மற்றும் பொதுமக்கள்என பலரும்கலந்துகொண்டிருந்தனர். (2-250)

## பிரதான பேருந்து நிலைய கைகலப்பில் இருவர் காயம்

### வவுனியாவில் சம்பவம்



(குருமன்காடு)

வவுனியா பிரதான பேருந்து நிலையத்தில் இ.போ.சபை மற்றும் தனியார் பேருந்து ஊழியர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் இருவர் காயம் அடைந்தனர்.

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நேற்றுக் முற்பகல் 10.15 மணியளவில் தனியார் மற்றும் இ.போ. சபை ஊழியர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இருவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, முதலாம் குறுக்கு வீதியில் நின்ற தனியார் பேருந்தில் பயணிகளை ஏற்றுவதற்கும் வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நின்ற இ.போ.சபை பேருந்தில் பயணிகளை ஏற்றுவதிலும் ஏற்பட்ட போட்டி நிலை காரணமாக இரு தரப் பினருக்கும் இடையில் பிரதான பேருந்து நிலையத்தில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியது.

இதானல் இ.போ.சபை ஊழியர் ஒருவரும், தனியார் பேருந்து ஊழியர் ஒருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் நிலைமைகளைக் கட்டுப்படுத்தியதுடன் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதம் இரு பகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாக 195 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் இயங்காமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பழந்தமிழர் வேளாண்மையும் பசுமைப் புரட்சியும்



"தினமும் எழும் சூரியனே
உன்னையார் எழுப்புகிறார்?...
துணைஇல்லாத நிலவே
யாருக்காக தினமும் காத்திருக் கின்றாய்?...
வானமே! உனக்கு என்ன அவ் வளவு சோகம்!
மழையாய் கண்ணீரை ஏன் வடிக்கின்றாய்?...
வானவில்லே.!
ஏழு வண்ணத்தில் யாருக்காக
பாதை அமைத்து வரவேற் கின்றாய்?...
எல்லாம் மனிதனுக்காகவா?
அவ்வாறெனின்...
அந்த மனிதன் நீங்கள் அனை வரும் செய்த நன்றியை மறந்த தேனோ? ..."

"தன் வினை தன்னைச்சுடும்" என்ற பழமொழியே இன்றைய நம் வாழ்க்கைக்கு மிகவும் பொருத்த மாகி விட்டது. ஏனெனில் இன்றைய காலத்தில் எம் நிலைகூட யானை தன் தலையில் தானே மண் அள்ளி இடும் நிலையாகிவிட்டது. பசுமை யான இப் பூமியை எம் முயற்சி களால் பசுமையின்றி மாற்றியுள் ளோம். இன்று பசுமைப்புரட்சி என்பது கூட எம் நலத்திற்காகவே மேற்கொள்ளப்படுகின்றதோ? என எண்ண வைக்கின்றது. மீண்டும் பூமியை புத்துயிர்பெறச் செய்ய எம் மால் முடியும் என்பதில் எவ்வித சந் தேகமும் இல்லை. ஆனால் எம் அதீத அறிவு வளர்ச்சி காரணமாக சுய நலமே எம் மனதில் குடிகொண் டுள்ளது.

ஆதிகால மனிதன் இயற்கையில் இறைவனைக் கண்டான். இத னால் இயற்கையுடன் இணைந்து இன்பமாக வாழ்ந்தான். விஞ்ஞா னத்தில் வளர்ச்சி பெறாத அக்கால மனிதன் வாழ்ந்த காலத்தில் வனாங் களோ அதில் உறையும் மரங்களோ அழிக்கப்படவில்லை. இதனால் வனாங் களில் வாழ்ந்த சகல உயிரினங்க ளும் மகிழ்ச்சியுடன் தம் வாழ்வைக் கழித்து வந்தன. இன்றைய கால மனி தனோ தன்னைச் சுமக்கும் பூமித் தாயின் மடியாகவும் பறவைகள், மிருகங்களினதும் சிறிய குருவிக ளினதும் உறைவிடமாகவும் விளங் கிய வனாங்களில் தன் நன்மைக்காக வசதியான மாடி வீடுகளை அமைத்து அந்த அப்பாவி உயிர்களின் சாபங் களை பெற்றான்.

இன்றைய உலகத்தில் சனத் தொகை அதிகரிப்பு. காரணமாக அனைத்துச் செயற்பாடுகளும் நகர மயமாக்கலுக்கு உட்பட்டு நவநாக ரிக உலகம் கட்டியெழுப்பப்பட்டு விட்டது. இதனால் மனிதனைப் புனிதனாக்கிய மனிதநேயம் மடிந்து. விட்டது. இத்தகைய மனித மனாங் களின் பசுமையின்மையாலே இன்று பல விபரீத விளைவுகளை அனைத்து உயிர்களும் சந்திக்க நேரிடுகின்றது.



"கிளி வளர்த்தேன் பறந்து விட்டது, அணில் வளர்த்தேன் ஓடிவிட்டது. மரம் வளர்த்தேன் இரண்டும் திரும்பி வந்துவிட்டன" என்றார் மாபெரும் விஞ்ஞானியான அப்துல் கலாம். அத்தகைய சிறப்பு மிக்க மரங்களை அன்று வேட்டையாடலை குறைத்து வேளாண்மையில் ஈடு பட்டு வளர்த்த மனிதன் இன்று வேண்டாம் என மரங்களை மடிய வைப்பது தகுமா? ஆறறிவு படைத்த மனிதன் தன் வளமானஅறிவைப் பயன்படுத்தி பூமியை வளப்படுத்த முடி யாமல் வளமான பூமியை வளமின்றி மாற்றலாமா? மனிதனின் சிந்தனை யின் விளைவு இவ்வாறிருந்தால் இல்லாமல் செய்தோம். சிட்டுக் குருவிகளின் அழகிய சிறகுகளை மண்ணிற்கு இரையாக்கினோம். இவ்வாறு நாம் இப் புவியில் பல வற்றை இல்லாது செய்தோம். இது முறைதானா? இறைவன் தந்த இயற்கையினை அழித்து வாழ நினைத்தல் மனிதனின் பண்பாக உள்ளது. இவ்வாறு எம்மை மடி யினில் சுமப்பவள் மடியினை ஏன் நாமேவருத்தவேண்டும் இயற்கையை செயற்கையாக மாற்ற யோசிக்கும் நாம் ஏன் இயற்கையை நேசித்து அதனைச் சொர்க்கமாக மாற்றக் கூடாது மகிழ்வுடன் இவ் வாழ் வில் பசுமையான பூமி பாழ்பட்ட பூமியாக மாறிவிடாதா?

அன்று வாழ்ந்த பழந்தமிழ் மனிதன் வேட்டையாடலில் தனது கவனத்தை குறைத்து வேளாண்மை யில் தன் பார்வையை திசைதிருப்பி இயற்கையை மேலும் ரம்மியம் பெறச் செய்தான். இதனால் பூமி மேலும் பசுமையானது. இதன் பலனாக இயற்கையும் மனிதனுக்கு தேவையான அனைத்து வளங் களையும் குறைவின்றி நிறைவாக வழங்கியது. பூமியின் வரப்பிரசாத மாக விளங்கும் பசுமையான மரங்கள் பலவும் பல்கிப்பெருகின. எனவே அன்று பசுமைப்புரட்சி என்ற ஒன்றே தேவையானதாக காணப்படவில்லை.

இன்று பூமியானது பற்பல சவால் களை எதிர்கொண்டு வரக் காரணம் மனிதர்களாகிய நாமே ஆவோம். மரங்களை நாட்டி மண்ணைச் செழிப்பாக்க வேண்டிய நாமே இன்று மரங்களை எம் ஆடம்பரத்தேவை களை நிறைவேற்ற அழித்து பழைய வேளாண்மை மனிதனுடைய நிம்மதியான வாழ்வை இழந்து விட்டோம். பாவிகளான நாம் பசுமை நிறைந்த இப்புவியை பாலைவன மாக மாற்றுகின்றோம்.

நறுமணம் மிக்க இதமான தென்றல் காற்றை நச்சுக் காற்றாக்கி னோம். புல்லில் நுழைந்து பூவில் மணந்த தாய்நாட்டு தென்றலில் விஷத்தை தூவினோம். பனை மரக்காடு. பறவைகள் கூடுகளை வாழப்பிறந்த உயிர்கள் எல்லாம் எம்மால் வாழவழியின்றி இறந்தன. அவ் உயிர்களுக்கு மட்டும் ஏன் இந்தசோகம்? இதனை இனியாவது தடுத்து அவையும் இப் பூமியில் எம்மைப் போல் வாழவைப்போம்.

பசுமை நிறைந்திருக்கும் வயல் வெளி எம் பசிதனை போக்குகின் றது. ஆனால் எம் எதிர்கால சந்ததியி னரின் காலத்தில் எம்மால் பசுமை யான வயல்வெளிகள் பாலை வனாங் களாக மாறிவிட முடியும். உரம் எனும் விஷம் இதனால் வானிலை மாறுகின்றது. பல நோய்களால் நாமே வாழ்வது வீணா? எனும் நிலையெனின் எம் எதிர்கால சந்ததி யினரின் நிலையை யோசித்துப் பாருங்கள். அவர்கள் எம்மால் அழிய வழிசெய்வதைவிடுத்து இயற்கைப் பசளைகளைப் பயன் படுத்தி "இது நம் பூமி" என மனதில் கொண்டு வியர்வையில் உழைத்து பசுமையை உலகெங்கும்உருவாக்கு வோம். நாம் அனைவரும் இனி வரும் உயிர்களையாவது ஒன்றுபட்டு



போற்றிக் காப்போம். புதியதொரு விதி செய்து வீதிதோறும் விருட்சங் களை நட்டு எம் பூமியை சொர்க்க பூமியாக மாற்றுவோம் என உறுதி கொள்வோம். மீண்டும் உலகை பச்சையாக மாற்றி எங்கும் பசுமை யான மரங்களை நடுவோம். நம் தேசத்தில் ஒரு பசுமைப்புரட்சி, நாம் ஒன்றாய் சேர்ந்து உழைத்து வெற்றி பெறுவோம். மாற்றம் எம் மனாங் களிலே முதலில் நடைபெற வேண் டும். நம் தாயின் கண்ணீரை நாமே துடைக்க வேண்டும்.

இளைப்பாற பூமி அன்னை எமக்களித்த மரங்களை வெட்டி எம் தாய்க்கு வலிகொடுத்தோம். பூமித் தாய் நாளும் அழிந்து வருவதை நாம் உணர்ந்த பின்பும் அமைதி காப்பதேனோ?

எம் சுகபோகங்களை கூட்ட எம் தாய்க்கு சோகங்களை கொடுக்க வேண்டுமா? எம் தாய் அழுவது ஏன் எமக்கு இன்னும் புரியவில்லை? ஆசையால் ஏன் எம் மனம் மாச டைந்து காணப்படுகின்றது. கண் ணிருந்தும் ஏன் நாம் குருடர்களாக நடந்து கொண்டோம். எப்போது எமக்கு விடிவுகாலம் கிடைக்கும்? எதிர்காலம் சிறக்க எம் பூமியை அழித்தோம். எம் இயற்கை செயற் கையானமை நாம் எம் இன்ப வாழ்க்கையை தொலைக்க கார ணம் என்பதை நாம் இன்னும் ஏன் உணராதுள்ளோம்?

அழிவை நெருங்கிச் செல்லும் எம் பூமியைக் காக்க நாமே போராட வேண்டும். வானம் ஒளிபெற வேண் டும் எனில் நாம் எம் தாயின் மனதைக் குளிர்விக்க வேண்டும். போராடுவோம் எம் பூமியைக் காக்க போராடுவோம். எம் தாய் நோயாளியாவதைத் தடுக்க எம் கைகள் கட்டுண்டு நிற்பதை விடுத்து எம் கைகொண்டு எம் பூமி அன் னையை காப்போம்.

பூக்கள், அடர்ந்த பனித்துளி, மழை என்பவற்றை மகிழ்வுடன் இப் பூமியின் வரமாக ஏற்று அவற்றை புத்துயிர்பெறச் செய்வோம். எம்மால் தொலைந்த வாழ்வை நாமே எம் முயற்சியால் திரும்பப்பெறுவோம். நாம் வாழும் நிலத்தை நிலைபெறச் செய்து நிஜமாக வாழ நாமே முயற் சிக்க வேண்டும். எம் அன்னை யின் அரவணைப்பை பெற வேண்டு மெனில் எம்மைப் போல் பிற உயிர் களையும் நேசித்து வாழ்வோம்.

"மனிதன் மண்ணின் மைந் தன் என்கிறார்கள். ஆனால் உண்மை யில் மண்ணின் மைந்தர்கள் மரங் களே" எனச்சொன்ன கவிக்கோ அப்துல் ரஹ்மான் மனிதன் "பூக்களில் புழுதியையும் கனிகளில் கழி நீரையும் செய்கின்றான்" எனவும் கூறினார். அவரது கூற்று இன்றுவரை உண்மையானதே.

எனவே புரட்சியை ஏற்படுத்த பூமியில் மாற்றம் செய்ய எண்ணும் நாம் முதலில் பசுமையான எண்ணாங் களால் எம் மனதிலே மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். அவ்வாறு செய்தோமானால் பசுமையான பூமி உருவாவது உறுதி. பாவங்களால் நிறைந்த எம்மனம் எம் அன் னைக்காக பசுமையாக மாறட்டும். அப்போதுதான் எம் தாயும் பாசத் துடன் எம்மை அரவணைப்பாள்.

"மாற்றம் செய்து இப் பசிய பூமியில்
மனிதநேயத்தைவாழவைப்போம்
பசுமையானஎண்ணங்களோடு
இறைவன் தந்த பூமியில்
இன்பமாக வாழ்வோம்"

செல்வி நித்தியாயினி
இராஜேஸ்வரன்
A/L 2016- Bio
யா/விக்ரோறியா கல்லூரி.
சுழிபுரம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 186

இலங்கையில் தொழில்நுட்பத்துறைக்கான கல்வியியற் கல்லூரி எங்கே-அமைக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது?

புதிர் 186 இற்கான விடைகளை 19.06.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்-பிரிவு A,
84,கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

### புதிர் 185 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

பா. ஷியாந்
குருந்தடி.
கரணவாய் மத்தி
கரவெட்டி

**புதிர் 185க்கான கேள்வியும் விடையும்:**

உருக்கப்பட்ட சல்பரினை (கந்தகத்தை) மிகவும் தாமதமாக ஒரு வளிமண்டல அமுக்கத்தில் குளிர விட உண்டாகும் முதல் திண்மம் எது?

ஒரு சரிவுக்கந்தகம்

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 186

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற போது.......





காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன வருடாந்த விளையாட்டு விழா கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் சம்மேளனத்தின் உபதலைவர் ஜெ. சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து சிறப்பித்தார். நடத்தப்பட்ட விளையாட்டுக்களின் மொத்த புள்ளிகளின் அடிப்படையில் ஒளிச் சுடர் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தினையும் கலாநிதி விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

(படங்கள் : காரைநகர் செய்தியாளர்)

# சுதந்திரக்கட்சி பசு மாடு; ஐ.தே.கட்சி எருமை மாடு

## கூட்டு எதிரணி கூறுகிறது

(கொழும்பு)

நாட்டில் அரசியலை சுதந்திரக்கட்சி என்ற பசு நிலத்திற்கு இழுத்துச் செல்ல முற்படும் போது ஐக்கிய தேசியக் கட்சி என்ற எருமை மாடு சேற்றில் தள்ளி விடுகின்றது என கூட்டு எதிரணியின் ஒருங்கிணைப்பாளர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மைத்திரி - மகிந்த சந்திப்பு மீண்டும் மகிந்த தரப்புக்கு ஏமாற்றத்தையே தரும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மினுவாங்கொடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டு எதிரணியின் தொகுதி அமைப்பாளர்களை தெரிவு செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மைத்திரி - மகிந்த சந்திப்பு தொடர்பில் தற்போது வரையில் எந்த ஒரு பேச்சுவார்த்தைக்கும் கூட்டு எதிரணி செல்லவில்லை. தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் அமர்ந்திருக்கின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர் வந்து இது பற்றி பேசுவாராயின் அதன் பிறகு மேற்படி விடயம் குறித்து சிந்திக்க முடியும்.

இருப்பினும் மைத்திரி - மகிந்த சந்திப்பு இடம்பெறுவதற்கான சாத்தியம் உள்ளது என்பதை கூறுகின்ற போதே உண்மையாக சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியை வெளியிடுகின்றனர். 2015 ஆம் ஆண்டில் ஏமாற்றம்அடைந்தது போலவே மீண்டும் ஒருமுறை ஏமாற்றும் செயற்பாடாகவே மைத்திரி - மகிந்த சந்திப்பு அமைந்திருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு கட்சியின் தலைமைத்துவத்தை காட்டிக் கொடுத்து விட்டு ஜனாதிபதி பதவியை பறித்துக்கொண்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

அதனால்தான் உண்மையான ஆதரவாளர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் உள்ளார்கள்.

எவ்வாறாயினும்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற ஒரு மிகப்பெரிய கட்சியை ஐக்கிய



தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கே நாங்கள் எதிர்ப்பை வெளியிடுகின்றோம். அதனால் எதிர்க்கட்சியிலிருந்து பேசுவதை தவிர்த்து எதிர்காலம் குறித்து உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

தேசிய அரசாங்கம்அமைத்ததால் சாதித்தது ஒன்றும் இல்லை என்கின்ற போது தற்போதைய அரசாங்கத்தின் இயலாமையும் தற்போது உலக நாடுகளுக்கு தெரிந்துள்ளது. அண்மையில் ஏற்பட்ட பெரும் அனர்த்தத்தின் போதுதான் அது உலகறிந்த விடயமானது. காரணம் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் ஓடிச் சென்று உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள் என்பதை மாத்திரமே அரசாங்கம் செய்தது.

அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் செய்ய வேண்டிய பணிகளை தற்போதைய அரசாங்கம் இன்றுவரையில்செய்யவில்லை என்பதே உண்மையாகும். இதற்கு பொறுப்பேற்பதற்கும் அமைச்சர் ஒருவர் இல்லை அவர் வெள்ளம் வழிந்தோடிய பின்னர் நாட்டிற்கு வந்து போலியான பெருங்கதைகளை கூறிக்கொண்டிருக்கின்றார்.

யுத்தக் குற்றம் இழைத்தார்கள் என்று கூறுகின்ற இராணுவ வீரர்கள் இல்லாவிடின் இதனைவிட பாரிய உயிர் தொகையினை இழக்க நேரிட்டிருக்கும் அதேநேரம் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் அனர்த்தம் ஒன்றுக்கு முகம்கொடுக்க அரசாங்கம் தயார் நிலையில் வாய்க்கால்களை தூய்மைப்படுத்தி வைத்திருந்ததால் விபத்துக்கள் குறைவடைந்தன.

எவ்வாறாயினும் இன்று நாட்டின் அரசியல் சூழல் எருமை மாட்டையும் பசு மாட்டையும் ஒரே கயிற்றில் கட்டி வைத்தது போன்று இருப்பதால் சுதந்திர கட்சி என்ற பசு மாடு நிலத்திற்கு செல்ல முற்படுகின்ற போது ஐக்கிய தேசியக் கட்சி என்ற எருமை மாடு சேற்றினுள் இழுத்துச் சென்று விடுகின்றது. அதனால் தான் அரசியல் நிலையில்லாத் தன்மை நீடிக்கின்றது என தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆமை வேகத்தில் அபிவிருத்திப் பணி

## அனோமா அதிருப்தி

"மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம் பெற்ற யுத்தம் காரணமாக மக்கள் பல்வேறு கஷ்ட நிலைமைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான அபிவிருத்திப் பணிகள் மந்தகதியில் இடம்பெற்று வருவதை, என்னால் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது" என, பெற்றோலிய வளத்துறை பிரதியமைச்சர் அனோமா கமகே தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவிகளை, மக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களுக்கு வழங்கப்படுகின்ற இந்தச் சிறிய உதவிகள் ஊடாக, அவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றங்களைக் காணக் கூடியதாக இருக்கும். நான் இன்று இங்கு வரும் வழிகளில், இப்பிரதேசத்தின் நிலைமைகளை அவதானிக்கக் கூடியதாக இருந் தது.

"இப்பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக, கடந்த ஆண்டிலும் நிதிகள் ஒதுக்கி இருக்கின்றோம். இந்த ஆண்டிலும் நிதிகள் ஒதுக்கியுள்ளோம். அத்துடன், தொடர்ந்தும் அபிவிருத்திப் பணிகளுக்காக நிதிகளை ஒதுக்கி, மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு, முடிந்தளவு பங்களிப்புகளை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பில் மர்மக்குழு

கொழும்பில் வாகனங்களில் கொள்ளையடிக்கும் மாணவ குழுவொன்றை மிரிஹான விசேட குற்ற விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

வாடகை வண்டி சேவை சாரதிகளுக்கு கத்தியை காட்டி அச்சுறுத்தி அவர்களிடம் இருக்கும் தங்க ஆபரணம், கையடக்க தொலைபேசி மற்றும் பணம் கொள்ளையடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பில் பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் இவ்வாறு குழுவாக செயற்பட்டு கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட 6 கையடக்க தொலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சந்தேகநபர்கள் கொள்ளையடித்த பொருட்களின் பெறுமதி சுமார் 6 இலட்சத்திற்கும் அதிகம் என குற்ற விசாரணை பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 17 மற்றும் 18 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் பிலியந்தலை, கிருலப்பனையைச் சேர்ந்தவர்கள் என மிரிஹான விசேட பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்கள் பிலியந்தலை, கடுவெல, பொரலஸ்கமுவ, ராஜகிரிய ஆகிய பிரதேசங்களில் வாடகை சேவை சாரதிகளைபயணத்திற்காகஅழைத்து சென்று பாழடைந்த இடத்தில் கூர்மையான கத்தியை காட்டி அவர்களிடம் உள்ள கையடக்க தொலைபேசி, தங்க நகை மற்றும் பணம் ஆகியவற்றை கொள்ளையடிப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.க. அலுவலகம் மீது பெற்றோல் குண்டு வீச்சு

(திவனந்தபுரம்)

மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி மீது டில்லியில் தாக்குதல் நடத்த இருவர் முயற்சி செய்தனர். இதன் எதிரொலியாக கேரளாவில் உள்ள பா.ஜ.க. மாவட்ட அலுவலகம் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி டில்லியில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று முன் தினம் பத்திரிகையாளர் சந் திப்புக்கு ஏற்பாடு செய்திருந் தார்.

இதற்காக ஏராளமான பத்திரிகையாளர்கள் வந்தி ருந்தனர். கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும்தொண்டர் களும் அலுவலகத்தில் திரண் டிருந்தனர்.

அப்போது, இரண்டு நபர் கள் அத்துமீறி உள்ளே நுழைந்து, எதிர்ப்பு கோஷங் கள் எழுப்பினர். இந்து சேனா வாழ்க, மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் ஒழிக என கோஷ மிட்டதால் அவர்களை கட்சி யினர் தடுத்து நிறுத்தினர்.

அப்போது ஒரு நபர் யெச் சூரியின் அருகில் சென்று அவரை தாக்க முயற்சித் தார். இதையடுத்து இரண்டு நபர்களையும் கட்சியினர் பிடித்து, அடித்து உதைத்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

இதன்எதிரொலியாக, கேரள தலைநகர் திருவனந்தபுரத் தில் உள்ள பா.ஜ.க. மாவட்ட அலுவலகம் மீது நேற்றுக் காலை பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது.

இதில் யாருக்கும் காய மில்லையெனவும்இது தொடர் பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனரென வும் தகவல்கள் வெளியாகி யுள்ளன. (இ-3)

# பட்டாசு ஆலையில் பயங்கரத் தீ விபத்து

## 20 தொழிலாளர்கள் பலி!

(போபால்)

மத்தியப்பிரதேசம் மாநி லத்தில் பாலாகத் மாவட் டத்தில் முறைகேடாக செயல் பட்டு வந்த பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 20 தொழிலாளர்கள் பரிதாப மாக உயிரிழந்தனர்.

குறித்த ஆலையின் வெடி மருந்து அறையில் தீ விபத்து ஏற்பட்டது. இதனையடுத்து தீ மற்ற பகுதிகளுக்கும் வேக மாகப் பரவியது.



தீயணைப்பு வாகனங் கள் விரைந்து வந்து தீயை அணைத்த போதும் 20 தொழிலாளர்கள் பரிதாப மாக பலியாகியதுடன் மேலும் பலர் பலத்த காயமடைந்துள்ள னர். அவர்கள் அருகிலுள்ள மராட்டிய மாநிலத்தில் நாக் பூர்மாவட்டத்தில்உள்ள வைத்தி சாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

ஊழியர்கள் புகைப் பிடித்த தால் தீ விபத்து நடைபெற்ற தாக தெரிவித்துள்ள பொலி ஸார், பட்டாசு ஆலையானது அனுமதி இல்லாமல் செயல் பட்டு வந்துள்ளதாகவும் கூறி னர். இது குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பலியானவர்களுக்கு இழப்பீட்டு தொகையாக ரூபாய் 2 இலட்சத்தினை மாநில அரசு அறிவித்துள் ளது. (இ-3)

பாரதச் செய்தி

# சந்திரயான்-2 அடுத்தாண்டு விண்ணில்

## இஸ்ரோ இயக்குநர் தகவல்

(தூத்துக்குடி)

சந்திரயான்-2 விண்க லம்அடுத்த ஆண்டுவிண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ மைய இயக்குநர் வெங்கட கிருஷ்ணன் தெரிவித்தார்.

சந்திரயான்-2 விண்கலத் துக்கான சோதனைகள் மகேந்திரகிரி மையத்தில் நடந்து வருகிறது. தற்போது முதற்கட்ட சோதனை முடி வடைந்துள்ளது.



அடுத்த ஆண்டு தொடக் கத்தில் மார்க்-2 ரொக்கெட் மூலம் சந்திரயான்-2 விண் ணில்செலுத்தப்படும். குலசேக ரன் பட்டினத்தில் ரொக்கெட் ஏவுதளம் அமைப்பது குறித்து ஆய்வுப் பணிகள் நடந்து வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காஷ்மீரில் ஹிஸ்புல் முஜாகிதின் பயங்கரவாதி பொலிஸில் சரண்



(ஸ்ரீநகர்)

காஷ்மீரில்குப்வாரா மாவட் டத்தில்உள்ள பொலிஸ்நிலை யத்தில் ஹிஸ்புல் முஜாகி தின் பயங்கரவாதி தனிஷ் அகமது தாமாக முன்வந்து சரண் அடைந்தார்.

கஷ்மீர் மாநிலம் ஹன்ட் வாரா மாவட்டத்தை சேர்ந்த வர் தனிஷ் அகமது. இவர் டேராடூனில் உள்ள விவசாய அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் பி.எஸ்சி., படித்து வந்தார்.

தனிஷ் அகமது சமூக வலைத்தளம் மூலமாக ஹிஸ் புல் முஜாகிதின் பயங்கர வாத அமைப்புடன் தொடர் புவைத்து, அந்த இயக்கத் தில் இணைந்தார். கடந்த 2016ஆம் ஆண்டு இராணுவ வீரர்கள் மீது கல்வீசிய சம்ப வத்தில் தனிஷ் அகமதை பொலிஸார் கைது செய்து, பின்னர் அறிவுரை கூறி அனுப்பி வைத்தனர். .

அந்த சம்பவத்துக்குப் பின் மாயமான தனிஷ் அக மது ஹிஸ்புல் முஜாகிதின் பயங்கரவாத அமைப்பின் தளபதியான சப்சார் பாத்து டன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, அவரது நெருங் கிய கூட்டாளியானார்.

இந்த நிலையில், கடந்த மாதம் இராணுவ வீரர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சப்சார் பாத் கொல்லப்பட் டார். அவரது இறுதிச் சடங் கில் வெடிகுண்டுகள் மற்றும் துப்பாக்கியுடன் பயங்கரவாதி ஒருவர்கலந்துகொண்டவீடியோ பதிவு உள்ளூார் ஊடகங் களில் பரவியது.

அந்த வீடியோவில் இருந் தது தனிஷ் அகமது என்பது உறுதி செய்யப்பட்டது. இதை யடுத்து பொலிஸார் அவரை வலைவீசி தேடி வந்தனர். இந்த நிலையில், நேற்று முன்தினம் குப்வா்ரா மாவட் டத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் தனிஷ் அகமது தாமாக முன்வந்து சரண் அடைந்தார்.

பொலிஸார்அவரை கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-3)

# நீதிபதி கர்ணனுக்கு விதித்த தண்டனையை ஒரு போதும் இரத்துச் செய்ய முடியாது

## உச்ச நீதிமன்று அறிவிப்பு

(டில்லி)

நீதிபதி கர்ணனுக்கு விதிக் கப்பட்டசிறைத் தண்டனையை ஒருமோதும் இரத்து செய்ய முடியாது என்று உச்ச நீதி மன்று உத்தரவிட்டுள்ளது.


நீதிமன்று அவமதிப்பு வழக்கில் கொல்கத்தா உச்ச நீதிமன்ற நீதிபதி சி.எஸ்.கர்ண னுக்கு, கடந்த மாதம் 9 ஆம் திகதி 6 மாதம் சிறைத் தண் டனை விதித்த உச்சநீதி மன்று அவரை உடனடி யாக கைது செய்யுமாறு மேற்கு வங்காள பொலிஸா ருக்கு உத்தரவிட்டது.

இதைத்தொடர்ந்து, மேற்கு வங்காள பொலிஸார், நீதிபதி கர்ணனை கைது செய்யும் முயற்சியில்ஈடுபட்டனர் ஆனால் .இதுவரை அவரை கைது செய்ய முடியவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றில் நீதிபதிகள் அசோக் பூஷன், தீபக் குப்தா ஆகியோர் அடங் கிய விடுமுறை அமர்வில் நீதிபதி சி.எஸ்.கர்ணன் சார்பில் சட்டத்தரணி மேத்யூஸ் நெடும்பாரா ஆஜராகி 2 மனுக்கள் தாக்கல் செய்தார். அதில் ஒரு மனுவில், 6 மாத சிறைத்தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென்று குறிப் பிடப்பட்டிருந்தது.

2ஆவது மனுவில் உயர் நீதிமன்ற நீதிபதி பதவியில் உள்ள கர்ணனை, உச்ச நீதிமன்று பதவி நீக்கம் செய் யவோ, சிறைத் தண்டனை வழங்கவோ முடியாது. பாராளு மன்றம் கூடி முடிவு எடுக்க வேண்டும். உச்ச நீதிமன்றுக்கு அதிகாரம் கிடையாது. அவ ருடைய விடயத்தில் உச்ச நீதிமன்று தன்னுடைய அதி காரத்தை தவறாக பயன் படுத்துகிறதென்று கூறப்பட் டிருந்தது.

மேலும் நீதிபதி சி.எஸ்.கர் ணன் எதிர்வரும் 12ஆம் திகதி பதவியில் இருந்து ஓய்வு பெறுவதால் இந்த இரு மனுக்களையும் அவசர வழக்காக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண் டும் என்று சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.



ஆனால் இந்த கோரிக் கையை நீதிபதிகள் ஏற்க மறுத்தனர். இந்த வழக்கை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்து உத்தரவு வழங்கி யுள்ளது.

இந்த நிலையில் விடு முறை அமர்வு இந்த மனுவை எந்த வகையிலும் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது. சிறைத் தண்ட னையை இரத்து செய்ய முடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (இ-3)



# தினகரனை விமர்சித்து எதுவும் பேசாதீர்கள்



## அமைச்சர்களுக்கு முதல்வர் பழனிச்சாமி உத்தரவு

(சென்னை)

அ.தி.மு.க. அம்மா அணி யில் ஏற்பட்ட மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, டி.டி.வி.தினகரன் குறித்து கருத்து எதுவும் தெரிவிக்க வேண்டாம் என அமைச்சர்களுக்கு முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உத்தர விட்டுள்ளார். அ.தி.மு.க. அம்மா அணியில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, டிடிவி. தினகரன்ஆகியோருக்கு இடை யேயான மோதல்வலுத்துள்ள நிலையில் தினகரனுக்கு எதி ராக அமைச்சர்கள் தொடர்ந்து கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

அமைச்சர்களின் இந்த கருத்துக்கு தினகரனின் ஆதரவாளர்களும் பதிலடி கொடுத்து வருகிறார்கள். இதனால் கடந்த ஒருவார மாக பரபரப்பு நிலவி வரு கிறது.

தினகரனுக்கு எதிராக கருத்துக்கள் தெரிவிக்கும் அமைச்சர்களை தாக்கி தின கரனின் ஆதரவு எம்.எல். ஏ.க்கள்தினமும்பேட்டி அளித்து வருகிறார்கள். இதன் காரண மாக அ.தி.மு.க. அம்மா அணியில் மோதல் முற்றி சிக்கல் நீடித்து வருகிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முதலமைச்சர் எடப் பாடி பழனிச்சாமி முடிவு செய் துள்ளார். இதையடுத்து அமைச்சர்கள் யாரும் தின கரனை விமர்சித்து கருத்துக் கள் தெரிவிக்க வேண்டாம் என்று அவர் உத்தரவிட்டுள் ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு பயங்கரவாத தடுப்புப் படைப்பிரிவை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் உருவாக்கிய பிரான்ஸ்



(பாரீஸ்)

பிரான்ஸ் நாட்டில் தீவிரவாத அச்சுறுத்தல் தொடர்ந்து இருப்பதால், அதை முறியடிப்பதற்காக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இயங்கும் வண்ணம் சிறப்புப்படைப் பிரிவு ஒன்றை அந்நாட்டு அரசு உருவாக்கியுள்ளது.

ஐரோப்பிய நாடான பிரான்ஸில் கடந்த இரண்டாண்டுகளில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல்களில் சுமார் 230 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

பெரும்பாலான தாக்குதல்கள் ஐ.எஸ்.தீவிரவாத இயக்கத்தால் நடத்தப்பட்டுள்ளன. இதனால், புதிதாக சிறப்பு தீவிரவாத தடுப்புப்படையை உருவாக்க பிரான்ஸ் அரசு முடிவெடுத்தது.

அதன்படி ஜனாதிபதியின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கும் வண்ணம் இந்த படை இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உளவு அமைப்புக்களின் பங்களிப்பில் இந்த சிறப்பு படை இயங்கும் எனவும், மற்ற படைகளை ஒருங்கிணைக்கும் விதமாகவும் இந்த சிறப்பு படை இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள மேக்ரானின் யோசனையில் இந்த சிறப்பு படை உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இருதினங்களுக்கு முன்னர் நோட்ரே தாமே நகரில் பொலிஸார் மீது சுத்தியலால் தாக்குதல் நடத்திய நபர் குறித்த தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளது. அல்ஜீரியா நாட்டிலிருந்து பிரான்சுக்கு குடியேறிய பரீத் இந்த தாக்குதலை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மெட்ஸ் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப்படிப்பு பயிலும் பரீத், சிரியாவில் இயங்கும் ஐ.எஸ். இயக்கத்தினருடன் தொடர்பில் இருந்து, அவர்களின் உத்தரவுக்கேற்ப இந்த தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)



# ஈரான் பாராளுமன்றத்தின் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு

## பலி எண்ணிக்கை 12 ஆக உயர்வு

(தெஹ்ரான்)

ஈரான் பாராளுமன்றத்தில் பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.



ஈரான் நாடு, ஷியா பிரிவினரை பெரும்பான்மையாக கொண்ட நாடு. சன்னி பிரிவை சேர்ந்த ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினரை ஒடுக்க இராணுவத்தை கொண்டு ஈரான் அரசு நடவடிக்கை எடுக்கிறது.

இதன் காரணமாக ஈரான் அரசு மீது ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினர் ஆத்திரம் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தலைநகர் தெஹ்ரானிலுள்ள பாராளுமன்றத்திற்குள் நேற்று முன்தினம் காலை கைத்துப்பாக்கிகளையும், ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளையும் ஏந்திய பயங்கரவாதிகள் 4 பேர் அதிரடியாக நுழைந்தனர்.

பாராளுமன்றத்துக்குள் நுழைந்ததும் அவர்கள் அங்கு கண்மூடித்தனமாக துப்பாக்கியால்சுட்டனர். இதனால்பாராளுமன்றத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

துப்பாக்கிச்சூட்டைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் பாராளுமன்றத்திற்குள் நுழைந்தனர். அவர்கள் பயங்கரவாதிகளுடன் துப்பாக்கிச் சண்டை போட்டு, பாராளுமன்றத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதற்கிடையே பாராளுமன்றத்தில் இருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ள அயத்துல்லா கொமேனியின் நினைவிடத்திலும் துப்பாக்கிச்சூடு நடந்தது. அப்பாவி மக்கள் சரமாரியாக சுடப்பட்டனர்.

இந்த தாக்குதலின்போது, பெண் பயங்கரவாதி ஒருவர் தன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்ததாகவும், அதில் ஒருவர் உயிரிழந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

ஒரு பயங்கரவாதி, பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்விரு தாக்குதல்களும் ஒன்றன் பின் ஒன்றாக நடந்ததால், ஈரானில் பெரும் பதற்றம் நிலவியது.

இரு தாக்குதல்களிலும் மொத்தம் 12 பேர் பலியாகியுள்ளதாக முதற்கட்ட தகவல்கள் கூறுகின்றன. (இ-3)

# எப்.பி.ஐயின் புதிய தலைவராக கிறிஸ்டோபர் ரே நியமனம்

## ஜனாதிபதி ட்ரம்ப் பரிந்துரை

(வோஷிங்டன்)

அமெரிக்க எப்.பி.ஐ.யின் புதிய இயக்குநராக கிறிஸ்டோபர் ரேயை நியமிப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் டுவிட்டரில் தகவல் வெளியிட்டுள்ளார்.





அமெரிக்க உளவுத்துறை எப்.பி.ஐ.யின் (மத்திய புலனாய்வு அமைப்பு) இயக்குநராக பதவி வகித்து வந்த ஜேம்ஸ் கோமியை, கடந்த மாதம் ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடியாக பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் பிரசார குழுவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே இருந்ததாக கூறப்படும் தொடர்பு குறித்து எப்.பி.ஐ. விசாரணை நடத்துவதால் தான், ஜேம்ஸ் கோமி நீக்கப்பட்டதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியது.

இந்த நிலையில் எப்.பி.ஐ.யின் புதிய இயக்குநராக கிறிஸ்டோபர் ரேயை நியமிப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் டுவிட்டரில் தகவல் வெளியிட்டுள்ளார்.

தனது பதவி நீக்கம் தொடர்பாக பாராளுமன்ற செனட் சபையின் தேர்வுக் குழு முன்னிலையில் ஜேம்ஸ் கோமி ஆஜராகி விளக்கம் அளிக்க உள்ள நிலையில், ட்ரம்ப் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கிறிஸ்டோபர் ரே, அமெரிக்க நீதித்துறையின் குற்றப் பிரிவில், உதவி அட்டார்னி ஜெனரல் பொறுப்பு வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)




# பிரிட்டனில் பாராளுமன்ற தேர்தல்







(லண்டன்)

பிரிட்டனில் நேற்று பாராளுமன்றத் பொதுத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். (இ-3)

# கட்டாருடனான உறவு தொடரும்

## துருக்கி அறிவிப்பு

(அங்காரா)

சவுதி, எகிப்து உள்ளிட்ட ஏழு நாடுகள் கட்டாருடனான தூதரக உறவை முறித்துக் கொண்டுள்ள நிலையில், அந்நாட்டுடனான உறவில் மாற்றமில்லை எனவும், தேவையான உதவிகள் செய்வோம் எனவும் துருக்கி ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக நிதி உதவி செய்வதாக குற்றம்சாட்டி கட்டாருடன் ஆன தூதரக உறவை 6 அரபு நாடுகள் துண்டித்தன. சவுதி அரேபியா, பக்ரைன், எகிப்து, ஏமன், அமீரகம், லிபியா, மாலைதீவு ஆகிய நாடுகள் மேற்கண்ட நடவடிக்கையை மேற்கொண்டன.

இதனால் விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தூதர்கள் திரும்பப் பெறப்பட்டனர். மேலும் கச்சாய் எண்ணெய்விலை உயரும் அபாயம் நிலவுகிறது. கட்டார் நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

எனவே இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர சர்வதேச நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளன. இந்நிலையில், துருக்கி தலைநகர் அங்காரவில் கட்டார் மீதான தடை குறித்து துருக்கி ஜனாதிபதி ஏர்துவான் எர்டோகன் பேசும்போது, கட்டார் மீதான வளைகுடா நாடுகளின் தடை நல்லதல்ல என்று நாங்கள் நினைக்கிறோம். கட்டாரை தனிமைப்படுத்துவதால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு ஏற்படாது. எங்களது துயரமான நேரங்களில் எங்களுக்கு கட்டார் நண்பர்கள் துணையிருந்துள்ளனர். கட்டாருடன்ான துருக்கியின் உறவு தொடரும் என்றார். (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

**வடக்கு மாகாண கௌரவ அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதி மோசடி, அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்த விசாரணைக் குழுவின் அறிக்கை**

கௌரவ வடமாகாண முதலமைச்சர் அவர்கட்கு,

தங்களின் NP/CM/CS/03/0125 இலக்க 2016.09.28 ஆம் திகதியின் கடிதப்பிரகாரம் வடக்கு மாகாண கௌரவ அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதி மோசடி, அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்க ரீதியான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட விசாரணைக்குழு உறுப்பினர்களாகிய நாங்கள் குறித்த அமைச்சர்களுக்கு எதிராக எம்முன் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களையிட்டு விசாரணை நடத்தி முடித்துள்ளோம். அறிக்கை, விசாரணை மற்றும் சிபாரிசுகள் தங்களுக்கு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப் படுகின்றன.

இந்த விசாரணையின் பொழுது முறைப்பாடு செய்தவர்களும் குறித்த அமைச்சர்களின் செயற்பாட்டால் பாதிக் கப்பட்டவர்கள் எனத் தெரிவித்தவர்களும் விசாரணைக்குழு முன்தோன்றி சாட்சியமளித்திருந்தார்கள். அத்துடன் அமைச்சு செயலாளார்கள் மற்றும் வடமாகாண நிர்வாக நடவடிக் கைகளுடன் தொடர்புடைய அலுவலர்கள் இவ் விசாரணைக் குழுவினால் அழைக்கப்பட்டு அவர்களின் சாட்சியங்களும் பதியப்பட்டன. குறித்த கௌரவ அமைச்சர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கமைய அவர்கள் விசாரணைக்குழு முன் சமுகமளித்து தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர் பில் சாட்சியமளித்துள்ளார்கள்.

இந்த விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தைச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர்களால் பதியப்பட்டுள்ளது. எம் முன்னால் தரப்பட்ட சாட்சியங்கள் ஆணைக்குழுவினால் ஆராயப்பட்டு ஒவ்வொரு அமைச்சர்கள் தொடர்பாக அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர் பில் விசாரணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை விசாரணைக்குழுவால் கூட்டாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

**பொருளடக்கம்**

i. விதிமுறைக்குறிப்புக்களும் (TOR) விசாரணை முறையும்

ii. கௌரவ அமைச்சர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள்

iii. குற்றச்சாட்டுகளிற்கான விசாரணைக்குழுவின் அறிக்கை

iv. குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைக்குழுவினால் கண்டறியப்பட்டவை

v. விதப்புரைகள்

vi. நன்றியுரை

***i. விதிமுறைக் குறிப்புக்களும் (Terms of Reference) விசாரணை முறையும்***

விதிமுறைக் குறிப்புக்கள் (**TOR**)

1. நோக்கம்:-

1. வடமாகாண சபையின் அமைச்சரவை அங்கத்தவர்கள் பற்றிப் பலவிதமான நிதி மோசடி, அதிகார துஸ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன. அவற்றை முதலமைச்சராகிய நான் விசாரித்து அறிய போதுமான நேர அவகாசம் இல்லாமையால் அவற்றை விசாரித்து எனக்கு அறிக்கையிட ஒரு விசாரணைக்குழு தேவைப்பட்டுள்ளது.

2. எனவே வடமாகாண சபையின் அமைச்சரவை ஊழல் அற்ற தூய்மையான அமைச்சரவையாக இயங் குவதற்கு வழியமைப்பதற்கும் அந்நோக்கத்தை அடைவதற்கு தடையாகவுள்ள ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சம் போன்ற குறைபாடுகளைக் கண்டறிந்து விசாரித்து அறிக்கை செய்வதற்கும் தேவையான திருத்தல் நடவடிக் கைகளைச் சிபார்சு செய்வதற்கும் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்படுகின்றது.

1.1 இவ்விசாரணையானது அமைச்சர்களுக்கெதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரித்து குறிப்பிட்ட அமைச்சர்கள் குற்றம் இழைத்துள்ளார்களா? இல்லையா? என்பதைக் கண்டறிந்து குற்றம் இழைக்கப்பட்டதாக கண்ட றியும் இடத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை விதந்து ரைத்தலும் எதிர்காலத்தில் அவ்வாறான நிகழ்வுகள் இடம் பெறாது தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்மொழித லுக்குமாக நியமிக்கப்படுகிறது.

2. குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனமும் அமைப்பும்

2.1 இக்குழுவானது உறுப்பினர்கள் மூவரை கொண்டிருக்கும்.

2.2 இம்மூவரில் இருவர் ஓய்வு பெற்ற நீதிபதிகளாக இருப்பர்.

2.3 மூன்றாவது உறுப்பினர் இலங்கை நிர்வாக சேவை யின் ஒரு சிரேஷ்ட அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெற்றவராக இருப்பர்

2.4 குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களை நியமித்தலும் அதன் விசாரணையின் எல்லைப்பரப்பை ப வரையறுத்தலும் முதலமைச்சரினால் மேற்கொள்ளப்படும்.

2.5 குழுவின் உறுப்பினர்களில் ஒருவரை குழுத்தலை வராக முதலமைச்சர் நியமிப்பார்.

2.6 குழுவின் தீர்மானங்கள் ஏகமனதாகவோ, அப்படி ஒருமிக்க தீர்மானம் எடுக்க முடியாதவிடத்து பெரும்பான் மையான உறுப்பினர்களின் ஒருமைப்பாட்டுடனோ நிறை வேற்றப்படும்.

3. நியமன அதிகாரம்

13ஆம் அரசியலமைப்பு திருத்தத்தின் பிரிவு 154 F(5)



பிரகாரம் அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரத்தை கொண்டவர் என்ற அடிப்படையிலும் 16.08.2016ஆம் திகதி நடைபெற்ற 58ஆவது மாகாண சபையின் கூட்டத்தில் ஏக மனதாக இது பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படை யிலும் வடமாகாணசபையின் முதலமைச்சர் இக்குழுவை நியமிக்கும் தத்துவமுடையவராவார்.

4. ஆணை (Mandate)

4.1 இக்குழுவானது நியமனத்திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்கு தொழிற்படும். இக்காலத்தை நீடிப்பதற்கும் இடைக்கால அறிக்கை கோருவதற்குமான அதிகாரம் முதல மைச்சரின் தற்துணிவின்பாற்பட்டது.

4.2 இடைக்கால அறிக்கை, இறுதியறிக்கை ஆகிய வற்றை முதலமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. குழுக்கான கொடுப்பனவுகள்.

5.1 இக்குழு உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு ஒரு அமர்வுக்கு ரூபாய் 5000 ஆகவிருக்கும். ஒரு அமர்வுக்கு குறைந்தது 5 மணித்தியாலங்கள் ஆகும்.

5.2 அமர்வுக்கான கொடுப்பனவுக்கு மேலதிக அறிக்கை செய்வதற்கான கொடுப்பனவுத் தொகை தனியாக நிர்ண யிக்கப்படும்.

5.3 போக்குவரத்துச் செலவு 2000ரூபா வழங்கப்படும்.

6. அமர்விடமும் ஏனைய வசதிகளும்

6.1 இக்குழுவின் அமர்விடம் வடமாகாண சபையின் பிரதம செயலாளரின் செயலகமாக அமையும்.

6.2 இவ் விசாரணைக்கான ஒழுங்குகள் மாகாண சபையின் பிரதம செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

6.3 இக்குழுவிற்கு தேவையான பணியாளர்களையும் ஏனைய வசதிகளையும் பிரதம செயலாளர் வழங்குவார்.

7. குழுவுக்கான அதிகாரமும் தொழிற்பாடுகளும்.

7.1 வேலை நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து சமர்ப்பித்தல், விசாரணைக்கு முக்கியமான விடயங்களை தெரிவு செய்தல், அழைக்கப்படவேண்டிய சாட்சியங்களை ஒழுங்குபடுத்துதல்.

7.2 முறைப்பாட்டுக்காரரையும் சாட்சியங்களையும் விசாரணைக்கு அழைத்தல்.

7.3 கிடைக்கப்பெறுகின்ற குற்றச்சாட்டுக்களை விசாரித் தலும் எழுத்து மூலமோ வாய்மொழி மூலமோ சாட்சியங்களை பதிவு செய்தலும் பரிசோதித்தலும்.

7.4 மாகாண சபை அதிகாரிகளை எழுத்து மூலம் ஆவ ணங்களை, புத்தகங்களை பதிவெடுகளை சமர்ப்பிக்கும்படி கோருதல்.

7.5 தகவல்களை பெறுவதற்காக தொடர்புபட்ட ஆவ ணங்களை பரிசீலிப்பதற்கும் தேவைப்படுமிடத்து ஆவணங் களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கும் குழுவுக்கு அதி காரம் உண்டு.

7.6 சாட்சியங்களை அனுமதிப்பது சார்பாக சாட்சிகள் கட்டளைச்சட்டத்தில் எது எவ்வாறு கூறப்பட்டிருப்பினும் சாட்சியங்களை எழுத்து மூலமோ வாய்மொழி மூலமோ பெற அனுமதித்தல்.

7.7 ஆவணஆதாரங்களைபெற்றுஅவற்றைஆவணப் படுத்தல்.

7.8 குழு நியமனத்திகதியில் இருந்து மூன்று மாத காலத்துள் அதன் சிபார்சுகளுடன் இறுதி அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. தேவை ஏற்படுமிடத்து இந்த விதிமுறைகள் கௌரவ முதலமைச்சரால் மாற்றம் செய்யப்படலாம்.

*மேலதிகமானவை*

- மேற்குறித்த விசாரணையானது பொது இடத்தில் நடத்தப்படலாகாது. மூடப்பட்ட அறையில் நடத்தப்படல் வேண்டும்.
- விசாரணையின் இடையில் குழு உறுப்பினர் விலகினால் இறந்தால் விலக விரும்பினால் ஒரு பகுதியில் அல்லது முழுமையான விசாரணையில் பங்குபற்றமை அல்லது பங்குபற்ற மறுத்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் முழுமையாக அல்லது பகுதியளவில் புதிய உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு. அவ்வாறு நியமிக் கப்படாவிட்டாலும் மிகுதி உறுப்பினர்களுடன் குழு விசாரணை தொடர்ந்து நடத்தப்பட்டு முடிவுறுத்தப்படல் வேண்டும். புதிய உறுப்பினர் நியமிக்கப்பட்டால் முன்னைய நடத்தப்பட்ட சாட்சியங்கள் மீளப்பெறப்படத் தேவையில்லை. அதே இடத்திலிருந்து தொடரப்படல் வேண்டும்.

ஊடகங்களுக்கு தகவல் வழங்கப்படல் ஆகாது.

*விசாரணை முறை*

கௌரவ வடமாகாண முதலமைச்சர் அவர்களின் NP/CM/CS/03/0125 இலக்க 2016.09.28ஆம் திகதியின் கடிதப்பிரகாரம் வடக்கு மாகாண கௌரவ அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதி மோசடி, அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக 2016.10.03 ஆம் திகதி முதல் செயற்படும் வண்ணம் மூவர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. இதில் திரு.எஸ்.தியாகேந்திரன்- இளைப் பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி விசாரணைக்குழுவின் தலை வராகவும் திரு.எஸ்.பரமராஜா -இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி, திரு.சேனா பத்மநாதன்-இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் விசாரணைக் குழுவின் அங்கத்தவர்களாகவும் நியமிக்கப்பட்டதுடன் விசாரணை தொடர்பான விதிமுறைக்குறிப்புகளும் வழங்கப்பட்டது.

இவ் விசாரணைக்குழுவின் நியமனம் தொடர்பான அறிவித்தல் கௌரவ முதலமைச்சரின் செயலாளரினால் வடமாகாணத்தில் அதிகளவு மக்கள் பாவனையிலுள்ள இரண்டு பத்திரிகைகள் மூலம் 10.10.2016ஆம் திகதி பிரசுரிக் கப் பட்டதுடன் விசாரணைக்குழுவின் செயலாளராக பிரதம செயலாளர் அலுவலகத்தில் உதவிப் பிரதம செயலாளராக கடமையாற்றும் திருமதி.கு.காஞ்சனா குறித்த விசாரணையின் வழக்கத்தொடுநராக பிரதம செயலாளர் அலுவலக சட்ட ஆலோசகர் இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி பொ.சி.வர தராசா ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து வடமாகாண முதலமைச்சினால் வடமாகாண சபை அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்கவென நியமிக் கப்பட்டுள்ள விசாரணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக முறைப்பாடுகளை செய்வதற்கான அறிவித்தல் 05.11.2016 ஆம் திகதி பத்திரிகையில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டது டன் இவ் எழுத்து மூலமான முறைப்பாடுகள் 07.11.2016 ஆம் திகதியிலிருந்து 06.12.2016ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பிரதம செயலாளர் அலுவலகத் தில் விசாரணைக் குழுவின் செயலாளரினால் நேரடியாகவும் பதிவுத் தபால் மூலமும் பெறப்பட்டதுடன் வட மாகாணசபை அமர்வின் போது விடப்பட்ட கோரிக்கைக்கு அமைய கௌரவ முதலமைச்சரால் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதி 20.12.2016 ஆம் திகதி வரை மேலும் இருவார காலமாக நீடிக்கப்பட்டு முறைப்பாடுகள் ஏற்றுக்கொள் ளப்பட்டன.

07.11.2016 தொடக்கம் 20.12.2016 வரையான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதியினுள் கௌரவ வடமாகாண சபை அமைச்சர்களுக்கு எதிராக எழுத்து மூலமாக 8 முறைப்பாடுகள் வடக்கு மாகாணசபை உறுப்பி னர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்றன. இவற்றில் 6 நேரடியாகவும் ஒன்று பதிவுத்தபால் மூலமாகவும் ஒன்று சாதாரண தபால் மூலமாகவும் கிடைக் கப்பெற்றிருந்தன.

எழுத்து மூலமாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைக்குழுவினால் 2017 ஜனவரி 10,11ஆம் திகதிகளில் யாழ். பொதுநூலகத்தில் அமைந்துள்ள வடமாகாண சபை மண்டபத்திலும் 28ஆம் திகதி பிரதம செயலாளர் அலுவல்கத்திலும் முறைப்பாட்டாளர்கள் அழைக் கப்பட்டு அவர்களது வாக்கு மூலம் பெறப்பட்டது.

முறைப்பாட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட முறைப் பாடுகள் தொடர்பில் அவர்களால் முன்வைக்கப்பட்ட சாட்சியா ளர்களையும் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக மாகாணசபை நிர்வாகத்திலுள்ள உத்தியோகத்தர்களையும் குழுவின் முன் அழைத்து அவர்களது வாக்குமூலங்கள் பதிவுசெய்யப் பட்டன.

மேற்படி பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் வழக்குத்தொடுநரால் அமைச்சர்களுக்கு எதிராக குற்றச் சாட்டுகள் தயாரிக்கப்பட்டு குறித்த அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் தொடர் பாக விசாரிப்பதற்கு வேண்டிய கால அவகாசத்துடனான நாட்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அவ்விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தானாகவோ அல்லது ஓர் சட்ட த்தரணி மூலமோ குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளை ம்றுப் ப தற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

அத்தோடு குற்றச்சாட்டுகளை சுமத்தியோர் குறிப்பிட்ட விசாரணைத் திகதியில் தாமாகவோ அல்லது வேறு சம்பந் தப்பட்டவர்களோடோ தேவையான ஆவண சான்று களுட னோ விசாரணைக்கு சமுகமளிக்கவும் குற்றம் சாட்டப் பட் டவரை குறுக்குவிசாரணை செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங் கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தை குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு அமைச் சர்களும் பூரணமாக ஏற்றுக்கொண்டு தாமாகவே முன்வந்து தமக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிற்கு விளக்கம் அளித்தனர். முறைப்பாட்டாளர்களும் விசாரணை யின் போது பங்குபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர்களை குறுக்கு விசார ணை செய்தனர்.

அங்கீகரிக்கப்பட்ட விசாரணை நடைமுறைகளுக்கு மேலதிக மாக தேவையான சந்தர்ப்பத்தில் விசாரணைக்குழு திட்ட செயற் பாட்டு இடங்களிற்கு நேரடிக்கள ஆய்வு செய்து பயனாளிகளின் கருத்துகளும் பதிவு செய்யப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டது. பின்வரும் இடங்கள் நேரடியாக பார்வையிடப்பட்டன.

01. வவுனியா ஓமந்தை வெலிமருதமடு (மரநடுகை)

02. வட்டக்கச்சி மாதவனூர் புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம்.

03. யாழ். மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட விவசாயக் கிணறுகள் (கோண்டாவில், உரும்பிராய், இணுவில், கைதடி)

விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் பிரதம செயலாளர் அலுவலகத்தைச் சேர்ந்த முகாமைத்துவ உத்தி யோகத்தர்களால் பதிவு செய்யப்பட்டு எமக்கு சமர்ப்பிக்கப் பட்டதன் அடிப்படையில் அவற்றினை ஆராய்ந்து அமைச் சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பிலான அறிக்கை தயாரிக்கப்பட்டு விசாரணைக் குழுவின் விதந்துரைகளும் ஆவணப்படுத்தப்பட்டது. →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

**II கௌரவ அமைச்சர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள்**

**விவசாய கமநல சேவை, கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு விநியோகத்தில் சுற்றாடல் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்.**

1. வவுனியா மாவட்டத்தில் மூங்கில் , மல்லிகை வளர்ப்புத் திட்டங்கள், எள்ளு விநியோகத்து தொழிலை முன்னெடுக்க வைக்கும் திட்டம் ஆகியவற்றை கைலஞ்சம் பெறும் நோக்கத்திற்காக நிராகரித்தமை.

2. கண்காட்சிக்ள், பொங்கல் விழா, உழவர் விழா எனப் பல விழாக்களை பெருந்தொகைப் பணத்தை செலவழித்து நடத்தியதன் மூலம் மாகாணசபையின் பெரும் அளவிலான நிதியை வீண்விரயம் செய்தமை.

3. மாகாணசபை உறுப்பினர்களினதும் மாகாணசபை ஆலோசனைக்குழுக்களினதும் ஆலோசனைகளைப் பெறாமல் திட்டங்கள் முன்னெடுத்தமை.

4. Beta Power (Pvt) Ltd.& Jule Power (Pvt) Ltd நிறுவனங்களிடமிருந்து 2015 ஆம் ஆண்டு முதல் வருடம் ஒன்றிற்கு ரூபா 20 மில்லியன் வீதம் 2016 வரை பெறப்பட்ட ரூபா 40 மில்லியன் பணத்தை மோசடி செய்தமை.

5. பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் மாகாண நிதியை மோசடி செய்தமை.

6. i. Northern Power என்ற மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் தொழிற்பட்ட வேளையில் அதனது கழிவு எண்ணெய் குடிநீரில் கலந்த விடயத்திற்கு ஆய்வுக்குழு ஒன்றை நியமித்து அக்குழுவின் அறிக்கை மூலம் நிறுவனத்திற்கு சாதகமாக அறிக்கையை வெளிப்படுத்தி உண்மைகளை மறைத்தமை .

ii.நிலத்தடி நீர் விடயம் தொடர்பில் எதுவித அதிகாரமும் அற்ற நிலையில் நிலத்தடி நீரில் எண்ணெய் கசிவு தொடர்பில் விசாரணைக்காக நிபுணர்குழுவை நியமித்து மாகாண சபையின் நிதியை வீண்விரயம் செய்தமை.

7. 2015 நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட 5 இலட்சம் மர நடுகை திட்டம் தொடர்பில் பண மோசடி செய்தமை.

8. ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் இதுவரையில் நன்கு வெற்றி அளிக்கவில்லை எனத் தெரிந்திருந்தும் தவறான செல்வாக்கை செலுத்தி நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து சாத்தியக்கூற்று அறிக்கையை பெற்று புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தினை முன்னெடுத்து 36 மில்லியன் ரூபாவை வீண்விரயம் செய்தமை.

9. i. யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு 2014 ஆம் ஆண்டு மே மாதம் வரை தலைவராக இருந்த பெரியதம்பி இராசநாயகம் இரஞ்சன் என்பவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளருக்கு ஊடாக அதிகார துஷ்பிரயோகம் மூலம் பதவி நீக்கம் செய்தமை.

ii 2015 யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு தலைவராக முன் அனுபவமில்லாதவரும் அரச அதிபரால் சிபார்சு செய்யப்படாதவருமான திரு.இ.சர்வேஸ்வரா என்பவரை குடும்ப நண்பர் என்ற அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவராக நியமித்தமை தொடர்பில் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

10. மருதங்கேணி கடற்றொழில் சமாசத் தலைவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளர் மூலம் 2015 மார்கழி மாதம் அளவில் பதவி நீக்கம் செய்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை

திரு.கு.பொ.சி.வரதராசா
வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணி

**முறைப்பாட்டுக்காரர் தரப்பில்**
**சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகள் பட்டியல்.**

1. கௌரவ அணந்தி சசிதரன், வட மாகாணசபை உறுப்பினர்
2. கௌரவ ஜி.ரி.லிங்கநாதன், வட மாகாண சபை உறுப்பினர்.
3. கௌரவ எஸ்.சுகிர்தன், வட மாகாண சபை உறுப்பினர்.

**முறைப்பாட்டுக்காரர் தரப்பில்**
**முன்வைக்கப்படவுள்ள ஆவணங்கள்.**

1.கன்சாட் பிரதிகள், கோவைகள்,ஆவணங்கள்.
திரு.பொ.சி.தவராசா
வழக்கு தொடுநர் தரப்பு சட்டதரணி
மேலதிக சாட்சிப்பட்டியல்
1.திரு. பெ.இ.இரஞ்சன் -முன்னாள் யாழ்கோ தலைவர்
2. திரு.வை.பிறேமதாஸ் -முன்னாள் தலைவர் மருதங்கேணி கடற்றொழிலாளர் சமாசத் தலைவர்.
திரு.கு.பொ.சி.வரதராசா
வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணி

**கல்விப்பண்பாட்டு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசா அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்.**

1. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சிவபாதம் நந்தகுமார் என்பவர் 58 வயது 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில் 16.01.2017 இல் தவறான இடமாற்றம் ஒன்றை வழங்கி இருந்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

2. யா/யூனியன் கல்லூரி அதிபரின் நியமனத்தில் யூனியன் கல்லூரி பழையமாணவராக இருந்த திரு. வரதன் மாஸ்டர் என்பவரை பாராளுமன்ற உறுப்பினரின் செல்வாக்குமூலம் அவரை கொஞ்சக்காலம் படித்த காரணத்திற்காக அதிபராக நியமிக்க மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை .

3. குறித்த வரதன் என்பவர் கல்விக்கான் கற்கை விடு



முறையில் இருக்கும் போது அவரை அதிபராக்க நியமித்ததன் மூலம் அதிகார துஷ்பிரயோகம் புரிந்தமை.

4. குறித்த அதிபரின் நியமனத்தை உடன் நிறுத்துமாறு மாகாணசபையில் கௌரவ முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாகாணசபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் அதனை செயற்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காது செயலாளரை தடுத்தமை.

5. i 2015 ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி பாரதிபுரம் அதிபர் அப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன் தங்களுக்கு முறைப்பாடு செய்திருந்தபோதும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமை

ii. குறித்த அதிபர் பாடசாலையின் மாணவியுடன் தகாத முறையில் நடந்து கொண்ட விடயத்தை பாடசாலை வகுப்பாசிரியர், வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளுக்கு கடித மூலம் முறைப்பாடு செய்தார்.அதற்காக அவ் ஆசிரியர் பழிவாங்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.முருகவேளினால் இடமாற்றம் செய்யப்பட்டமை.

iii. குறித்த ஆசிரியரின் கடித மூலமான முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அவ் ஆசிரியரை ஏனைய ஆசிரியர்கள் முன்னிலையில் கொச்சைப் படுத்தியமை தொடர்பாக கௌரவ அனந்தி சசிதரன் கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்காமை.

6. கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும்,கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் தனக்கேற்றவர்களை அதிபராக நியமனம் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை.

7. வட மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர் மாநாடு என்ற பெயரில் பெருமளவில் நிதி செலவழித்து வீண் விரயம் செய்தமை.

8.மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முன்னாள் ஜனாதிபதி வருகைக்காக ஆறு தேசியப் பாடசாலைகளை அலங்கரிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை செல வழித்தமை.

9. கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளின் சேவைக்காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவையை தொடருவதற்கு முயற்சிக்கிறமை

திரு.கு.பொ.சி.வரதராசா
வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணி

***முறைப்பாட்டுக்காரர் தரப்பில்***
***சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகள் பட்டியல்.***

1. கௌரவ அணந்தி சசிதரன், வட மாகாணசபை உறுப்பினர்.
2. கௌரவ எஸ்.சுகிர்தன் , வட மாகாண சபை உறுப்பினர்.

***முறைப்பாட்டுக்காரர் தரப்பில்***
***முன்வைக்கப்படவுள்ள ஆவணங்கள்.***

1.கன்சாட் பிரதிகள், கோவைகள்,ஆவணங்கள்.
திரு.கு.பொ.சி.வரதராசா

**வட மாகாண சுகாதார, சுதேச, மருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ ப.சத்தியலிங்கம் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்.**

1. 2014-2015 காலப்பகுதியில் சுகாதார தொண்டர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காமல் கடைகளிலும் பார்மஸிகளிலும் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியமை.

2. சுகாதார ஊழியர்களின் சீருடை விநியோகத்தில் நடைபெற்ற முறைகேடு.

3. 94 மாகாண வைத்தியசாலைகளுக்கான உணவு விநியோக கேள்வி கோரலில் நடைபெற்ற முறைகேடு தொடர்பில் தாங்கள் அறிக்கை விட்டிருந்த போதிலும் அம் மோசடியை வெளிக்கொணர எந்த நடவடிக்கையும் எடுக்காமை.

4. வவுனியா வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக அவுஸ்திரேலியாவிலுள்ள புலம் பெயர் தமிழர்கள் வழங்கிய நிதி குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தாமை.

5. சுகாதார திணைக்களங்களில் பாதுகாப்பு சேவை ஒப்பந்தம் கேள்வி கோரலில் தவறாக நடந்து கொண்டமை.

திரு.கு.பொ.சி.வரதராசா
வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணி

***முறைப்பாட்டுக்காரர் தரப்பில்***
***சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகள் பட்டியல்.***

1. கௌரவ அனந்தி சசிதரன், வட மாகாணசபை உறுப்பினர்.

***முறைப்பாட்டுக்காரர் தரப்பில்***
***முன்வைக்கப்படவுள்ள ஆவணங்கள்.***

1.கன்சாட் பிரதிகள், கோவைகள்,ஆவணங்கள்.
திரு.கு.பொ.சி.வரதராசா
வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணி

**வடமாகாண மீன்பிடி வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா.டெனீஸ்வரன் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்**

1.நன்னீர்குளங்களில்மீன்குஞ்சுவிடுவதில்பாரபட்சம்நடந்தமை.

2. வட மாகாணத்தில் எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைகள் பின்பற்றாதுபோடப்பட்ட வீதிகள்தொடர்பில்நிதிமோசடிசெய்தமை.

3. ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றாமல் பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டமை.

4. போராளிகள், மாவீரர்கள் குடும்பங்களுக்காக வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒரு கோடி நிதியை சரியான முறைகளை பின்பற்றாது போராளிகளின் வாழ்வாதார உதவி பயனாளிகள் தெரிவில் சரியாக தெரிவு செய்யாது முறைகேடுகளை பின்பற்றி மோசடி செய்தமை.

திரு.கு.பொ.சி.வரதராசா
வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணி

***முறைப்பாட்டுக்காரர் தரப்பில்***
***சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகள் பட்டியல்.***

1. கௌரவ அனந்தி சசிதரன், வட மாகாணசபை உறுப்பினர்.

***முறைப்பாட்டுக்காரர் தரப்பில்***
***முன்வைக்கப்படவுள்ள ஆவணங்கள்.***

1.கன்சாட் பிரதிகள், கோவைகள்,ஆவணங்கள்.
திரு.கு.பொ.சி.வரதராசா
வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணி

**III. குற்றச்சாட்டுக்களுக்கான விசாரணைக் குழுவின் அறிக்கை**

**1.வடமாகாண சபையின் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கத்திற்கு எதிரான முறைப்பாடுகள்**

வடமாகாண சபையின் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 2017.02.26 இல் இந்த விசாரணைக்குழுவினால் விசாரணை நடத்தப்பட்டது.

மேற்படி கௌரவ அமைச்சருக்கு எதிராகப் பின்வருப வர்களினால் எழுத்துமூலமான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

1.வடமாகாண சபை உறுப்பினர் கௌரவ க.சர்வேஸ்வரன் அவர்களது திகதியிடப்படாத முறைப்பாட்டுக் கடிதம்.

2.வடமாகாண சபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன் (05.12.2016) திகதியிடப்பட்ட முறைப்பாட்டுக் கடிதம்)

இம்முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களையும் அவர்களால் முன்வைக்கப்பட்ட விடயம் தொடர்பான சாட்சியாளர்கள், மாகாண அரச சேவையில் பணியாற்றிய உத்தியோகத்தர்களையும் இம்முறைப்பாடுகளின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டு வருவதற்காக விசாரணைக் குழு, சாட்சியமளிக்க அழைப்பாணை அனுப்பியிருந்தது. அதனடிப்படையில் முறைப்பாட்டாளர்கள் மாகாண, தனியார் பிரதிநிதிகள், விசாரணைக்குழுவின் முன் தோன்றி சாட்சியமளித்துள்ளனர்.

முறைப்பாட்டாளர்களது சாட்சி மற்றும் ஆவண சாட்சிகளின் படியும் அம்முறைப்பாடுகள் தொடர்பாக சாட்சியமளித்த சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சான்றுகளின் அடிப்படையிலும் சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கத்திற்கு எதிராக வழக்கு தொடுநரால் பின்வரும் 05 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

I. 2014- 2015 காலப்பகுதியில் சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காமல் கடைகளிலும் பார்மஸிகளிலும் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியமை.

II.சுகாதார ஊழியர்களின் சீருடை விநியோகத்தில் நடைபெற்ற முறைகேடு

III.94 மாகாண வைத்தியசாலைகளுக்கான உணவு விநியோக கேள்வி கோரலில் நடைபெற்ற முறைகேடு தொடர்பில் தாங்கள் அறிக்கை விட்டிருந்த போதிலும் அம்மோசடியை வெளிக்கொணர எந்த நடவடிக்கையும் எடுக்காமை.

IV.வவுனியா வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக அவுஸ்திரேலியாவிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் வழங்கிய் நிதி குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தாமை.

V.சுகாதார திணைக்களங்களில் பாதுகாப்பு சேவை ஒப்பந்தம் கேள்வி கோரலில் தவறாக நடந்து கொண்டமை.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறைப் பாட்டாளரான கௌரவ அனந்தி சசிதரனை உரிய சாட்சிகளுடனும் ஆவணங்களுடனும் அறிவிக்கப்படும் தினத்தில் சமுகம் தரும்படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கௌரவ அமைச்சர் முன்னிலையிலான விசாரணைத் தினத்தில் முறைப்பாட்டாளர் சமுகம் அளிக்கவில்லை. முறைப்பாட்டாளர் சமூகமற்ற நிலையில் விசாரணைக்குழு குறித்த அமைச்சரிடம் அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு- ஒரு பார்வை




பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இந்திய மாநிலமான தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்களை எல்லையாகக் கொண்டன. மேலும் சிறுசிறு தொடர்ச்சியற்ற பாண்டிச்சேரி மத்திய அரசுப் பரப்புக்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. தெற்கில் மன்னார் குடாவும் பாக்குநீரிணையும் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே காணப்படுகின்றது. இலங்கை சுதந்திரமான நாடாக இருப்பதால் இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் கடல் எல்லை சர்வதேச கடல் எல்லையாக இருக்கின்றது.

ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்கள் தமிழ்நாட்டைப் போல் இந்திய மாநிலங்களாகும். எனினும் இந்த மூன்று மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் இன்று நல்ல உறவு இல்லை. நதி நீர்ப்பங்கீடு, சிறுபான்மையாக வாழும் தமிழர்கள் பிரச்சினை, எல்லைப் பிரச்சினைகள் மத்திய அரசுத் திட்டங்கள் பெறுவதில் ஏற்படும் போட்டிகள் போன்றவற்றால் தமிழ்நாட்டுக்கும் தென்னிந்திய மாநிலங்களுக்குமிடையில் நல்ல உறவு இல்லை.

ஆந்திராவுக்கும் தமிழ்நாட்டுக்கும் அதாவது தெலுங்கர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே நீண்டகாலமாக இனிப்பு/புளிப்பான உறவு இருந்து வந்துள்ளது. தமிழ்நாட்டில் சோழர் பின்னர் பாண்டியர் ஆட்சி நிலைகுலைய விஜயநகர ஆட்சி மேலோங்கியது. நாயக்க மன்னர்களும் பின்னர் பாளையக்காரர் ஆட்சி மேலோங்கிய பொழுது தெலுங்கர்களின் செல்வாக்கு தமிழகத்தில் ஏற்படலாயிற்று. மேலும் தெலுங்கர்கள் வட தமிழ்நாட்டில் பெரியளவில் குடியேறலாயினர். இதனால் தெலுங்குக் கலாசாரம் மேலோங்கியது. கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளும் தெலுங்கிலேயே கீர்த்தனைகளை உருவாக்கிப் பாடினர். இதனால் கர்நாடக சங்கீதம் தெலுங்கு வழி வந்ததாக இருந்தது.

சென்னை இராசதானி Madras Presidency அமையப்பெற்ற பொழுது இன்றைய தமிழ் நாட்டுப் பகுதிகள் கரையோர ஆந்திரா, ராயலசீமா மற்றும் கர்நாடகத்தின் தென்பகுதிகள் மற்றும் கேரளாவின் வடபகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. 1920களில் இருந்து இந்தியா சுதந்திரம் அடையும் வரை இருந்த முதலமைச்சர்களில் கூடியவர்கள் தெலுங்கர்களாக இருந்ததுடன் சென்னை இராசதானியில் தெலுங்கர்கள் கூடிய முக்கியத்துவம் பெற்றிருந்தனர். 1953 இல் ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டது. மேலும் தெலுங்கர் சென்னைப் பட்டணத்திலும் உரிமை கோரினர். சென்னை தமதே என்று குரல் எழுப்பினர். இப்பிரச்சினைக்கு தீர்வாக சித்தூர் மாவட்டம் திருப்பதி அடங்கலாக ஆந்திராவுக்குக் கொடுக்கப்பட்டது. சித்தூர் மாவட்ட இழப்பு தமிழ்மக்களுக்கு பெரும் கவலையளிப்பதாக இருந்தது. திருப்பதி வேங்கடேஸ்வரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்கள், தமிழர்களுக்கும் இக்கோயிலுக்குள்ள தொடர்பைக் காட்டும். மேலும் மிகப் பழைய வரலாற்றுக் காலத்தில் இருந்து தமிழ் கூறும் நல்லுலகின் வடக்கு எல்லை வேங்கடமலை எனக் கூறப்பட்டது. 1959 இல் ஆந்திர முதல்வர் நிஜலிங்கப்பாவுக்கும் தமிழ்நாட்டு முதல்வர் காமராஜருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் 300 எல்லைக் கிராமங்கள் கைமாறப்பட்டன. இதனால் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது.




ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டு சித்தூர் மாவட்டம் ஆந்திர மாநிலத்திற்குக் கீழ் கொண்டு வரப்பட்டதால் சித்தூர் மாவட்ட தமிழர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். 2001 ஆம் ஆண்டு 1886785 இற்கு மேற்பட்ட தமிழர்கள் தமிழ்நாட்டு எல்லையோரமாக ஆந்திர மாநிலத்தில் வாழ்கின்றார்கள். இவர்கள் தங்களை தமிழ்நாட்டுடன் இணைக்குமாறு அடிக்கடி கோரிக்கை விடுவர். மேலும் ஆந்திராவில் வாழும் தமிழர்கள் ஆந்திர அரசியலில் சிறிதளவு பங்கு கொள்ளவில்லை. மேலும் ஆந்திர மாநிலத்தில் வாழும் தமிழர்கள் தங்கள் மொழியுரிமையைப் பேணுவதில் கஷ்டப்படுகின்றார்கள். மேலும் தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் அபிவிருத்தியில் பின்னிற்கின்றதென்ற குற்றச்சாட்டை தமிழ்த்தரப்பு முன்வைக்கின்றது.

தமிழ்நாட்டில் இன்றைய மக்கள் தொகையில் 8.65 வீதத்தினர் தெலுங்கர்கள். இவர்கள் சென்னையிலும் கிருஷ்ணகிரி, வேலூர், திருவள்ளுவர் போன்ற எல்லையோர மாவட்டங்களிலும் கூடுதலாக வாழ்கின்றனர். தற்பொழுது தெலுங்கர்கள் தமிழ்நாட்டில் தங்கள் நிலைமை குறைந்துவிட்டதென்றும் கூறுகிறார்கள். ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்ட பிறகு சென்னைப் பட்டணத்தில் இருந்த தெலுங்கு கைத்தொழில் அதிபர்கள் தங்கள் முதலீடுகளை ஆந்திராவுக்கு மாற்றி விட்டனர். அதேநேரத்தில் சென்னையில் தமிழர்களின் முதலீடுகளும் செயற்பாடுகளும் அதிகாரத்தால் தற்பொழுது சென்னை நகரம் முழுமையான தமிழர் ஆதிக்க நகரமாக மாறியுள்ளதெனலாம். ஆந்திராவில் தமிழர்கள் எண்ணிக்கையைவிட தமிழ்நாட்டில் கூடிய தெலுங்கர்கள் இருக்கிறார்கள். இப்பிரச்சினை இரு மாநிலங்களுக்கும் இடையில் மனக்கசப்புக்கள் தொடர்ந்து ஏற்படுத்தி வந்தன.

ஆந்திர மாநிலம் தெலுங்கானா ஆந்திரா என இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டதன் பின்னர் புதிய ஆந்திர மாநிலத்திற்கு பெரிய நகரம் ஒன்றில்லை. இதனால் ஆந்திரக்காரர் மீண்டும் சேவைகள் பெற சென்னை வருவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். தற்பொழுது தமிழ்நாட்டுக்கும் ஆந்திராவுக்கும் புதிதாக பாலாறு நீர்ப்பங்கீடு குறித்து புதுப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது. பாலாறு ஆந்திரப் பிரதேசத்தில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஊடாகக் கடலையடைகின்றது. தமிழ்நாட்டில் ஏற்கனவே இவ்வாற்று நீர் நீர்ப்பாசனத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுகிறது. வேலூர், காஞ்சிபுர மாவட்ட மக்களின் வாழ்வாதாரம் இவ்வாற்றில் தங்கியுள்ளது. இச்சூழ்நிலையில் ஆந்திர மாநிலம் தமிழ்நாட்டை ஆலோசிக்காமல் பாலாறுக்குக் குறுக்கே அணை அமைத்து நீர்த்தேக்கம் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்படுமாயின் இவ்வாற்றில் தமிழ்நாட்டுக்கு வரும் நீரின் அளவு வெகுவாகக் குறையும். ஏற்கனவே நீர்ப்பற்றாக்குறையால் பல பிரச்சினைகளை எதிர்நோக்கும் வேலூர், காஞ்சிபுர மாவட்டங்கள் மேலும் பிரச்சினைகள் அதிகரிக்கும் என்றும் குடிநீருக்கே பெரிய தட்டுப்பாடு ஏற்படலாமென தமிழக மக்கள் கூறுகின்றார்கள். ஆனால் இவ் எதிர்ப்புக்களை கவனத்தில் எடுக்காது ஆந்திரா பாலாற்றில் நீர்த்தேக்க வேலைகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றது. மத்திய அரசாங்கமும் தமிழ்நாட்டின் முறையீடுகளைப் பற்றி பெரும் கவனம் செலுத்துவதில்லை என தமிழ்நாட்டு மக்கள் கூறுகின்றனர்.

சென்னைநகரின் குடிநீர்த்தேவைக்கு கிருஷ்ணா நதியிலிருந்து இவ்வாறு ஓடும் மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களை முறை 5TMC நீரை வழங்க உடன்பாடு கண்டனர். இதன்மூலம் சென்னை நகருக்கு 15 TMC தண்ணீர் கிடைக்கும். இது தெலுங்கு கங்கா திட்டம் என அழைக்கப்படுகிறது. இதன் மூலம் வரும் நீர் பூண்டி, சோலாவரம், செம்பரம்பாக்கம், செம்மலை நீர்த்தேக்கங்களுக்கு வந்துசேரும். இந்நீர் ஆந்திர மாநிலம் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து கால்வாய் வழியாக பூண்டி நீர்த்தேக்கத்திற்கு வந்து சேரும். ஆனால் சென்னைக்கு ஒழுங்காக குறித்த அளவு நீரைக் கொடுப்பதில்லை. நீர் கொண்டு வரும் வாய்க்கால் நல்ல நிலையில் பராமரிக் கப்படுவதில்லை என்றும் மேலும் நீர்வரும் வழியிலுள்ள கிராமத்தவர்கள் நீரை முறையற்ற விதத்தில் எடுப்பதை மாநில நிர்வாகம் கட்டுப்படுத்துவதில்லை என்று சென்னை நகர மக்கள் குறைப்படுகின்றனர். சென்னை நகர மக்கள் போதியளவு நீர் இன்மையால் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். ஆந்திரா நினைத்தால் தங்கள் நீர்ப்பிரச்சினைக்கு உதவ முடியுமெனச் சென்னை வாசிகள் கருதுகின்றனர். இத்திட்டம் சாய்பாபா அவர்களின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டுக்கு ஆந்திர எல்லைப் பகுதிக் காடுகளில் இருந்து செம்மரக் கடத்தல் இடம்பெறுகின்றதெனக் கூறப்படுகிறது. இச்செம்மரங்களை வெட்டப் பெரும் முதலாளிகள் ஏழைத் தமிழ்த் தொழிலாளர்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். கடந்த வருடம் திருப்பதிக் காட்டுப் பகுதியில் 26 தமிழர்களை ஆந்திர பொலிஸார் ஈவு இரக்கமின்றி மனிதப் பண்புகள் இல்லாது சுட்டுக்கொன்றனர். இக்கொலை குறித்து ஆந்திர பொலிஸ் அல்லது அரசியல் தலைவர்கள் கவலைப்படவில்லை. விசாரிக்கவும் அக்கறை காட்டவில்லை. இவர்கள் தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே இக்கொலைகள் பொறுப்பற்ற முறையில் செய்யப்பட்டதாக தமிழகத் தலைவர்களும் மக்களும் கருதுகின்றனர். தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கர்கள் அனுபவிக்கும் வசதிகளை, கௌரவத்தை ஆந்திராவில் வாழும் தமிழ்மக்கள் அனுபவிக்கவில்லையென கூறி தமிழ்மக்கள் கவலைப்படுகின்றனர்.

தமிழ்நாட்டுக்கும் கர்நாடகாவும் காவேரி ஆற்று நீர் பங்கீடு குறித்தும் தீராப்பிரச்சினை நிலவுகின்றது. இரண்டு மாநிலங்களும் சுதந்திர அரசுகளாக இருந்திருந்தால் மிகப் பெரிய போர் இடம்பெற்று இருக்கும். கர்நாடகா காவேரி நீரை விடாததால் தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களில் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

காவேரி ஆறு கர்நாடகத்தில் குடகுப் பகுதியில் உற்பத்தியாக தமிழ்நாட்டை ஹொக்கனேக்கலுக்கு அண்மையில் தமிழ்நாட்டுக்குள் பிரவேசிக்கின்றது. காவேரி தமிழ்நாட்டு வரலாற்றுடன் இரண்டாகக் கலந்தது. நடந்தாய் வாழி காவேரி என்ற சொற்பதம் சிலப்பதிகாரத்தில் வருகின்றது. கரிகாலசோழ மன்னன் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் கட்டிய கல்லணை இன்றும்பாவனையிலுள்ளது.

காவேரிபிரச்சினையை விளங்கிக் கொள்ள நைல், யூப்பிரட்டீஸ்– டைகிறீஸ், இந்து நதி ஆகியவற்றில் காணப்படும் பண்புகளை நோக்கின் காவேரி பிரச்சினையையும் விளங்கிக்கொள்வது இலகுவாகும். மேற்குறித்த ஆறுகளில் இவ் ஆறுகளின் கழிமுகம் (டெல்டா) பகுதிகளே முதலில் வளர்ச்சி பெற்றன. நைல் இல்லையென்றால் எகிப்து இருக்காது. அன்று இருந்த தொழில்நுட்ப அறிவில் கழிமுகப் பகுதிகள் மற்றும் சம வெளிப் பகுதிகளையே விருத்தி செய்யக் கூடியதாக இருந்தது. ஆறுகள் உற்பத்தியாகும் மலைப்பகுதிகள் இன்று போல அன்று நீர்த்தேக்கங்கள் அமைக்க முடியாதிருந்தது. இதனால் முன்னைய காலங்களில் ஆறுகளின் உற்பத்திப் பிரதேசம் மலைப்பாங்கான நடுப்பகுதிகளில் அணைகள் அமைத்து நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்படவில்லை.

காவேரி ஆறு கர்நாடகா, தமிழ்நாடு கேரளா மாநிலங்களுக்கு ஊடாக ஓடினாலும் கர்நாடகாவும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிடையே நீர்ப்பங்கீடு குறித்து பிரச்சினைகள் காணப்படுகின்றன. காவேரி ஆற்றின் பிரதான சந்தியின் குறுக்கே மேட்டூர் அணை அமைக்கப்பட்டுள்ளது. இந்த பெரிய நீர்த்தேக்கத்திலிருந்து திருச்சி, தஞ்சாவூர், நாகபட்டணம் மற்றும் கடலூர் மாவட்டத்தின் நீர்ப்பாசனத்துக்கு நீர் கொடுக்கப்படுகின்றது. காவேரியின் கிளையாறான பவானியில் பவானி சாகர் நீர்த்தேக்கமும் அமராவதி கிளையாறில் அமராவதி நீர்த்தேக்கம் நொயில் கிளை நதியில் நீர்த்தேக்கமும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் முதலாம் இரண்டாம் நான்காம் ஐந்தாம் ஆண்டுதிட்டங்களில் காவேரி ஆற்றை அடிப்படையாகக் கொண்டு பல நீர்த்தேக்கங்கள் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டதுடன் புதிய வாய்க்கால் மூலம் புதிய பல பிரதேசங்கள் நீர்ப்பாசனத்துக்கு கீழ் கொண்டு வரப்பட்டன.

இச் சூழ்நிலையில் கர்நாடக மாநிலத்தில் கிருஷ்ணசாகர் நீர்த் தேக்கம், கபினி நீர்த்தேக்கம், ஹேமாவதி நீர்த் தேக்கங்கள் மற்றும் பல நீர்த் தேக்கங்கள் உருவாக்கப்பட்டன. மேலும் மேகதத்தில் புதிய நீர்த் தேக்கம் அமைக்க கர்நாடக அரசு முயற்சித்துக் கொண்டு இருக்கின்றது. காவேரி நீர்ப் பங்கீடு குறித்து பல ஆணைக்குழுக்கள் வழங்கிய தீர்ப்புக்களை கர்நாடக அரசு ஏற்க மறுத்து வருகிறது. கர்நாடக மாநிலத்தின் நிலைப்பாடு, காவேரியில் தங்களது மாநில எல்லைக்குள் ஓடும் நீர் முழுவதும் தாங்களே பயன்படுத்த வேண்டும் என்பதே. இவர்களது கோரிக்கை சர்வதேச நியமத்துக்கு எதிரானது. சர்வதேச சட்டத்தின்படி ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள நிலத்தின் நீர்ப்பாசன தேவையை கருத்திற்கெடுத்து அதன் பின்னரே புதிய இடங்களுக்கு நீர்ப்பங்கீடு செய்ய முடியும். உதாரணமாக நைல்நதி உகண்டா நாட்டில் இருந்து உற்பத்தியாகி தென்சூடான், சூடான், எதியோப்பியா வழியாக எகிப்தை அடைகின்றது. தென்சூடான் அல்லது சூடான் அல்லது எதியோப்பியா நைல்நதியை முழுமையாக பயன்படுத்த முனைந்தால் எகிப்து இருக்க முடியாது. இது போல கர்நாடகா தனது மாநிலத்தில் காவேரியில் கிடைக்கும் முழுநீரைப் பயன்படுத்த முனைந்தால் 2000 ஆண்டுகளுக்கு மேலாக காவேரி நீரை நம்பியிருந்த தமிழ்நாட்டு மக்கள் என்ன செய்வது. தமிழ்நாடும் கர்நாடகமும் இப் பிரச்சினைக்கு அறிவுபூர்வமாக சிந்தித்து காவேரி நீர்ப் பங்கீட்டில் ஒரு முடிவுக்கு வர வேண்டும். ஒரு நாட்டின் இரு மாநிலங்களாக இருந்தும் இப்பிரச்சினையால் தமிழக விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஹொக்கனேக்கலில் அதாவது காவேரி தமிழ்நாடு – கர்நாடகா எல்லையில் மிகப் பெரிய நீர் மின் சக்தி உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு இருந்தும் மாநிலங்களுக்கிடையே காணப்படும் கசப்பான உறவால் இத்திட்டம் முன்னெடுக்கமுடியாது இருக்கிறது. ஹொக்கனேக்கலில் மாநில எல்லை குறித்து தமிழ்நாட்டுக்கும் கர்நாடகத்துக்கும் சிறுபிரச்சினை நிலவுகின்றது.

காவேரி பிரச்சினையால் கர்நாடகத்தில் வாழும் தமிழர்கள் 2001 ஆம் ஆண்டு கணிப்பின்படி 1,362,198 இருந்துள்ளனர். மற்றும் தமிழ் தொழில் முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். காவேரி பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட குழப்பத்தால் பெங்களூரில் இருந்த தமிழர் ஒருவருடைய பெரும் எண்ணிக்கையான பேருந்துகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பெங்களூர் மற்றும் மண்டய மாவட்ட தமிழர்கள் அடிக்கடி கர்நாடகர்களின் வன்செயலுக்கு முகம் கொடுக்க வேண்டி இருப்பதுடன் பயத்தால் தமிழகம் திரும்ப வேண்டிய நிலை ஏற்படலாம் எனப் பயந்து வாழ்கின்றனர். பெங்களூர் நகரில் 10 இலட்சம் தமிழர்கள் வாழ்வதுடன் இந் நகரின் வளர்ச்சிக்கும் கர்நாடகத்தின் பொருளாதாரத்திற்கு பெரியளவு பங்களிப்பு செய்கின்ற பொழுதும் அதற்குரிய கௌரவம், தமிழருக்கு கிடைக்கவில்லை. ஒரு மில்லியன் தமிழர்கள் பெங்களூரில் வாழ்கின்ற பொழுது அவர்கள் தங்களது தமிழ்ப் பண்பாட்டை பேணுவதில் பல தடைகளை எதிர் கொள்கின்றனர். பெங்களூரில் திருவள்ளுவர் சிலை நிறுவ எவ்வளவு காலம் எடுத்ததென்றும் அதன் பாதுகாப்புக்கு இன்றும் உத்தரவாதம் இல்லை. காவேரி பிரச்சினையும் சிறுபான்மைத் தமிழரின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால்தான் தமிழ்நாடு கர்நாடகத்துக்கு நல்லுறவு ஏற்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

எனவே வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதியில் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள குளங்களிற்கு மீன்பிடி வளர்ப்புத் திட்டம் மாகாண நிதியின் மூலம் முன்னெடுக்கப்படுமிடத்து வெலிஓயா மட்டும் ஏன் விதிவிலக்காக அமைய வேண்டும் என்ற கேள்வி எழுவதை இவ்வாணைக்குழு அவதானிக்கின்றது.

இது கொள்கை (Policy) சம்பந்தப்பட்ட விடயமாகின்றது. குளங்கள் யாருடைய கட்டுப்பாட்டினுள் வந்தாலும் அங்கு ஆரம்பிக்கப்பட்டு நன்னீர் மீன்வளர்ப்பு பயனாளிகளாக வடக்கு மாகாண மக்களே ஆகின்றனர். இதன் காரணமாக வடமாகாணத்தில் நன்னீர் குளங்களில் மீன்குஞ்சுகளை விடுவதில் வடக்கு மாகாணசபையின் பணம் வீண்விரயம் செய்யப்பட்டதாகவோ அல்லது மோசடி செய்யப்பட்டதாகவோ கருத எதுவித இடமும் இல்லை என விசாரணைக்குழு அபிப்பிராயம் கொள்கிறது.

மேலும் NAQDA தாபனத்துடன் இணைந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே கௌரவ அமைச்சர் செயற்பட்டுள்ளார் என்பதையும் அவரது சாட்சியத்திலிருந்து காணக் கூடியதாக உள்ளது. இது விடயத்தில் எதுவித முரண்பட்ட சாட்சியம் எம்முன் வைக்கப்படாத நிலையில் குறித்த கௌரவ அமைச்சரின் இச்செயற்பாட்டில் அதிகார துஷ்பிரயோகம் ஏதாவது இருந்ததாகவும் விசாரணைக்குழு கருதவில்லை.

### வட மாகாணத்தில் எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைகள் பின்பற்றாது போடப்பட்ட வீதிகள் தொடர்பில் நிதிமோசடி செய்தமை

மேலும் வட மாகாணசபையின் மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சருக்கெதிராக அடுத்த குற்றச்சாட்டு வட மாகாணத்தில் எல்லா மாவட்டங்களிலும் இவ் அமைச்சினால் போடப்பட்ட விதிகள் மாகாண சபையிலோ இவ் அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் விபரம் சமர்ப்பிக்கப்பட்டு முன் அமைதி பெறப்படவில்லை. இதனால் பெருமளவு நிதி மோசடி நடந்துள்ளதாக தெரிய வருகின்றது என்பதாகும்.

இவ்விடயத்தில் விசாரணைக்குழு ஆரம்பத்திலேயே இத்தகைய் மோசடிகள், உள்ளகக் கணக்காய்வு மூலமே கண்டுபிடிக்கப்படல் வேண்டும். இதற்கென மாகாண சபையில் ஒழுங்கு விதிகள் இருக்க வேண்டும் என்பதும் இவற்றை ஒழுங்குபடுத்துவது இந்த ஆணைக்குழுவின் வேலையில்லை என்பதும் முறைப்பாட்டாளருக்கு ஆணைக்குழு வினால் எடுத்துக் கூறப்பட்டது.

எனினும் விசாரணைக்குழு இம் முறைப்பாடு தொடர்பிலும் குறித்த அமைச்சரிடம் விசாரணைகளை மேற்கொண்டது. இந்தக் குற்றச்சாட்டு கௌரவ அனந்தி சசிதரன் என்பவரால் முன்வைக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த குறித்த அமைச்சர் தனது அமைச்சில் 2120 கி.மீ. நீளமான வீதிகள் மட்டுமே வருவதாகவும் இந்த வீதிகள் செப்ப னிடப்படும் போது Finance பிரதம செயலாளர் ஆகியோரின் அனுமதி யின் பின்னரே உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வீதிகள் புனரமைக்கப்பட்டதாக கூறியிருந்தார்.

மேலும் நிதி மோசடி குறித்து சாட்சி யளித்த கௌரவ அமைச்சர் வருடா வருடம் ஒதுக்கப்படும் தமது நிதியிலிருந்து கௌரவ முதலமைச்சர் உட்பட சகலருக்கும் 6 மில்லியனை அவர்களுடைய பகுதி வீதிகள் புனரமைக்கப்படுவதற்காக வழங்கப்பட்டது. எனினும் இந்த வருடமும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா 5 மில்லியன் கொடுப்பதாகவும் இந்த முறைப்பாட்டுக்காரரும் இந்த ஒதுக்கீட்டை பெற்று வீதி புனரமைப்பு செய்ததாகவும் ஆயினும் அவர் தனது அமைச்சு சார்ந்த ஆலோசனைக் குழுவில் அங்கத்தவராக இல்லை எனவும் சாட்சியமளித்திருந்தார்.

முறைப்பாட்டுக்காரர் விசாரணைக்குழு முன் தோன்றி தனது முறைப்பாடு தொடர்பில் உரிய சாட்சிகள், ஆவணங்கள் என்பவற்றை முற்படுத்தாத நிலையில் குறித்த அமைச்சரின் சாட்சியத்தை மறுக்க வேண்டிய நிலைமை ஆணைக்குழுவிற்கு ஏற்படவில்லை.


எனவே இங்கு நிதி மோசடி அல்லது அதிகார துஷ்பிரயோகம் ஏதாவது நிகழ்ந்தது என்பதற்கு போதிய சாட்சியம் விசாரணைக்குழு முன் இருக்கவில்லை.

### ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றாமல் பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டமை

மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சருக்கெதிராக கௌரவ அனந்தி சசிதரன் முன்வைத்த அடுத்த குற்றச்சாட்டு பேருந்து தரிப்பு நிலையங்கள் வடமாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் நிறுவப்பட்டன. இதற்கு மாகாண சபைக் கூட்டங்களில் அல்லது இவ்வமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் முன் அனுமதி பெறப்படவில்லை. இதனால் பெருமளவு நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது என்பதாகும்.

முறைப்பாட்டாளர் சமுகமளிக்கத் தவறியமையினால் இக் குற்றச்சாட்டிற்குரிய சாட்சியங்கள், ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக முதற் தோற்ற அளவிலேயே இக்குற்றச்சாட்டு hearsay evidence இல் தங்கி நிற்பது தெளிவாகின்றது. எனினும் இக்குற்றச்சாட்டும் ஆணைக்குழுவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இக் குற்றச்சாட்டு தொடர்பில் குறித்த கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தின் போது இந்த பஸ்தரிப்பு நிலையங்கள்



பலரின் வேண்டுகோளுக்கிணங்க கட்டப்பட்டதாகவும் 2014ஆம் ஆண்டில் வேலைகள் உரிய காலத்தில் முடியவில்லை என்றும் இதற்கான காரணம் வட மாகாணத்தில் உரிய ஒப்பந்தகாரர் இல்லை என்றும் அவர்கள் பல வேலைகளை வட மாகாணத்தில் எடுப்பதால் வேலைகள் உரிய காலத்தில் முடியவில்லை என்றும் இதனால் 2015ஆம், 2016ஆம் ஆண்டுகளில் தமது அமைச்சின் கீழுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஒரு பஸ்தரிப்பு நிலையம் அமைக்க தேவையான நிதி எவ்வளவு என்ற உரிய மதிப்பீடு பொறியியலாளரினால் செய்யப்பட்டு பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய இடம் தெரிவு செய்யப்பட்டு கேள்வி கோரல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டதாகவும் நூற்றுக்கும் அதிகமான சிறிய பஸ்தரிப்பு இடங்கள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டது எனவும் சாட்சியமளித்தார். இக் குற்றச்சாட்டுத் தொடர்பிலும் இம் முறைப்பாட்டாளரால் எதுவித சாட்சியம், ஆவணங்கள் எவையும் விசாரணைக்குழு முன் வைக்காத நிலையில் குறித்த கௌரவ அமைச்சரின் சாட்சியத்தை நம்ப, மறுக்க வேண்டிய நிலை ஆணைக்குழுவிற்கு ஏற்படவில்லை.

எனவே இங்கு நிதி மோசடி அல்லது அதிகார துஷ்பிரயோகம் ஏதாவது நிகழ்ந்தது என்பதற்குரிய போதிய சாட்சியம் ஆணைக்குழுவின் முன் இருக்கவில்லை. ஒரு குற்றச்சாட்டு குறித்த கௌரவ அமைச்சருக்கு எதிராக வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் வீதியில் ஒரு பையனை கண்டு நீ ஏன் வீதியில் சும்மா திரிகின்றாய்இ ஒரு பஸ்தரிப்பிடத்தை எடுத்துக் கட்டு. நான் உனக்கு பணம் தருகிறேன் என்று கூறினார் என்பதாகும்.

இக் குற்றச்சாட்டும் கௌரவ ஆனந்தி சசிதரனினால் செய்யப்பட்டதாகும். அவர் தமது குற்றச்சாட்டில் குறித்த வாலிபனே இந்தக் குற்றச்சாட்டை தமக்குத் தெரிவித்ததாகக் கூறியிருந்தார். ஆயினும் குறித்த வாலிபர் விசாரணைக்குழு முன் சாட்சியாக வராத நிலையில் இதுவும் ஒரு கேள்வி வழி சாட்சியமாகிறது. (hearsay evidence) ஆயினும் விசாரணைக் குழு இந்தக் குற்றச்சாட்டு தொடர்பிலும் விசாரணை நடத்தியது.

இந்த விடயம் குறித்து கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தின் போது ஆரம்பத்தில் பல ஒப்பந்தகாரர்கள் ஐந்து மாவட்டங்களிலும் தம்மை அணுகி வீதி, கட்ட வேலைளை தமக்கு வழங்குமாறு கோரியதாகவும் அது பிழையான நடைமுறை என்பதால் பிரதம செயலாளரின் அனுமதியோடு பத்திரிகைகளில் கீழ் பதிவு செய்யப்பட்டவர்களைத் தவிர வேறு எவருக்கும் இந்த வேலைகள் கொடுக்கப்படவில்லை என்றும் தான் அப்படி எவருக்கும் கூறவில்லை என்றும் சாட்சியமளித்திருக்கிறார்.

குறித்த கௌரவ அமைச்சரின் இச் சாட்சியத்தை நம்ப மறுக்க வேண்டிய நிலை எதுவும் விசாரணைக்குழுவிற்கு ஏற்படவில்லை. மேலும் இக் குற்றச்சாட்டு கேள்வி வழிச் சாட்சியாக அமையும் காரணத்தால் அதனை இவ் விசாரணைக்குழு நிராகரிக்கிறது.

2.4 போராளிகள் , மாவீரர்கள் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒரு கோடி நிதியை சரியான முறைகளை பின்பற்றாது போராளிகளின் வாழ்வாதார உதவி பயனாளிகள் தெரிவில் சரியாக தெரிவு செய்யாது முறைகேடுகளை பின்பற்ற மோசடி செய்தமை

குறித்த கௌரவ அமைச்சருக்கு எதிராக இக் குற்றச்சாட்டை முன்வைத்தவரான கௌரவ அனந்தி சசிதரன் இது தொடர்பிலும் விசாரணைக்குழு முன் இக் குற்றச்சாட்டை எண்பிப்பதற்குரிய சாட்சியங்கள் ஆவணங்கள் என்பவற்றை முற்படுத்தத் தவறிவிட்டார். எனினும் விசாரணைக்குழு குறித்த அமைச்சரிடம் இவ்விடயம் குறித்து விசாரணை நடத்திய வேளையில் கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தில் 1 கோடி ரூபா நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் 2015இல் 43 மில்லியனும் 2016இல் 25 மில்லியனும் பயன்படுத்தி உள்ளதாகவும் தமக்கு கிடைக்கப்பெற்ற 16000 க்கு மேற்பட்ட விண்ணப்பப் படிவங்களில் தெரிவு எவ்வாறு இருக்க வேண்டும் என திணைக்களத்திற்கு பணிப்புரை கொடுத்ததாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும் இத் தெரிவு முறையில் தமிழ் அரசியல் கைதிகள் அத்துடன் கணவன்மாரை இழந்துள்ள பெண் போராளிகள், முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்கள், அவயவங்களை இழந்தவர்கள். இரண்டிற்கும் மேற்பட்ட போராளிகளை இழந்திருக்கும் குடும்பங்களை உள்வாங்குவது என்ற பிரமாணத்தின் அடிப்படையில் செயலாளர், பணிப்பாளர் ஆகியோருடன் ஆலோசித்துத்தான் கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் கூறியிருந்தார்.

எனவே பயனாளிகளை போராளிகள் குடும்பங்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யும் விடயத்தில் ஒரு கொள்கை அடிப்படையிலான முடிவு எட்டப்பட்டுள்ளமை குறித்த கௌரவ அமைச்சரின் சாட்சியத்திலிருந்து தெளிவாகின்றது. இத்தகைய முடிவிற்கு மேலாக பாரபட்சம் காட்டப்பட்டது என்ற சாட்சியம் இந்த விசாரணைக்குழுவின் முன் வைக்கப்படாத நிலையில் இக்குற்றச்சாட்டையும் இவ் விசாரணைக்குழு நிராகரிக்கின்றது.

எனவே குறித்த மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா.டெனீஸ்வரனுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்ற முடிவிற்கு இவ் விசாரணைக்குழு வருகின்றது.

3. வட மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்தறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசாவிற்கு எதிரான முறைப்பாடுகள்.

வடமாகாணசபையின் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசாவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 2017.02.25 திகதி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அமைந்துள்ள வட மாகாண சபை மகாநாட்டு மண்டபத்தில் இந்த விசாரணைக்குழுவினால் விசாரணை நடத்தப்பட்டது.

மேற்படி கௌரவ அமைச்சருக்கு எதிராக வட மாகாணசபை உறுப்பினர்களான கௌரவ அனந்தி சசிதரன் கௌரவ க.சர்வேஸ்வரன் , கௌரவ ச. சுகிர்தன், கௌரவ பசுபதி அரியரட்ணம் அவர்களினால் முறைப்பாடுகள் முன்வைக்கப்ட்டன.

இம் முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களையும் மாகாண சேவையில் பணியாற்றிய உத்தியோகத்தர்களையும் இம் முறைப்பாடுகளின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டு வருவதாக விசாரணைக் குழு, சாட்சியமளிக்க அழைப்பாணை அனுப்பியிருந்தது. அதனடிப்படையில் முறைப்பாட்டாளர்கள், மாகாண பிரதிநிதிகள், விசாரணைக்குழுவின் முன் தோன்றி சாட்சியமளித்துள்ளனர்.

முறைப்பாட்டாளர்களது சாட்சி மற்றும் ஆவண சாட்சிகளின் படியும் அம் முறைப்பாடுகள் தொடர்பாக சாட்சியமளித்த சாட்சிகளின் சாட்சியங்கள் அடிப்படையிலும் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றம் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசாவிற்கு எதிராக வழக்கு தொடுநரால் பின்வரும் 09 குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

I வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவபாதம் நந்தகுமார் என்பவர் 58 வயது 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில் அவருக்கு 16.01.2017இல் தவறான இடமாற்றம் ஒன்றை வழங்கி இருந்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

II யா/ யூனியன் கல்லூரி அதிபரின் நியமனத்தில் யூனியன் கல்லூரி பழைய மாணவராக இருந்த திரு.வரதன் மாஸ்டர் என்பவரை ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் செல்வாக்கு மூலம் கொஞ்சகாலம் படித்த காரணத்திற்காக அவரை அப்பாடசாலையின் அதிபராக நியமிக்க மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை.

III குறித்த வரதன் என்பவர் கல்விக்கான கற்கை விடுமுறையில் இருக்கும் போது அவரை அதிபராக நியமித்ததன் மூலம் அதிகார துஷ்பிரயோகம் புரிந்தமை.

IV குறித்த அதிபரின் நியமனத்தை உடன் நிறுத்துமாறு மாகாணசபையில் கௌரவ முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாகாண சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் அதனை செயற்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காது இருக்க செயலாளரை தடுத்தமை.

V அ. 2015ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி பாரதிபுரம் அதிபர் அப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன், கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சருக்கு முறைப்பாடு செய்திருந்தபோதும் அவ் அதிகாரிகளுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமை.

ஆ. குறித்த அதிபர் பாடசாலை மாணவியுடன் தகாத முறையில் நடந்துகொள்ள முயன்ற விடயத்தை பாடசாலை வகுப்பாசிரியர் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.முருகவேளுக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்தார். அதற்காக அவ் ஆசிரியர் பழிவாங்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.முருகவேளினால் இடமாற்றம் செய்யப்பட்டமை.

இ. குறித்த ஆசிரியரின் கடித மூலமான முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அவ் ஆசிரியரை ஏனைய ஆசிரியர்கள் முன்னிலையளில் கொச்சைப்படுத்தியமை தொடர்பாக கௌரவ அனந்தி சசிதரன், கௌரவ கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததும் வலயக் கல்விப் பணிப்பாருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்காமை.

VI கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் தனக்கேற்றவர்களை அதிபராக நியமனம் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை.

VII வட மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர் மாநாடு என்ற பெயரில் பெருமளவில் நிதி செலவழித்து வீண்விரயம் செய்தமை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞான பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமனம் செய்தல்- 2017

வடமாகாணபாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு நியமிப்பதற்காக 2017.05.25, 2017.05.26, 2017.06.05 ஆம் திகதிகளில் வடமாகாண கல்வி அமைச்சில் நடைபெற்ற நேர்முகத்தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்குத் தோற்றி தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நாளை 2017.06.10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

நியமனங்களை பெற்றுக்கொள்ள தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் விபரங்கள் வருமாறு,

த. தர்ஷிகா-847831103V- யாழ்ப்பாணம், த.சாரூபன்-901233012V - யாழ்ப்பாணம், க.விமோச்சன்- 892661022V - யாழ்ப்பாணம், சு.மகேந்திரன் - 820683234V- கிளிநொச்சி, சி.கணேசதாஸ் -812442970V- வவுனியா, கு.பிரபாலினி -908260040V- கிளிநொச்சி, சே.யோகத்தாஸ்- 830463798V- முல்லைத்தீவு, க. சாந்தலிங்கம் -813412373V- யாழ்ப்பாணம், த. வசீகரன் - 790933800V-முல்லைத்தீவு, இ.கஜேந்திரன்- 810932201V- யாழ்ப்பாணம், மு.கஜனி- 907292690V- யாழ்ப்பாணம், ஜீ.நிரோஜினி -9083.41180V- யாழ்ப்பாணம், தே.மோகனராஜா- 197404404239- யாழ்ப்பாணம், வ.மதிவண்ணன் - 733123281V - யாழ்ப்பாணம், கி.பிரஷாந்தன் -852591234V- யாழ்ப்பாணம், பி.லோகிதன் -902800050V-முல்லைத்தீவு, ஜெ.அகிம்ஷா- 915902898V- யாழ்ப்பாணம், ச.வனுறாகினி - 918011722V யாழ்ப்பாணம், ரா.விஜிதா -928601161 V- யாழ்ப்பாணம், செ.தர்சிகா- 917413860V - யாழ்ப்பாணம், நி. சயனுதா- 907782050V- யாழ்ப்பாணம், ம.ஆரணி -198372401600- யாழ்ப்பாணம், நி. வைஷ்ணா- 907692418V-கொழும்பு - 06, க.ராகுலன் -892493332V- யாழ்ப்பாணம், சி.ஹர்ஷன் -761812262V- யாழ்ப்பாணம், ஜெ.ஜெயந்தன் - 782330802V- யாழ்ப்பாணம், ப.சுகன்யா- 827512184V- யாழ்ப் பாணம், சு.கிர்ஷாந்தன் - 892301522V- யாழ்ப்பாணம், ச.சாரங்கா - 199075901921- யாழ்ப்பாணம், ரொ.சிவபிரபா- 796434880V- மன்னார், ந.பிரணவன்- 911122707V- யாழ்ப்பாணம், பா.ஊர்மிலா-906822822V- முல்லைத்தீவு, வீ.தாமிரா- 906403137V- யாழ்ப்பாணம், சி. கிருபாளினி-915182550V- யாழ்ப்பாணம், மோ.நிஷாந்தி - 918401806V- வவுனியா, இ.தவேஸ்வரன் -752123535V-யாழ்ப்பாணம், ம.கிருஷாலினி -907741958V- வவுனியா, சி. மீனலோஜினி 817691200V- யாழ்ப்பாணம், தி.கோமதி -895920606V- யாழ்ப்பாணம், கி.அனுஷா -787203191V- யாழ்ப்பாணம், சி.நளன் - 912272940V-யாழ்ப்பாணம், ந.ரமணன் -891673825V- யாழ்ப்பாணம், ர.துர்க்கா-927243512V- வவுனியா, வா.சஞ்ஜிவன்- 911042479V- யாழ்ப்பாணம். சு. சுதேஸ்வரன் - 782412760V- யாழ்ப்பாணம், இ.செல்வபவிதா - 918041478V- யாழ்ப்பாணம், சு.சுகன்யா -905863770V- யாழ்ப் பாணம்,க.சபேசன் - 19773190 3916- யாழ்ப்பாணம், த.சுஜித்திரன் -751490542V- யாழ்ப்பாணம், ச.தயானந்தி - 895692697V- யாழ்ப்பாணம், கு.துசிதா- 91 56 63214 V- யாழ்ப்பாணம், ர.ரவித்தா - 908201213V- யாழ்ப்பாணம், ப.பாமா -865652410V- யாழ்ப்பாணம், ஜெ.காஞ்சனா - 896472470V- யாழ்ப்பாணம், நா.சிவாரகா- 908612647V- கிளிநொச்சி, அ.ராதா - 838544665V- முல்லைத்தீவு, கை.கிரிஷாந் - 891840853V- யாழ்ப்பாணம்,நா.சாஜிபிரசாந்- 921312342V- வவுனியா, க. ஜெகஜீவகன் -801862543V- யாழ்ப்பாணம், க.தயாளன் -90 2111999V- யாழ்ப்பாணம், அ.ஜெயவதனி -727070923V-மன்னார், ஜெ. றெமின்ரன் -901052654V- யாழ்ப்பாணம், செ.சிவதர்ஷணா- 907053024V- கொழும்பு - 06, தோ.விமலதாஸ்-890062482V- மன்னார், அ.முகிலினி -895033979V-யாழ்ப்பாணம்,ப. கஜேந்திரன் -870933274V- முல்லைத்தீவு, சா.றொஜன் -800125006V- யாழ்ப்பாணம், ந.அனந்தன் 913033507V- யாழ்ப்பாணம், க. சுவர்ணா -198970701975- யாழ்ப்பாணம், தி.பதுமநிதி 916522495V - யாழ்ப்பாணம், ச.நிரோசனா 198961503587- யாழ்ப்பாணம், மா.சிந்துஜா- 847730633V- வவுனியா.த. கஜந்தா -876812975V- யாழ்ப்பாணம், கி.ஷசீந்திரன் -198506810038- யாழ்ப்பாணம் , ச.வரதலக்சுமி -746161824V- யாழ்ப்பாணம், ஸ்ரீ.ராதிகா- 818280599V- யாழ்ப்பாணம், ச. சஜீவன் -900240406ஏ- யாழ்ப்பாணம், சி.பூரணி- 807631110V- யாழ்ப்பாணம், சி.இந்திரகுமார் - 771283225V- யாழ்ப்பாணம், ஞா.பிரியங்கா-907252256V- யாழ்ப்பாணம், சி.தர்மி-888461230V- யாழ்ப்பாணம், ந.துர்க்காதீபன்-198125702229 - யாழ்ப்பாணம், செ.சர்வகா -936101348V -யாழ்ப்பாணம், த. ஜனந்தினி-906893134V- யாழ்ப்பாணம், பா.ரவிநாதன் -921081383V- வவுனியா, சி.அருந்துஷா- 907412300V - வவுனியா, கி. மயூரதி - 198567502461- யாழ்ப்பாணம், ஸ்ரீ.திருத்தணிகைக்குமரன் - 901894329V - வவுனியா, மி.நிரோஜினி-906222060V- முல்லைத்தீவு, மு.பாத்திமா பர்ஸானா-925890510V- புத்தளம். யோ.பத்மகாந்-900231245V -முல்லைத்தீவு, ட. மேரி ரேணு சிரோமி -886292201V - மன்னார், க.நிரோஜா-926003658V- மன்னார், ந.டினோஜன் - 910300709V- யாழ்ப்பாணம்,தி. நிரூயா- 906192934V-யாழ்ப்பாணம், செ.வாணிசிறி- 897801140V - யாழ்ப்பாணம், சு. துவாரகா-90 5523074V- யாழ்ப்பாணம், யோ. மெரின்சா- 918431560V முல்லைத்தீவு.ஜ.முகம்மது அஷ்ராஜ்- 9015 90 931V - புத்தளம். யோ.மேரி - 908453336V - மன்னார், வை. வைதேகி-906782242V - யாழ்ப்பாணம், தி.சிபாஜினி -915863710V - யாழ்ப்பாணம், மு. றக்ஸானா -916903278V-மன்னார், சி.சத்திய கீர்த்தி -770283671V- வவுனியா. கி.சுரேஸ் - 901151229V - யாழ்ப்பாணம், ச.துளசிகா-1989[illegible]0712-கிளிநொச்சி, து.[illegible] 896851861V-வவுனியா, ச.பவித்திரா-918052585V - முல்லைத்தீவு,தி. மதுவாணி -77 84 72732V- முல்லைத்தீவு, க. ஜமுனாகவி- 898342166V - முல்லைத்தீவு, ச .சிவராசா - 862441389V - கிளிநொச்சி, தி. ஸ்ரீரஜீவன் -891894120V- யாழ்ப்பாணம், தே. ரூத்லக்ஷிதா -198761603543 - யாழ்ப்பாணம், த.அருள்குகன் - 751762216V-முல்லைத்தீவு, சி. மாதங்கி- 916081154V - முல்லைத்தீவு, சி.தட்சிகா - 89 69 43634V-முல்லைத்தீவு, வே. கிருஸ்ணாளினி -905922947V - யாழ்ப்பாணம். பொ.கிரிஷன் - 860962268V-முல்லைத்தீவு, செ.லாவண்யா - 918380639V- யாழ்ப்பாணம், மு.துவாரகா - 906333341V -யாழ்ப்பாணம், ந.விகின்டறாஜ்-791204275V- யாழ்ப்பாணம், ச.பாத்திமா இஸ்மியா - 928251403V- யாழ்ப்பாணம், ச.ஆதித்தன் -893302760V- யாழ்ப்பாணம், தி.கெமில்ரன் - 892855013V - கிளிநொச்சி, தே. மேரி நிலோஜா - 897532255V- மன்னார், நா. ஹரிரமணன் - 923564039V -யாழ்ப்பாணம், இ.சிவரூபன் -850701180V - யாழ்ப்பாணம், சி.நிசாந்தன் - 903342285V -யாழ்ப்பாணம், சு.காண்டீபன் - 198916001271 வவுனியா, அ. அஷானி -876 102706V - யாழ்ப்பாணம், வி.நவநீதபாரதி-877602680V-வவுனியா, ச.சசிகரன்-851100067V - யாழ்ப்பாணம், சி. ஷிவரங்கன் 901972591V - யாழ்ப்பாணம், ச.விதூசா -907003124V - கிளிநொச்சி, ப.நிஷானி -916103220V - யாழ்ப்பாணம், கு.சொறூபிகா -897771209V- யாழ்ப்பாணம், யே. ஏபனேசர் கிறிசாந்தன் - 932910276V - மன்னார், நா.பத்மகௌரி - 915711758V- கிளிநொச்சி, அ.புவனேஸ்வரி - 836985079V - வவுனியா, த.கோகிலா - 916083130V- மன்னார், றொ. கிறிஸ்ரீனா ஷியாமலர் கூஞ்ஞு- 906404354V- மன்னார், சி.கிருபாலினி -935231132V-யாழ்ப்பாணம், இ.ஆரூஷன் -89 2381623V- வவுனியா, க.தயாளினி 906023555V- யாழ்ப்பாணம், யோ.சிந்துஜன் -198713901076 - யாழ்ப்பாணம், தெ.தீபன்-892573581V - யாழ்ப்பாணம், இ. அனற் நிந்துஷா -89682315 9V- யாழ்ப்பாணம், சி.சிவசக்திகரன் - 893270396V-யாழ்ப்பாணம், வ.கிருஸ்ணானந்தி -898510565V- யாழ்ப்பாணம், இ.திலக்ஷி - 927851261V-யாழ்ப்பாணம், உ. ரகுபோசன் - 892554323V - முல்லைத்தீவு, அ.முகம்மது -850105510V-புத்தளம், வி.நிசாந்தினி- 895234206V- மன்னார், சி. கிருசாந் - 198903702651 வவுனியா, சு.சுதாகரன் -823075936 V - வவுனியா, செ.மாதினி -918111026V-யாழ்ப்பாணம், தே.சஜந்திகா -908340450V- யாழ்ப்பாணம், த. சாந்ததீபன் - 881983818V- முல்லைத்தீவு, ப.ஜனனி -917634041V- மன்னார்,தே. பாமினி -935152356V- கிளிநொச்சி, ஜெ.பவதாரணி -816981921V- யாழ்ப்பாணம், ஞா.ஹஜரூபா - 897951045V- யாழ்ப்பாணம், ஸ்ரீ. உதிஸ்டிரன் - 86 2463340V- யாழ்ப்பாணம், பொ. சிவகுமார் -[illegible]- யாழ்ப்பாணம், அ.[illegible] -856722988V- யாழ்ப்பாணம், கோ.அனுசியா - 918401520V- யாழ்ப்பாணம்.கி. தர்ஸானன் - 922232830V -யாழ்ப்பாணம், ந.மொகமட் கியாஸ் - 198722100261- மன்னார், ம.புனிதராசா - 771561900V- யாழ்ப்பாணம், ஜெ.வரதரூபி -826234 440V- யாழ்ப்பாணம், லெ.யூட் மயூறன்- 923431454V-மன்னார், கோ. ஜெயந்தன் -902432477V - யாழ்ப்பாணம், றெ.அனுசியா -198884500980-மன்னார், ஆ. விஜித்திரா -917192871V- முல்லைத்தீவு, ஆ.பிரசன்னா-89 2754659V- யாழ்ப்பாணம், க.பிரகாஷ் - 910160729V-யாழ்ப்பாணம், பு. சஜி-902792147V- யாழ்ப்பாணம், க.மருதாகினி - 918331760V-யாழ்ப்பாணம், து.சந்திரமோகன் -770174880V- முல்லைத்தீவு, பா.பானுஜா - 936510744V- யாழ்ப்பாணம், எ.கான்சியூஸ் தௌமினி -917941688V- முல்லைத்தீவு, மு. ஜோதீஸ்வரன்- 740112767V - யாழ்ப்பாணம்,அ.அச்சுதன் -881702568ஏ- வவுனியா, த.விதூஷியா-928442870V- வவுனியா, அ.கஜானன் - 912662055V- யாழ்ப்பாணம், சி.ஆதித்தன்- 920692613V-யாழ்ப்பாணம், வீ. தீபன் -820311574V- முல்லைத்தீவு, ம. கோணேஸ்வரன் - 731462747V- யாழ்ப்பாணம், சி.ஸ்ரீறஞ்சன் - 912213218V- யாழ்ப்பாணம், த.லக்சன் - 911622556V- யாழ்ப்பாணம், தே. புவானி-745132553V-வவுனியா, ப.யூட்நிசான் -912192636V- கிளிநொச்சி, ப.விப்சன் - 902012753V-முல்லைத்தீவு, க. உமாஜினி - 916823398V- யாழ்ப்பாணம், ச.சிவனுஜா -906660890V- யாழ்ப்பாணம், பெ.டிலக்பறுனாந்து - 9034 80 424V- மன்னார், வே.நிஷாந் - 833143859V-யாழ்ப்பாணம், கா. கார்த்திகா -925412090V- யாழ்ப்பாணம், சி.ஜெயசுதன்- 903123397V-யாழ்ப்பாணம், கி.ஆன் வேளாயினி -915710859 V-மன்னார், சி.பிரகாஷ் -91126 1243V- யாழ்ப்பாணம், கோ.சுகந்தன் - 903072911V-யாழ்ப்பாணம், சி.சிவதனுஷன் - 901342 466V யாழ்ப்பாணம், உ.நிதர்ஷா -915883974V- யாழ்ப் பாணம், ம.பிருந்தா -9080011 68V- கிளிநொச்சி, வை.வினித்தா-925411302V- யாழ்ப்பாணம், சா. கஸ்தூரி - 905550276V - யாழ்ப்பாணம், சி. பரிகரன் -902171053V-மன்னார், ஜெ.ஜெசிதா -915783511V-யாழ்ப்பாணம், தே. தீபசாலினி -926641433V- யாழ்ப் பாணம், து.சுகன்யா -9178718 84V-யாழ்ப்பாணம், இ.சுரேக்கா - 907792218V-யாழ்ப்பாணம், ம.கவிதா - 198664610020-யாழ்ப்பாணம், த. தார்மீகன் -197918002520- யாழ்ப்பாணம், அ.கீர்த்திகா - 198377410021- மன்னார்.ரா. கோணேசன் -83 6170415V- யாழ்ப்பாணம், ஜெ. ஜனார்த்தனன் - 892640610V- யாழ்ப்பாணம், பி. லாபகன் -910 462164V- வவுனியா, ரா.சுரேஸ்குமார் -870090803V -மன்னார்.

எனவே தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் (பெண்கள் இள வர்ண சாறியுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளைநிறசேட்டும் அணிந்து) நாளை காலை 9மணிக்கு தவறாது யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் அறிக்கையிட்டு தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# பௌர்ணமி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கிழக்கு கலட்டி ஐக்கிய சனசமூக நிலைய பௌர்ணமி விழா சர்வதேச சுற்றுச் சூழல் தின விசேட நிகழ்வாக இன்று மாலை 6.45 மணியளவில் ஜெயச்சந்திரன் கலையரங்கில் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி வைத்தியசாலை பரிசாரகர் திருமதி. ரவிச்சந்திரா யோகராசா கலந்து கொள்வார்.

இதில் சூழல் பாதுகாப்பு எனும் பொருளில் மகாலிங்கம் பிரபாகரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ

# மாணவர் ஒன்றியம் நடத்தும் இலவச மருத்துவ முகாம்

யாழ்.பருத்தித்துறை மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலய பழைய மாணவர் ஒன்றியம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை யாழ், மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளின் வைத்திய நிபுணர்கள் சேவை புரிய முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# வாழ்வகத்தின் முத்தமிழ்விழா

சுன்னாகம் வாழ்வகத்தின் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் முத்தமிழ் விழா நாளைமறுதினம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாழ்வக செல்லா மண்டபத்தில் காலை 9 மணிக்கு முத்தமிழ் மன்றத் தலைவர் பொன்னம்பலம் தீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுறுபாய ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் ஜி.பி.அல் பிறட், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை உதவி விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-7)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு- ஒரு பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இந்திய மாநிலமான தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்களை எல்லையாகக் கொண்டன. மேலும் சிறுசிறு தொடர்ச்சியற்ற பாண்டிச்சேரி மத்திய அரசுப் பரப்புக்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. தெற்கில் மன்னார் குடாவும் பாக்குநீரிணையும் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே காணப்படுகின்றது. இலங்கை சுதந்திரமான நாடாக இருப்பதால் இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் கடல் எல்லை சர்வதேச கடல் எல்லையாக இருக்கின்றது.




ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்கள் தமிழ்நாட்டைப் போல் இந்திய மாநிலங்களாகும். எனினும் இந்த மூன்று மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் இன்று நல்ல உறவு இல்லை. நதி நீர்ப்பங்கீடு, சிறுபான்மையாக வாழும் தமிழர்கள் பிரச்சினை, எல்லைப் பிரச்சினைகள் மத்திய அரசுத் திட்டங்கள் பெறுவதில் ஏற்படும் போட்டிகள் போன்றவற்றால் தமிழ்நாட்டுக்கும் தென்னிந்திய மாநிலங்களுக்கு மிடையில் நல்ல உறவு இல்லை.

ஆந்திராவுக்கும் தமிழ்நாட்டுக்கும் அதாவது தெலுங்கர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே நீண்ட காலமாக இனிப்பு/புளிப்பான உறவு இருந்து வந்துள்ளது. தமிழ்நாட்டில் சோழர் பின்னர் பாண்டியர் ஆட்சி நிலைகுலைய விஜயநகர ஆட்சி மேலோங்கியது. நாயக்க மன்னர்களும் பின்னர் பாளையக்காரர் ஆட்சி மேலோங்கிய பொழுது தெலுங்கர்களின் செல்வாக்கு தமிழகத்தில் ஏற்படலாயிற்று. மேலும் தெலுங்கர்கள் வட தமிழ்நாட்டில் பெரியளவில் குடியேறலாயினர். இதனால் தெலுங்குக் கலாசாரம் மேலோங்கியது. கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளும் தெலுங்கிலேயே கீர்த்தனைகளை உருவாக்கிப் பாடினர். இதனால் கர்நாடக சங்கீதம் தெலுங்கு வழி வந்ததாக இருந்தது.

சென்னை இராசதானி Madras Presidency அமையப்பெற்ற பொழுது இன்றைய தமிழ் நாட்டுப் பகுதிகள் கரையோர ஆந்திரா, ராயலசீமா மற்றும் கர்நாடகத்தின் தென்பகுதிகள் மற்றும் கேரளாவின் வடபகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. 1920களில் இருந்து இந்தியா சுதந்திரம் அடையும் வரை இருந்த முதலமைச்சர்களில் கூடியவர்கள் தெலுங்கர்களாக இருந்ததுடன் சென்னை இராசதானியில் தெலுங்கர்கள் கூடிய முக்கியத்துவம் பெற்றிருந்தனர். 1953 இல் ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டது. மேலும் தெலுங்கர் சென்னைப் பட்டணத்திலும் உரிமை கோரினர். சென்னை தமதே என்று குரல் எழுப்பினர். இப்பிரச்சினைக்கு தீர்வாக சித்தூர் மாவட்டம் திருப்பதி அடங்கலாக ஆந்திராவுக்குக் கொடுக்கப்பட்டது. சித்தூர் மாவட்ட இழப்பு தமிழ்மக்களுக்கு பெரும் கவலையளிப்பதாக இருந்தது. திருப்பதி வேங்கடேஸ்வரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்கள், தமிழர்களுக்கும் இக்கோயிலுக்குள்ள தொடர்பைக் காட்டும். மேலும் மிகப் பழைய வரலாற்றுக் காலத்தில் இருந்து தமிழ் கூறும் நல்லுலகின் வடக்கு எல்லை வேங்கடமலை எனக் கூறப்பட்டது. 1959 இல் ஆந்திர முதல்வர் நிஜலிங்கப்பாவுக்கும் தமிழ்நாட்டு முதல்வர் காமராஜருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் 300 எல்லைக் கிராமங்கள் கைமாறப்பட்டன. இதனால் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது.

ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டு சித்தூர் மாவட்டம் ஆந்திர மாநிலத்திற்குக் கீழ் கொண்டு வரப்பட்டதால் சித்தூர் மாவட்ட தமிழர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். 2001 ஆம் ஆண்டு 1886785 இற்கு மேற்பட்ட தமிழர்கள் தமிழ்நாட்டு எல்லையோரமாக ஆந்திர மாநிலத்தில் வாழ்கின்றார்கள். இவர்கள் தங்களை தமிழ்நாட்டுடன் இணைக்குமாறு அடிக்கடி கோரிக்கை விடுவர். மேலும் ஆந்திராவில் வாழும் தமிழர்கள் ஆந்திர அரசியலில் சிறிதளவு பங்கு கொள்ளவில்லை. மேலும் ஆந்திர மாநிலத்தில் வாழும் தமிழர்கள் தங்கள் மொழியுரிமையைப் பேணுவதில் கஷ்டப்படுகின்றார்கள். மேலும் தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் அபிவிருத்தியில் பின்னிற்கின்றதென்ற குற்றச்சாட்டை தமிழ்த்தரப்பு முன்வைக்கின்றது.

தமிழ்நாட்டில் இன்றைய மக்கள் தொகையில் 8.65 வீதத்தினர் தெலுங்கர்கள். இவர்கள் சென்னையிலும் கிருஷ்ணகிரி, வேலூர், திருவள்ளுவர் போன்ற எல்லையோர மாவட்டங்களிலும் கூடுதலாக வாழ்கின்றனர். தற்பொழுது தெலுங்கர்கள் தமிழ்நாட்டில் தங்கள் நிலைமை குறைந்துவிட்டதென்றும் கூறுகிறார்கள். ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்ட பிறகு சென்னைப் பட்டணத்தில் இருந்த தெலுங்கு கைத்தொழில் அதிபர்கள் தங்கள் முதலீடுகளை ஆந்திராவுக்கு மாற்றி விட்டனர். அதேநேரத்தில் சென்னையில் தமிழர்களின் முதலீடுகளும் செயற்பாடுகளும் அதிகாரத்தால் தற்பொழுது சென்னை நகரம் முழுமையான தமிழர் ஆதிக்க நகரமாக மாறியுள்ளதெனலாம். ஆந்திராவில் தமிழர்கள் எண்ணிக்கையைவிட தமிழ்நாட்டில் கூடிய தெலுங்கர்கள் இருக்கிறார்கள். இப்பிரச்சினை இரு மாநிலங்களுக்கும் இடையில் மனக்கசப்புக்கள் தொடர்ந்து ஏற்படுத்தி வந்தன.

ஆந்திர மாநிலம் தெலுங்கானா ஆந்திரா என இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டதன் பின்னர் புதிய ஆந்திர மாநிலத்திற்கு பெரிய நகரம் ஒன்றில்லை. இதனால் ஆந்திரக்காரர் மீண்டும் சேவைகள் பெற சென்னை வருவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். தற்பொழுது தமிழ்நாட்டுக்கும் ஆந்திராவுக்கும் புதிதாக பாலாறு நீர்ப்பங்கீடு குறித்து புதுப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது. பாலாறு ஆந்திரப் பிரதேசத்தில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஊடாகக் கடலையடைகின்றது. தமிழ்நாட்டில் ஏற்கனவே இவ்வாற்று நீர் நீர்ப்பாசனத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுகிறது. வேலூர், காஞ்சிபுர மாவட்ட மக்களின் வாழ்வாதாரம் இவ்வாற்றில் தங்கியுள்ளது. இச்சூழ்நிலையில் ஆந்திர மாநிலம் தமிழ்நாட்டை ஆலோசிக்காமல் பாலாறுக்குக் குறுக்கே அணை அமைத்து நீர்த்தேக்கம் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்படுமாயின் இவ்வாற்றில் தமிழ்நாட்டுக்கு வரும் நீரின் அளவு வெகுவாகக் குறையும். ஏற்கனவே நீர்ப்பற்றாக்குறையால் பல பிரச்சினைகளை எதிர்நோக்கும் வேலூர், காஞ்சிபுர மாவட்டங்கள் மேலும் பிரச்சினைகள் அதிகரிக்கும் என்றும் குடிநீருக்கே பெரிய தட்டுப்பாடு ஏற்படலாமென தமிழக மக்கள் கூறுகின்றார்கள். ஆனால் இவ் எதிர்ப்புக்களை கவனத்தில் எடுக்காது ஆந்திரா பாலாற்றில் நீர்த்தேக்க வேலைகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றது. மத்திய அர சாங்கமும் தமிழ்நாட்டின் முறையீடுகளைப் பற்றி பெரும் கவனம் செலுத்துவதில்லை என தமிழ்நாட்டு மக்கள் கூறுகின்றனர்.

சென்னைநகரின் குடிநீர்த்தேவைக்கு கிருஷ்ணா நதியிலிருந்து இவ்வாறு ஓடும் மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களை முறை 5TMC நீரை வழங்க உடன்பாடு கண்டனர். இதன்மூலம் சென்னை நகருக்கு 15 TMC தண்ணீர் கிடைக்கும். இது தெலுங்கு கங்கா திட்டம் என அழைக்கப்படுகிறது. இதன் மூலம் வரும் நீர் பூண்டி, சோலாவரம், செம்பரம்பாக்கம், செம்மலை நீர்த்தேக்கங்களுக்கு வந்துசேரும். இந்நீர் ஆந்திர மாநிலம் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து கால்வாய் வழியாக பூண்டி நீர்த்தேக்கத்திற்கு வந்து சேரும். ஆனால் சென்னைக்கு ஒழுங்காக குறித்த அளவு நீரைக் கொடுப்பதில்லை. நீர் கொண்டு வரும் வாய்க்கால் நல்ல நிலையில் பராமரிக் கப்படுவதில்லை என்றும் மேலும் நீர்வரும் வழியிலுள்ள கிராமத்தவர்கள் நீரை முறையற்ற விதத்தில் எடுப்பதை மாநில நிர்வாகம் கட்டுப்படுத்துவதில்லை என்று சென்னை நகர மக்கள் குறைப்படுகின்றனர். சென்னை நகர மக்கள் போதியளவு நீர் இன்மையால் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். ஆந்திரா நினைத்தால் தங்கள் நீர்ப்பிரச்சினைக்கு உதவ முடியுமெனச் சென்னை வாசிகள் கருதுகின்றனர். இத்திட்டம் சாய்பாபா அவர்களின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டுக்கு ஆந்திர எல்லைப் பகுதிக் காடுகளில் இருந்து செம்மரக் கடத்தல் இடம்பெறுகின்றதெனக் கூறப்படுகிறது. இச்செம்மரங்களை வெட்டப் பெரும் முதலாளிகள் ஏழைத் தமிழ்த் தொழிலாளர்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். கடந்த வருடம் திருப்பதிக் காட்டுப் பகுதியில் 26 தமிழர்களை ஆந்திர பொலிஸார் ஈவு இரக்கமின்றி மனிதப் பண்புகள் இல்லாது சுட்டுக்கொன்றனர். இக்கொலை குறித்து ஆந்திர பொலிஸ் அல்லது அரசியல் தலைவர்கள் கவலைப்படவில்லை. விசாரிக்கவும் அக்கறை காட்டவில்லை. இவர்கள் தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே இக்கொலைகள் பொறுப்பற்ற முறையில் செய்யப்பட்டதாக தமிழகத் தலைவர்களும் மக்களும் கருதுகின்றனர். தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கர்கள் அனுபவிக்கும் வசதிகளை, கௌரவத்தை ஆந்திராவில் வாழும் தமிழ்மக்கள் அனுபவிக்கவில்லையென கூறி தமிழ்மக்கள் கவலைப்படுகின்றனர்.

தமிழ்நாட்டுக்கும் கர்நாடகாவும் காவேரி ஆற்று நீர் பங்கீடு குறித்தும் தீராப்பிரச்சினை நிலவுகின்றது. இரண்டு மாநிலங்களும் சுதந்திர அரசுகளாக இருந்திருந்தால் மிகப் பெரிய போர் இடம்பெற்று இருக்கும். கர்நாடகா காவேரி நீரை விடாததால் தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களில் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

காவேரி ஆறு கர்நாடகத்தில் குடகுப் பகுதியில் உற்பத்தியாக தமிழ்நாட்டை ஹொக்கனேக்கலுக்கு அண்மையில் தமிழ்நாட்டுக்குள் பிரவேசிக்கின்றது. காவேரி தமிழ்நாட்டு வரலாற்றுடன் இரண்டாகக் கலந்தது. நடந்தாய் வாழி காவேரி என்ற சொற்பதம் சிலப்பதிகாரத்தில் வருகின்றது. கரிகாலசோழ மன்னன் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் கட்டிய கல்லணை இன்றும் பாவனையிலுள்ளது.

காவேரி பிரச்சினையை விளங்கிக் கொள்ள நைல், யூப்பிரட்டிஸ்– ரைகிறீஸ், இந்து நதி ஆகியவற்றில் காணப்படும் பண்புகளை நோக்கின் காவேரி பிரச்சினையையும் விளங்கிக்கொள்வது இலகுவாகும். மேற்குறித்த ஆறுகளில் இவ் ஆறுகளின் கழிமுகம் (டெல்டா) பகுதிகளே முதலில் வளர்ச்சி பெற்றன. நைல் இல்லையென்றால் எகிப்து இருக்காது. அன்று இருந்த தொழில்நுட்ப அறிவில் கழிமுகப் பகுதிகள் மற்றும் சம வெளிப் பகுதிகளையே விருத்தி செய்யக் கூடியதாக இருந்தது. ஆறுகள் உற்பத்தியாகும் மலைப்பகுதிகள் இன்று போல அன்று நீர்த்தேக்கங்கள் அமைக்க முடியாதிருந்தது. இதனால் முன்னைய காலங்களில் ஆறுகளின் உற்பத்திப் பிரதேசம் மலைப்பாங்கான நடுப்பகுதிகளில் அணைகள் அமைத்து நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்படவில்லை.

காவேரி ஆறு கர்நாடகா, தமிழ்நாடு கேரளா மாநிலங்களுக்கு ஊடாக ஓடினாலும் கர்நாடகாவும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிடையே நீர்ப்பங்கீடு குறித்து பிரச்சினைகள் காணப்படுகின்றன. காவேரி ஆற்றின் பிரதான சந்தியின் குறுக்கே மேட்டூர் அணை அமைக்கப்பட்டுள்ளது. இந்த பெரிய நீர்த்தேக்கத்திலிருந்து திருச்சி, தஞ்சாவூர், நாகபட்டணம் மற்றும் கடலூர் மாவட்டத்தின் நீர்ப்பாசனத்துக்கு நீர் கொடுக்கப்படுகின்றது. காவேரியின் கிளையாறான பவானியில் பவானி சாகர் நீர்த்தேக்கமும் அமராவதி கிளையாறில் அமராவதி நீர்த்தேக்கம் நொயில் கிளை நதியில் நீர்த்தேக்கமும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் முதலாம் இரண்டாம் நான்காம் ஐந்தாம் ஆண்டுதிட்டங்களில் காவேரி ஆற்றை அடிப்படையாகக் கொண்டு பல நீர்த்தேக்கங்கள் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டதுடன் புதிய வாய்க்கால் மூலம் புதிய பல பிரதேசங்கள் நீர்ப்பாசனத்துக்கு கீழ் கொண்டு வரப்பட்டன.

இச் சூழ்நிலையில் கர்நாடக மாநிலத்தில் கிருஷ்ணசாகர் நீர்த் தேக்கம், கபினி நீர்த்தேக்கம், ஹேமாவதி நீர்த் தேக்கங்கள் மற்றும் பல நீர்த் தேக்கங்கள் உருவாக்கப்பட்டன. மேலும் மேகதத்தில் புதிய நீர்த் தேக்கம் அமைக்க கர்நாடக அரசு முயற்சித்துக் கொண்டு இருக்கின்றது. காவேரி நீர்ப் பங்கீடு குறித்து பல ஆணைக்குழுக்கள் வழங்கிய தீர்ப்புக்களை கர்நாடக அரசு ஏற்க மறுத்து வருகிறது. கர்நாடக மாநிலத்தின் நிலைப்பாடு, காவேரியில் தங்களது மாநில எல்லைக்குள் ஓடும் நீர் முழுவதும் தாங்களே பயன்படுத்த வேண்டும் என்பதே. இவர்களது கோரிக்கை சர்வதேச நியமத்துக்கு எதிரானது. சர்வதேச சட்டத்தின்படி ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள நிலத்தின் நீர்ப்பாசன தேவையை கருத்திற்கெடுத்து அதன் பின்னரே புதிய இடங்களுக்கு நீர்ப்பங்கீடு செய்ய முடியும். உதாரணமாக நைல்நதி உகண்டா நாட்டில் இருந்து உற்பத்தியாகி தென்சூடான், சூடான், எதியோப்பியா வழியாக எகிப்தை அடைகின்றது. தென்சூடான் அல்லது சூடான் அல்லது எதியோப்பியா நைல்நதியை முழுமையாக பயன்படுத்த முனைந்தால் எகிப்து இருக்க முடியாது. இது போல கர்நாடகா தனது மாநிலத்தில் காவேரியில் கிடைக்கும் முழுநீரைப் பயன்படுத்த முனைந்தால் 2000 ஆண்டுகளுக்கு மேலாக காவேரி நீரை நம்பியிருந்த தமிழ்நாட்டு மக்கள் என்ன செய்வது. தமிழ்நாடும் கர்நாடகமும் இப் பிரச்சினைக்கு அறிவுபூர்வமாக சிந்தித்து காவேரி நீர்ப் பங்கீட்டில் ஒரு முடிவுக்கு வர வேண்டும். ஒரு நாட்டின் இரு மாநிலங்களாக இருந்தும் இப்பிரச்சினையால் தமிழக விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஹொக்கனேக்கலில் அதாவது காவேரி தமிழ்நாடு - கர்நாடகா எல்லையில் மிகப் பெரிய நீர் மின் சக்தி உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு இருந்தும் மாநிலங்களுக்கிடையே காணப்படும் கசப்பான உறவால் இத்திட்டம் முன்னெடுக்க முடியாது இருக்கிறது. ஹொக்கனேக்கலில் மாநில எல்லை குறித்து தமிழ்நாட்டுக்கும் கர்நாடகத்துக்கும் சிறு பிரச்சினை நிலவுகின்றது.

காவேரி பிரச்சினையால் கர்நாடகத்தில் வாழும் தமிழர்கள் 2001 ஆம் ஆண்டு கணிப்பின்படி 1,362,198 இருந்துள்ளனர். மற்றும் தமிழ் தொழில் முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். காவேரி பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட குழப்பத்தால் பெங்களூரில் இருந்த தமிழர் ஒருவருடைய பெரும் எண்ணிக்கையான பேருந்துகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பெங்களூர் மற்றும் மண்டய மாவட்ட தமிழர்கள் அடிக்கடி கர்நாடகர்களின் வன்செயலுக்கு முகம் கொடுக்க வேண்டி இருப்பதுடன் பயத்தால் தமிழகம் திரும்ப வேண்டிய நிலை ஏற்படலாம் எனப் பயந்து வாழ்கின்றனர். பெங்களூர் நகரில் 10 இலட்சம் தமிழர்கள் வாழ்வதுடன் இந் நகரின் வளர்ச்சிக்கும் கர்நாடகத்தின் பொருளாதாரத்திற்கு பெரியளவு பங்களிப்பு செய்கின்ற பொழுதும் அதற்குரிய கௌரவம், தமிழருக்கு கிடைக்கவில்லை. ஒருமில்லியன் தமிழர்கள் பெங்களூரில் வாழ்கின்ற பொழுது அவர்கள் தங்களது தமிழ்ப் பண்பாட்டை பேணுவதில் பல தடைகளை எதிர் கொள்கின்றனர். பெங்களூரில் திருவள்ளுவர் சிலை நிறுவ எவ்வளவு காலம் எடுத்ததென்றும் அதன் பாதுகாப்புக்கு இன்றும் உத்தரவாதம் இல்லை. காவேரி பிரச்சினையும் சிறுபான்மைத் தமிழரின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால்தான் தமிழ்நாடு கர்நாடகத்துக்கு நல்லுறவு ஏற்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 25 ஆயிரம் மாணவர்களுக்கு நிவாரணப் பொதி

## கல்வி அமைச்சர் காரியவசம் நடவடிக்கை

(கொழும்பு)

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 25 ஆயிரம் மாணவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளன.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் ஆலோசனைக்கு அமைய இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் இந்த நிவாரணப்பொதியில் அடங்கியிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எட்டு மாவட்டங்களில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக இந்த நிவாரண வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

பாடசாலை மாணவர்கள் குறித்து சரியான தகவல்கள் அதிபர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும்.

சரியான தகவல்களை உறுதி செய்த பின்னரே நிவாரணப் பொதி வழங்கப்படும்.

தேசிய பாடசாலைகள் மற்றும் பல வர்த்தக நிறுவனங்கள் திரட்டிய பொருட்கள் கல்வி அமைச்சிடம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இதற்காக பங்களிப்புச் செய்த அனைவருக்கும் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இதன்போது நன்றி தெரிவித்தார். (இ-7)

# 10 அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்

(கொழும்பு)

பத்து அமைச்சுகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சு-ஜீ.எஸ். விதானகே, சுகாதார, போஷணை, சுதேச மருத்துவத் துறை அமைச்சு - உதய ஆர். செனவிரத்ன, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு - உபாலி மாரசிங்க, பெருந்தோட்டத்துறை அமைச்சு - ஜே.ஏ.ரஞ்சித்,

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சித் துறை அமைச்சு - சிரானி வீரகோன், தொழில்,தொழில் உறவுகள், சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு - எஸ்.ஏ. என்.சரனதிஸ்ஸ, நீர்ப்பாசன, நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு - ஜயந்த விஜேரத்ன, பிரதேச அபிவிருத்தி அமைச்சு - ஏ.பீ.ஜீ. கித்சிறி, அபிவிருத்திப் பணிகள் அமைச்சு - எல்.டீ. சேனாநாயக்க, மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் துறை அமைச்சு - அநுர திசாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

# எண்ணெய்த் தாங்கி விற்பனைக்கு எதிராக அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் காணப்படுகின்ற எண்ணெய்த்தாங்கித் தொகுதிகளை, விற்பனை செய்வதனை நிறுத்துவதற்காக, 6 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து தயாரித்துள்ள விசேட அறிக்கையொன்றினை, கனியவள அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுக்கு கையளித்துள்ளதாக, கனிய எண்ணெய் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கையினை, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் கையளிக்கவுள்ளதாகவும் தொழிற்சங்கத் தின் ஏற்பாட்டாளர் டீ. ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 160 | 180 | 200 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 110 | 150 | 80 | 110 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 350 | 350 | 400 | 300 | 500 |
| தக்காளி | 160 | 300 | 140 | 200 | 160 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 100 | 100 | 100 |
| கோவா | 150 | 250 | 150 | 200 | 160 | 140 | 160 |
| கரட் | 250 | 400 | 200 | 280 | 300 | 350 | 320 |
| பூசணி | 80 | 120 | 50 | 90 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 140 | 40 | 120 | 120 | 140 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 40 | 60 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 400 | 300 | 300 | 300 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 90 | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 180 | 400 | 150 | 180 | 160 | 180 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 200 | 80 | 100 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 150 | 70 | 120 | 200 | 150 | 100 |
| பயற்றங்காய் | 160 | 100 | 100 | 120 | 120 | 140 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 140 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 150 | 150 | 100 | 140 | 160 | 120 | 140 |
| கறிமிளகாய் | 250 | 400 | 140 | 240 | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 60 | 120 | 120 | 120 | 100 |
| போஞ்சி | 200 | 300 | 180 | 240 | 200 | 200 | 240 |
| கத்தரித்தம்புள்ள | 180 | 100 | 130 | 100 | 160 | 120 | 150 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 40 | 30 | 25 | 30 |
| தேசிக்காய் | 50 | 50 | 40 | 80 | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 70 | 65 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | – | 400 | 300 | 200 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 100 | – | 300 | – | 300 | 160 |
| முள்ளங்கி | 80 | 100 | – | 100 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 80 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | 100 | – | 100 | – | 80 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1097

Search for people, places and things Nagendram Home

### சரன்யா




### சுமதி




### வரதன்




### கௌதமி




### நாதன்




### சுதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

– கிரிஸ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நொந்து போயுள்ள தமிழ் மக்களை முஸ்லிம் அரசியல்வாதிகள் வஞ்சிக்கக் கூடாது

மிகப்பெரியதொரு யுத்தத்தில் தமிழ் மக்கள் நொந்து கெட்டுப் போயுள்ளனர்.

சொத்தழிவுகள், இடப்பெயர்வுகள் என்பதற்கு அப்பால், உயிரிழப்புக்கள், காணாமல் போனவர்களின் நிலை, தமிழ் அரசியல் கைதிகளின் அவலம் என எங்கு பார்த்தாலும் கண்ணீரும் செந்நீரும் என்பதாக தமிழ் மக்களின் வாழ்வு அமைந்துள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் கொடும் போர் நடந்தபோது – தமிழின அழிப்பு இடம்பெற்ற போது தமிழ் மக்களைக் கொல்லாதீர்கள் என வாய்திறந்து சொல்லாத முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எவரும் தமிழ் மக்கள் பற்றியோ தமிழ் அரசியல் தலைமை பற்றியோ கதைக்கத் தகுதியற்றவர்கள்.

இந்த நாட்டின் சிறுபான்மை மக்களாக இருக்கக்கூடிய முஸ்லிம் சகோதரர்கள் இன்னொரு சிறுபான்மை இனமாகிய தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. மாறாக விடுதலைப் புலிகள் தங்களை வட பகுதியில் இருந்து வெளியேற்றினர் என்பதைக் குற்றச்சாட்டாக வைப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்தவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

விடுதலைப் புலிகள் பலமாக இருந்த போது புலிகளின் தலைமையுடன் உடன்பாட்டுக்கு வந்த பிற்பாடு; புலிகள் தோற்றுவிட்டனர் என்பதால் வட பகுதியில் இருந்து தங்களை வெளியேற்றியதற்கு வஞ்சம் தீர்க்க முஸ்லிம் அரசியல் தலைமை முற்படுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

விடுதலைப் புலிகள் இருந்த போது அவர்களுடன் இணங்கிப் போவதற்கு உடன்பட்டவர்கள், அவர்கள் இப்போது இல்லை என்றவுடன் தமிழ் மக்களை பல வழிகளிலும் நசுக்க முனைப்புக் காட்டுவது முஸ்லிம் தலைமைக்கு அவ்வளவு நல்லதல்ல.

பொதுவில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள்; தமிழ் மக்களுக்கு – தமிழ் இனத்துக்கு எதிராகச் செய்யும் எந்தச் செயற்பாடு குறித்தும் தமிழ் அரசியல் தலைமை வாய்திறப்பதாக இல்லை.

ஏதோ! முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எது செய்தாலும் அது சரி அல்லது அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர்களாக இருக்கக்கூடிய முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்குப் பாதகமாக முன்னெடுக்கும் சதித் திட்டங்கள் எதுவாக இருந்தாலும் அவை பற்றி நாம் கண்டுகொள்ளக்கூடாது என்பது போல தமிழ் அரசியல் தலைமை கருதுகிறது.

ஆகையால், மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல முஸ்லிம் அரசியல் தலைவர்கள் நடந்து கொள்வதால் அவர்கள் மீது தமிழ் மக்கள் கடும் ஆத்திரம் கொண்டுள்ளனர்.

நிலைமை இப்படியே நகருமாக இருந்தால், சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழலாம்; ஆனால் இவர்களுடன் முடியாது என்பதாக தமிழ் மக்களின் முடிவு இருப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

### மூதூர் பாலியல் வன்முறை

## இன முறுகல்களை தவிர்க்க கிழக்கு ஆளுநர் ஆராய்வு

திருகோணமலை மூதூர பிரதேசத்தில் மூன்று தமிழ் மாணவிகள் பாலியல் வன்முறைக்குள்ளான சம்பவத்தையடுத்து அந்த பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணான்டோ இரு தரப்பு பிரதிநிதிகளையும் சந்தித்து ஆராய்ந்துள்ளார்.

இரு தரப்பும் சாலைகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை கைவிட்டு உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்க பொலிஸ் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஆளுநர் வலியுறுத்தி கேட்டுள்ளார்.

கடந்த 29ஆம் திகதி மூதூர் பிரதேசத்திலுள்ள அரசு பாடசாலையொன்றில் ஞாயிற்றுக்கிழமை இந்து சமய வகுப்புக்கு சென்றிருந்த 6 - 8 வயதான மாணவிகள் மூன்று பேர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டனர்.

சம்பவம் தொடர்பாக பாடசாலை கட்டிட நிர்மாண பணி தொழிலாளர்கள் உட்பட அயல் பகுதியை சேர்ந்த 5 முஸ்லிம்கள் சந்தேகத்தின் பேரில் கைதாகி நீதிமன்ற அடையாள அணி வகுப்பு நடைபெற்றது.

மாணவிகளால் சந்தேக நபர்கள் அடையாளம் காட்டப்படாத நிலையில் இந்த நபர்களை எதிர்வரும் 12ஆம திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு நீதி கோரியும் இந்த சம்பவத்தை கண்டித்தும் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பிரதேசங்களில் கடந்த 10 நாட்களாக பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக அமைப்புகளின் ஏற் பாட்டில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.


இந்த போராட்டங்களின் போது முஸ்லிம்களை நிந்திக்கும் வகையிலான சில நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளதாகவும் சமூக வலைதளங்களிலும் சில ஊடகங்களிலும் முஸ்லிம் சமூகத்தை தொடர்புபடுத்தி தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாகவும் முஸ்லிம் சமூக அமைப்புகளினால் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து இது போன்ற செயல்பாடுகளை கண்டித்து மூதூர், தோப்பூர் பரதேச முஸ்லிம்களும் ஆர்பபாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்பாட்டங்களில், பாதிக்கப்பட்டுள்ள மாணவிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். உண்மையான குற்றவாளி கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் போராட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற அடையாள அணி வகுப்பில் சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படாததை குறிப்பிட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் முஸ்லிமகள் தரப்பில் கோரிக்கையும அவர்களின் போராட்டங்களின் போது முன்வைககப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



பத்தாம் நாள்- தீர்த்தத்திருவிழா (09.06.2017)

தீர்த்தமாமி வாரும் எங்கள் நீராவிப் பிள்ளையாரே!
தீர்த்திடுவீர் எங்கள் தீவினைகள் எல்லாமே!
பார்த்திடுவீர் கடைக்கண்ணால் பக்தர்குறை
போக்கிடவே
பார்த்திருப்போம் உமது பார்போற்றும் அழகினையே
வேர்த்து விறுவிறுக்கம் எங்கள் வேதனை
போக்கிடையா
நேர்த்திகள் பல வைத்து உன்னைக் கும்பிட்டோம்
கணபதியே
கோர்த்து நற்றமிழாலே பாமாலை பாடிநின்றோம்
தீர்த்த நாள் தனிலே நின்திருவடி சரணாம் சரணாம்!!

தவப்பிரியா



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### உன்னுடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்

உன்னுடைய துன்பத்தை நீ பகிர்ந்து கொண்டால், அது குறைவதில்லை. மகிழ்ச்சியை நீ பகிர்ந்து கொள்ளாத போது அது குறைகிறது.

உன்னுடைய பிரச்சினைகளைக் கடவுளிடம் மட்டும் பகிர்ந்து கொள்.வேறு யாருடனும் வேண்டாம். அது பிரச்சினைகளை அதிகமாகவே ஆக்கும்.

உன்னுடைய மகிழ்ச்சியை எல்லோருடனும் பகிர்ந்து கொள்.

டேரன்: எல்லோரும் உங்களிடம் தங்கள் துக்கத்தைச் சொல்லிக்கொள்ளும் பொழுது நீங்கள் எப்படி உதவுகிறீர்கள்?

ஸ்ரீஸ்ரீ: என்னிடம் ஆயிரமாயிரம் வழிகளிருக்கின்றன. பெரும்பாலான சமயங்களில் அவர்கள் என்னிடம் தங்கள் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொண்டதுமே அவற்றிற்குத் தீர்வு கிடைக்கின்றன. மற்றும் சில சமயங்களில் கொஞ்சம் பொறுமை அவசியம். எல்லாமே பொறுப்போடு கவனித்துக் கொள்ளப்படும் என்பதை அறிந்து கொள்.

மேரி: பிறர் தங்கள் துன்பத்தை எங்களிடம் பகிர்ந்து கொள்ளும் பொழுது எப்படி உதவுகிறது?

ஸ்ரீஸ்ரீ: கவனத்துடன் கேட்பது போல் கேட்காமலிரு. உனது மனம் அதில் ஆழ்ந்து போனால் அவர்கள் மாத்திரமல்ல, நீயும் அதே துன்பத்தை அனுபவிப்பாய். அனுசரணையுடன் அவர்களோடு ஞானத்தைப் பகிர்ந்து கொள்.

## கடியுண்ட காயத்திற்கான முதலுதவி

காயத்தினை மூடிக்கட்டாது காற்று பிடிக்க விடுதல் வேண்டும், கடி காயத்தினை ஓடும் நீரினால் நன்கு கழுவி சுத்தப்படுத்துதல் வேண்டும், கடி காயத்தினை வெறும் கையினால் தொடுதல் கூடாது, கடி காயத்திற்கு கை வைத்தியம் செய்வதை இயலுமானவரை தவிர்த்தல் நன்று

**சந்தேகத்திற்கு இடமான நாய்கள் தொடர்பில் அவதானமாக இருப்போம்.**

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### புகுந்த வீட்டில் திருமணப் பெண்கள் குத்துவிளக்கேற்றுவது ஏன்?

திருமணம் முடிந்து தனது புகுந்த வீட்டிற்கு செல்லும் பெண்ணை முதன் முதலாக குத்துவிளக்கை ஏற்ற வேண்டும் என்று சொல்வது ஏன் தெரியுமா?

திருமணப் பெண் புகுந்த வீட்டில் குத்துவிளக்கு ஏற்றுவது ஏன்?

குத்துவிளக்கில் உள்ள ஐந்து முகங்களும் அன்பு, அறிவு, உறுதி, நிதானம், பொறுமை போன்ற ஐந்து நற்குணாங்களை குறிக்கிறது.

மேலும் குத்துவிளக்கில் உள்ள ஐந்து முகங்கள் ஐந்து கடவுள்களையும் குறிக்கிறது. அதாவது குத்துவிளக்கின்,

தாமரைப் போன்ற பீடம் - பிரம்மாவையும்,
நடுத்தண்டு பகுதி - விஷ்ணுவையும்,
நெய் எறியும் அகல் - சிவனையும்,
தீபம் - திருமகளையும்,
சுடர் - கலைமகளையும் குறிக்கிறது.

எனவே திருமணம் முடிந்து முதன் முதலில் புகுந்த வீட்டிற்கு செல்லும் ஒரு பெண் ஐந்து நற்குணங்களையும் கொண்டிருப்பேன் என்று உறுதியளிப்பதாக குத்துவிளக்கை ஏற்ற சொல்கிறார்கள் என்ற அர்த்தத்தைக் குறிக்கிறது.

பின் குத்துவிளக்கை ஏற்றி வைத்து, குத்துவிளக்கில் உள்ள ஐந்து கடவுள்களையும் வணங்கி, குத்துவிளக்கில் இருந்து வரும் ஒளியால் வீடு முழுவதும் எப்படி பிரகாசம் அடைகிறதோ, அதேபோல் புகுந்த வீட்டில் வாழ வந்த பெண்ணின் வாழ்க்கையும் பிரகாசமாக இருக்கும்.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### ஒழுக்கத்திற்கான பயிற்சி

❖ நற்செயல் என்பது நற்குணத்தைப் பெறுவதாகும். எந்தச் செயலை நீ மனதில் நினைத்து அதனை பிறர் அறிவதை விரும்பவில்லையோ, அது பாவச் செயலாகும்.

❖ அளவில் சிறிதாக இருப்பினும், தொடர்ந்து நிலையாக செய்யும் செயல்களையே இறைவன் நேசிக்கின்றான்.

❖ இறைதிருப்தியைப் பெறும் நோக்குடன் மனிதன் தன் குடும்பத்தாருக்கு செலவிடுவதையும் ஓர் அறச் செயலாகவே இறைவன் காண்கின்றான்.

❖ நாணமும், பாதையில் கிடக்கும் தொல்லை தரும் பொருட்களை அப்புறப்படுத்துவதும் இறை நம்பிக்கையின் பகுதிகளாகும்.

❖ உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டு இருக்கின்றது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சம் உடையவர்களாய்த் திகழக்கூடும்.

❖ இறைவழிபாடுகள் சடங்குகள் அல்ல. இறையச்சம், ஒழுக்கம் ஆகியவற்றை அடைவதற்கான பயிற்சிகளே அவை.

❖ ஹஜ்ஜின் போது இச்சைகளைத் தூண்டக்கூடிய செயல், தீவினை, சண்டை சச்சரவு ஆகியவற்றில் ஈடுபடக் கூடாது.

**- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து**

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III விங்ஸ் அணி 2 வது வெற்றி

சிறிலங்கா கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இருந்து 2 அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவ்வரிசையில் கடந்த 27ஆம் திகதி யாழ்ப் பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் விங்ஸ் அணி மூளாய் விக்டோறி அணியை 130 ஓட்டங்கள்ால் வெற்றிபெற்று தங்களது 2 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி 45.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 216 ஓட்டங்களை பெற்றனர்.

ஜெபேசன்-16, நிருபன்-25, யுட் ஆட்டமிழக்காது 66, சுரேன் - 27 கமரோன் - 22 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் சரத்குமார் - 02, ஜங்கரன் - 03, குகசாந்தன் - 01, டானியல் - 02, பிரசாத் - 01 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டோறி அணி 29 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது.

சரத்குமார் 29 ஓட்டங்களைப் பெற்றார். களத்தடுப்பில் சுரேன்-3, விசைன்-2, ஜெபர்சன்-3, மைக்கல்-1, நிருபன்-1 இலக்கினைப் பெற்றனர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (தரவரிசை) விங்ஸ் அணி 9.46 புள்ளிகளையும், மூளாய் விக்டோறி அணி 1.86 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# அரையிறுதிக்கு தெரிவாகியது இமையாணன் மத்தி அணி



கொற்றாவத்தை இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் 19வயது பிரிவு உதைபந்தாட்ட போட்டியில் பொமர்ஸ் அணியை 02:01 என்ற அடிப்படையில் வீழ்த்தி அரையிறுதிக்கு தெரிவாகியது இமையாணன் மத்தி 19வய்து பிரிவு அணி. (க)

# பரபரப்பான சுப்பர் ஓவரில் சைனிங்ஸ் அரையிறுதிக்கு தெரிவு



LONDON FIRST FRESH FOOD LTD இன் அனுசரணையுடன் மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் வைத்தியப்பா ஞாபகார்த்தமாக 3 வது வருடமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 நபர்கள் 10 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட சுழல் கிண்ண மென்பந்தாட்ட தொடரின் A பிரிவிற்கான ஆட்டத்தில் சைனிங்ஷ் அணி, நேதாஜி அணிகள் மோதின.

முதலில்ஆடிய நேதாஜி அணி 75 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்தது. நேதாஜிசார்பாக கோபி 18 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். சைனிங்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் அன்பழகன் 3 விக்கெட்டுகளை பதிவு செய்தார்.

வெற்றி இலக்கை நோக்கி ஆடிய சைனிங்ஸ் அணி 10 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 75 ஓட்டங்களை பெற போட்டி சமனிலையானது.

சுப்பர் ஓவரில் முதலில் ஆடிய சைனிங்ஸ் அணி 6 ஓட்டங்களை பெற்றது. 7 வெற்றியிலக்கை நோக்கி ஆடிய நேதாஜி அணி சஞ்சீவனின் அனல்பறந்த துல்லியமான பந்து வீச்சு மூலம் 2 விக்கெட்டுகளையும் இழந்து 2 ஓட்டங்களையே பெற முடிந்தது. சைனிங்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக சஞ்சீவன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

மாமனிதர் அமரர் தி.மகேஸ்வரன் நினைவாக எதிர்வரும் (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை பொன்னாலை மான்பாய்ந்த தரவையில் மா பெரும் மாட்டு வண்டி சவாரி போட்டி நடைபெறவுள்ளது.

வெற்றிபெறும் வெற்றியாளருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (க)

## பாகுபலியான டோனி; விளக்கம் கொடுத்த சர்மா

சில மாதங்களுக்கு முன்னர் பாகுபலி என்ற திரைப்படம் வெளியானது. இப்படம் உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு இடங்களில் வெளியானது.

அந்த படத்தின் ஹீரோவான மகேந்திர பாகுபலியின் பெயரை இந்திய கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் டோனிக்கு வைத்து இணையத்தில் கருத்துக்களை பதிவேற்றம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், பாகுபலி என்ற பெயர் டோனியைவிட மற்றொருவருக்குப் பொருந்துவதாக இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க வீரரான ரோஹித் சர்மா கூறி யுள்ளார்.

இந்திய தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவானின் மகன் ஜொராவெருக்கு பாகுபலி என்ற பெயர் கச்சிதமாக இருக்கும் என்று ரோஹித் கூறியுள்ளார். (க)

# வைத்தியப்பா ஞாபகார்த்த சுழல் கிண்ண மென்பந்தாட்டம் தீருவில் வெற்றி

LONDON FIRST FRESH FOOD LTD இன் அனுசரணையுடன் மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் வைத்தியப்பா ஞாபகார்த்தமாக 3 வது வருடமாக சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 நபர்கள் 10 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட சுழல் கிண்ண மென்பந்தாட்ட தொடரின் A பிரிவிற்கான ஆட்டத்தில் உதயசூரியன் அணி, தீருவில் அணிகள் மோதின.



முதலில் ஆடிய உதயசூரியன் அணி 45 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்தது. உதயசூரியன் சார்பாக குகேந்திரன் 16 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். தீருவில் அணி சார்பாக பந்து வீச்சில் பிரதீப் 3 விக்கெட்டுகளை பதிவு செய்தார்.

வெற்றி இலக்கை நோக்கி ஆடிய தீருவில் அணி 4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 48 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது. தீருவில் சார்பாக பா.மயூரன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களை பெற்றார்.

போட்டியின் ஆட்டநாயகனாக 2 விக்கெட்டுகளையும் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்ற பா.மயூரன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

# வடமாகாண கபடி சம்பியனாகியது நெல்லியடி மத்திய கல்லூரி அணி




வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் கபடி சுற்றுப் போட்டி கடந்த 5ஆம் திகதி அன்று காலை 8.30 மணிமுதல் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இத் தொடரில் 17 வயது பிரிவு பெண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி சிவநகர் அணியை வீழ்த்தி [illegible] நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியனாகி தேசிய மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பான் குழு...

பான் இடர்முகாமைத்துவ நிலையத்தின் விசேட குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளுக்கு தரை மற்றும் ஆகாய மார்க்கமாக விஜயம் செய்து இந்தக்குழுவினர் ஆராயவுள்ளனர்.

மேற்படி குழுவால் ஆராய்வு செய்யப்பட்ட அறிக்கை பணி முடிவில் இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (செ-11)

## முதலமைச்சர் விக்னேஸ்...

நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ராஜித மேலும் கூறுகையில்,

இந்த சிறிய நாட்டில் ஞானசார தேரர் பொலிஸாரின் கண்களில் தென்படாமல் மறைந்திருப்பதாயின் அதுவும் ஒரு திறமை. இவ்வாறு மறைந்திருப்பதற்கு அமைச்சர்கள் யாருடையதாவது ஒத்துழைப்பு இல்லாதிருக்க முடியாது. பொது பல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் முஸ்லிம்களுக்கு எதிராக பயன்படுத்துகின்ற மிக மோசமான வசனங்களை, ஞான்சார தேரர் குற்றம்சாட்டும் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வன் உள்ளிட்ட நபர்கள் சிங்களவர்களுக்கு எதிராக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறியதில்லை. ஞானசார தேரர் குற்றச்சாட்டும் எவரும் கடைகளுக்குத் தீ வைத்ததாகவோ, சமயத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவோ ஆதாரங்களோ, சாட்சிகளோ இல்லை.

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அவர் சார்ந்த உரிமைகளை தேவைகளை, கோரிக்கைகளை முன்வைக்க உரிமை இருக்கின்றது. அவர் ஞானசார தேரரைப் போன்று செயற்படவில்லை. ஞானசார தேரர் கூறும் நபர்களை கைது செய்வதற்கோ விசாரணை நடத்துவதற்கோ எந்த விதத் தேவையும் இல்லை என அமைச்சர் ராஜித தனது உரையில் குறிப்பிட்டார்.(செ-11)

## 150 கிலோ...

குறித்த கடல் அட்டைகள் தீவகத்தில் பிடிப்பட்டு நாச்சிக்குடாவிற்கு விற்பனைக்காக கொண்டு செல்ல முயற்சிக்கப்பட்ட வேளை குறித்த நபர்களை பண்ணை பாலத்தடியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது ஏறத்தாழ 150 கிலோ உடைய 668 கடல் அட்டைகள் 3 பரல்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. இவை பல இலட்சம் ரூபா பெறுமதியானவை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடல் வள சட்டத்தின் பிரகாரம் கடல் அட்டைகள் பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளதும் தண்டனைக்குரிய குற்றமும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## கடன் சுமை...

பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரை மாய்ப்புச் செய்து கொண்டவர் பெரிய கடற்கரை தொண்டைமனாறை சேர்ந்த (51 வயது) குடும்பப் பெண்ணாவார்.

பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் படி அதிகாலை கடலுக்கு செல்வதற்காக தயாரான கணவனுக்கு உணவுகள் தயாரித்து வழங்கிவிட்டு வீட்டு முன்புறம் நின்ற மரத்தில் பிரஸ்தாப பெண் உயிரை மாய்ப்புச் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டதையடுத்து சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை உயிரிழப்பு தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(செ-60)

## இடைக்கால...

இந்தியா கோரியுள்ளது. இந்நிலையில் மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அரசாங்கம் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மகிந்த சமரவீர ஊடகங்களிடம் கூறுகையில்,

கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு காண புதுடில்லி அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கியுள்ளது.

இதற்கமைய முதன்முறையாக இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து இவ்விரு அமைச்சர்கள், கடற்றொழிலாளர்கள் பிரச்சினை குறித்து பிரத்தியேகமாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள்.

இந்த கலந்துரையாடல்களின் போது ஆழ்கடல் மீன்பிடியே இதற்கான தீர்வு என்று இணங்கப்பட்டுள்ளது. இதற்காக மத்திய அரசாங்கம் ஆயிரத்து 500 கோடி ரூபாய் வேலைத்திட்டத்தை தயாரித்திருப்பதாக எம்மிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் 500 கோடி ரூபாய் ஒதுக்கி 3 ஆண்டு காலத்துக்கு இந்த திட்டம் அமுலாக்கப்படவுள்ளது என குறிப்பிட்டார்.

அத்தோடு இந்த காலப்பகுதியில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுதல் மற்றும் தாக்கப்படுதலை தடுக்கும் வகையில் இடைக்காலத் திட்டம் ஒன்றை இலங்கை முன்வைக்க வேண்டும் எனக் கோரி இருப்பதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தகவல் தெரிவித்திருந்தார். (செ-11)

## தேசிய பட்டியல்...

வர் தர்மலிங்கம் நாடாளுமன்ற உறுப்பினரான சித்தார்த்தன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைக்கு தேசிய பட்டியல் ஆசனங்கள் இரண்டு கிடைத்தன. அதில ஒன்று முஸ்லிம் சிறுபான்மை இனத்தவர் என்ற ரீதியில் நிரந்தரமாக அஸ்மினுக்கு வழங்கப்பட்டது. மற்றைய ஆசனம் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வந்தது. இவ் விடயம் அனைத்து கட்சி உறுப்பினர்களாலும் ஏற்கெனவே கலந்துரையாடப்பட்டு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் முதன்முறையாக முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த தமிழரசு கட்சி உறுப்பினர் மேரி கமலா குணசீலன் நியமிக்கப்பட்டு உறுப்பினராக 2 வருடங்கள் பதவி வகித்தார். அவருக்கு அடுத்ததாக ஒரு வருட காலம் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியை சேர்ந்த நடராஜா பதவி வகித்தார். தற்போது ரெலோ கட்சியை சேர்ந்த எஸ்.மயூரன் பதவி வகித்து வருகிறார் அவருடைய ஒருவருட சேவை காலம் எதிர்வரும் யூலை மாதத்துடன் முடிவடைகிறது.

இந்த நிலையில் அடுத்த உறுப்பினருக்கு உரிய பதவி எமது கட்சியை (புளொட்) சேர்ந்த உறுப்பினருக்கே வழங்கப்பட வேண்டும்.

இவ் விடயம் தொடர்பில் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடனும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தோம். அண்மையில் தொடர்ச்சியாக இவ் விடயம் தொடர்பில் கட்சி தலைமையிடம் கோரிவருகிறோம் அந்த வகையில் எந்த மாற்றங்களும் இடம்பெறாமல் எமது கட்சி உறுப்பினருக்கே குறித்த ஆசனம் வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பள்ளிவாசல்...

பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரிய கடை ஜும்மா பள்ளிவாசல் மீது கடந்த மூன்றாம் திகதி அதிகாலை இனந்தெரியாத விஷமிகளால் தீ வைக்கப்பட்டிருந்தது.

நள்ளிரவு 11.00 மணி தொடக்கம் அடுத்த நாள் அதிகாலை 3.00 மணிக்குள் நடைபெற்றிருந்த குறித்த தீ வைப்புச் சம்பவத்தில் பள்ளிவாசலின் தரைவிரிப்புகள் தீயினால் கருகிப்போயிருந்தது.

அத்துடன் பள்ளிவாயிலின் உள்ளே வீசியெறியப்பட்ட நிலையில் ஒரு மதுபான போத்தலும் அதற்குள் எரிபொருளும் கண்டெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார் நேற்று 22 வயதுடைய தமிழ் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் அண்மைக்காலமாக பொது பல சேனாவின் நட்பு அமைப்பு ஒன்றுடன் இணைந்து இயங்கி வந்திருப்பது தொடர்பாக தகவல்கள் கசிந்துள்ள நிலையில் அது தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## "தூக்கி அடித்து...

வினவிய போது, திடீரென கோபமடைந்த அமைச்சர், ஊடகவியலாளரை தகாத வார்த்தைகளால் திட்டியதோடு கொலை அச்சுறுத்தலும் விடுத்தார்.

அதில் குறித்த சம்பவம் தொடர்பாக பொய்யான தகவல்களை பரப்பினால் கொன்று விடுவதாகவும் மிரட்டியுள்ளார்.

கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகள், வத்தளை கெரவலபிடிய, முத்துராஜவல ஆகிய பகுதிகளில் கொட்டப்படுவதற்கு பிரதேச மக்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்துவது தொடர்பில் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் கந்தானை அலுவலகத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கலந்துரையாடல் நிறைவடைந்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்க வந்த அமைச்சரிடம் போபிடிய பகுதியில் குப்பைகள் கொட்டுவதற்கு அமைச்சர் மீது மக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்துகின்றனர் என பிரஸ்தாப ஊடகவியலாளர் அமைச்சரை நோக்கி வினவியபோதே அமைச்சர் கோபமடைந்துள்ளார்.

அத்தோடு குறித்த ஊடகவியலாளரை செய்தி சேகரிப்பதற்கு இனிமேல் அனுமதிக்கக் கூடாதெனவும், உடனே அங்கிருந்து வெளியேற்றுமாறும், தவறான செய்திகளை வெளியிட்டு என்னை கெட்டவன் என்று கூறவேண்டாம் எனவும் அமைச்சர் கடும் தொனியில் தெரிவித்தார்.

இதன்போது குறித்த ஊடகவியலாளரை அமைச்சர் தாக்குதற்கு பல தடவைகள் முயற்சித்த போதும் அருகில் இருந்தவர்கள் தடுத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-11)

## அசமந்த போக்கு...

கும் அரச அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மை பற்றி தனது அதிருப்தியை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இயற்கை இடர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அக்குரஸ்ஸ, மொரவக்க, தெனியாய, கோட்டபொல, பிட்டபெத்தர மற்றும் பாஹியங்கல ஆகிய பிரதேசங்களுக்கு நேரடி விஜயங்களை மேற்கொண்டபோது அங்குள்ள நிலைமைகளை அவதானித்த பிறகே அமைச்சர் அரச அதிகாரிகள் மீதான தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

சரியான திட்டங்களின்றி நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள், நீர் வழிந்தோடுவதற்கான வசதிகளின்றி வெள்ளம் தேங்கும் பகுதிகள் போன்றவை காரணமாகவே இயற்கை அனர்த்தங்கள் பெரும்பாலும் நடக்கின்றன.

அனர்த்தமொன்று நடந்த பின் அதற்கான பொறுப்புகளை வேறொருவர் மீது சுமத்துவதை விடுத்து சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளின் பொறுப்பாகும்.

வெள்ளப்பெருக்கால் பெரும்பாலான பாடசாலைகள் பாதிக்கப்பட்டமைக்கு அரச அதிகாரிகளின் அசமந்தப்போக்கே காரணம் என பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

நடந்துள்ள சேதத்தை ஒரு பாடமாகக் கொண்டு அவர்கள் எதிர்காலத்திலாவது பொறுப்புடன் செயற்படுவார்களென எதிர்பார்க்கிறேன் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## வாழ்விடமீட்பு போரா...

ம், தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலமீட்புப் போராட்டத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வரும் மக்கள், தங்களது காணிகளை வற்றாப்பளை அம்மன் கோயிலின் வருடாந்த பொங்கல் விழாவிற்கு முன்னர் விடுவிக்குமாறு அண்மையில் கோரியிருந்தனர்.

ஆயினும் குறித்த காணிகள் இன்னமும் விடுவிடுக்கப்படவில்லை. இந் நிலையில், வற்றாப்பளை கண்ணகையம்மனின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிலையில் படையினர் வசமுள்ள கேப்பாப்பிலவு கிராமத்தில் உள்ள முருகன் ஆலயத்தில் மக்கள் ஆலய வழிபாடுகளை மேற்கொள்வதற்காக தற்காலிகமாக கேப்பாப்பிலவு வீதியை திறப்பதற்கு படைத்தரப்பு இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்று வியாழக்கிழமை படைத்தரப்பு மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு நடத்திய பேச்சுவார்த்தையினை அடுத்து எதிர்வரும் 12ஆம் திகதி கேப்பாப்பிலவு வீதியை விடுவித்து வீதியின் தெற்குப் பக்கமுள்ள முருகன் ஆலயத்தில் கேப்பாப்பிலவு மக்கள் தமது பாரம்பரிய முறைப்படி வழிபாடுகளை மேற்கொள்வதற்கு படைத்தரப்பு இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் குறித்த முருகன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் எனவே அதற்கான கிரியைகளை மேற்கொண்டு உரிய முறையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஒட்டுமொத்த கிராம மக்களும் ஆலயத்திற்கு செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் தமது கோரிக்கையை தெரிவித்துள்ளனர். (செ-15)

## கோவில் வளாகத்தில்...

ள்ள கோவில் ஒன்றின் பின்பகுதியில் கஞ்சா பொதி மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் தேடுதல் மேற்கொண்டபோது 4 கிலோ 150 கிராம் நிறையுடைய கேரளா கஞ்சா பொதியை கைப்பற்றியுள்ளனர்.

இதையடுத்து அப் பகுதியில் தகவல்களை திரட்டி மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

## வன்முறை நீடித்தால்...

அதுதான் பிரதானமான செய்தியாகும்.

ஜி.எஸ்.பி பிளஸ் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஒருதலைப்பட்சமான வரிச்சலுகையாகும். நாங்கள் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.இது தாராளமனத்துடனான சலுகையாகும். இந்த தாராளச் சலுகையிலிருந்து லாபத்தை பெற்றுகொள்ள வேண்டுமாயின் குறித்த நாடு ஐ.நாவில் கைச்சாத்திட்டுள்ள சாசனங்களுடன் இணங்கிச் செல்லவேண்டும். நீங்கள் கையொப்பமிட்டதையே நடைமுறைப்படுத்தவேண்டும். பாரதூரமான மீறல்கள் இடம்பெறுமானால அது திரும்ப பெறப்படலாம். இது ஒருமுறை இலங்கைக்கு நடந்துள்ளது. இந்த நிலையில் அரசாங்கமானது தான் வழங்கிய சொந்த வாக்குறுதிகளை மிகவும் நேர்த்தியாக நடைமுறைப்படுத்தியாக வேண்டும். எதிர்காலம் தொடர்பாக அனுமானிக்க நான் விரும்பவில்லை.

எனினும் ஜி.எஸ்.பி பிளஸை வழங்குவதற்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்பதே எனது நிலைப்பாடு. இலங்கையில் மாற்றங்களை நடைமுறைப்படுத்தியாக வேண்டும் என்பதே எமது தெளிவான செய்தியாகும் என்று குறிப்பிட்டார். (செ-11)

## வாள்வெட்டு...

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் தென் பகுதியிலிருந்து மோ.சைக்கிளில் சுற்றுலா வந்த இளைஞர் குழுவினரின் வாகனமே சேதமாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகர பகுதியில் வீழ்ந்து காணப்படும் நீர்த்தாங்கியை பார்வையிடுவதற்காக அங்கு வருகைதந்த மேற்படி குழுவினர் மோ.சைக்கிளை வீதியோரமாக நிறுத்திவிட்டு புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்த சமயம் அங்குவந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் வாள்வெட்டு தாக்குதலை மேற்கொள்ள எத்தனித்த வேளை அச்சமடைந்த தென்பகுதி இளைஞர்கள் தப்பி ஓடியுள்ளனர். வருகை தந்த இனந்தெரியாத நபர்கள் அவர்களது மோட்டார் சைக்கிள்களை அடித்து சேதமாக்கி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் காரணமாக கிளிநொச்சி நகர் பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது. கிளிநொச்சி பொலிஸாரின் முதலாம் கட்ட விசாரணைகளில் தாக்குதலை மேற்கொண்டவர் எனும் சந்தேகத்தில் ஒருவர் இனம்காணப்பட்ட போதும் யாரும் நேற்றிரவு வரை கைது செய்யப்படவில்லை. அத்துடன் குறித்த தாக்குதல் சம்பவம் மதுபோதையில் இருந்தவர்களினாலையே மேற்கொள்ளப்பட்டு உள்ளது என தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(செ-312)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சீனாவின் திட்ட...

ணமாக புதுடில்லி விஜயம் செய்திருந்த அவர் தனது பயணத்தின் முடிவில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த போதே இவ்வாறு கூறினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளிவிவகாரச் செயலர் ஜெய்சங்கர் உள்ளிட்டோருடன் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ரவி கருணாநாயக்க,

சீன முதலீடுகளின் மூலம் 3ஆயிரம் தொடக்கம் 5ஆயிரம் ஆண்டுகள் பழைமையான கப்பல் பாதை இலங்கையில் புத்துயிர் பெற்றுள்ளது.

பிராந்திய வர்த்தகம் முன்னோக்கி நகர வேண்டும். ஒரு நாடு ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது. அது மற்றொரு நாட்டுக்கு எதிரானது அல்ல.

சீனாவுக்கு ஹொங்கொங் ஒரு ஆரம்பத் தளமாக இருந்தது போல, இந்தியாவின் பொருளாதார செயற்பாடுகளுக்கான கேந்திரமாக இலங்கை மாறலாம்.

சீனாவைப் போலவே, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து முதலீடுகளை இலங்கை வரவேற்கிறது. கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தில் இந்தியாவின் முதலீடுகளை வரவேற்கிறோம்.

கொழும்பு துறைமுகத்தில் இரண்டு புதிய கொள்கலன் முனையங்கள் கட்டப்படவுள்ளன. இந்த திட்டத்தில் இரண்டு இந்திய நிறுவனங்களின் கூட்டமைப்புகள் ஆர்வம் கொண்டுள்ளன.

சீனாவின் அணை மற்றும் பாதை திட்டத்தில் இலங்கையின் ஈடுபாடு குறித்து. எனது புதுடில்லி பயணத்தின் போது. இந்திய அரசாங்கம் கவலை எதையும் எழுப்பவில்லை.

இந்திய அரசாங்கம் இதுகுறித்து முன்னர் கவலை தெரிவித்தது. இதனை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கவனத்தில் எடுத்து முடிவு செய்திருந்தனர். இப்போது தமது முடிவை மீளாய்வு செய்வதாக இந்தியா என்னிடம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஒரு சிறிய நாடு. நாம் எவரையும் பகைமையுடன் பார்க்கவில்லை. அனைவரையும் அரவணைத்துச் செல்லும் கொள்கையையே கடைப்பிடிக்கிறோம் என ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (செ-11)

## திருமுருகன்காந்...

ஈழத் தமிழரின் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வை தமிழகத்தில் நடத்துவ்தற்கு முற்பட்டதாக குண்டர் சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்டு மே17 இயக்கத்தினை சேர்ந்த திருமுருகன்காந்தி உட்பட 17 செயற்பாட்டாளர்கள் தமிழக அரசால் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன கவனயீர்ப்பு போராட்டமொன்று யாழில் இடம்பெற்றுள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த இப்போராட்டமானது நேற்றைய தினம் யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக காலை 10.30 மணிக்கு இடம்பெற்றிருந்தது.

இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவது தமிழர்களின் உரிமை. இதனை தமிழக அரசே நசுக்காதே. ஈழத் தமிழர் ஆதரவாளர்களை விடுதலை செய் போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இக்கவனயீர்ப்பு போராட்டத்தை தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

திருமுருகன்காந்தி இந்தியாவில் மாத்திரமல்லாது உலக நாடுகளிலும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையிலும் ஈழத் தமிழர்களின் போராட்டத்திற்காக குரல் கொடுத்து வந்த ஒருவர். ஈழத் தமிழர்களை வல்லரசு நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையிலே இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தை வழங்கி, பாதிக்கப்பட்ட இனப் படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு துரோகம் இழைக்கின்ற வகையிலான நாடகத்தை அரங்கேற்றிய போது அதன் உண்மையை வெளியே கொண்டுவந்தவர் திருமுருகன் காந்தி.

இவ்வாறான நிலையில் ஈழத் தமிழர்களது போராட்டத்தில் மே17 இயக்கமும் பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்று. இதனாலேயே திட்டமிட்டு அவர் கைது செய்யப்பட்டு பழி வாங்கப்பட்டுள்ளார். எனவே திருமுருகன் காந்தி உட்பட ஏனைய கைது செய்யப்பட்ட தொண்டர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என நாம் தமிழக அரசை கோருவதுடன் அவர்களது விடுதலையானது உறுதிப்படுத்தப்படும் வரை எமது போராட்டம் தொடரும் என தெரிவித்தார்.

கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

மே17 இயக்கத்தின் தலைவர் திருமுருகன் காந்தி ஈழத் தமிழர்களது பிரச்சினை தொடர்பாக ஜெனிவா மனிதவுரிமை பேரவை வரையில் சென்று குரல்கொடுத்தவர். அவர் கைது செய்யப்பட்டுள்ளமையை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டு இருப்பதாக கூறுகின்ற அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசு இன்று ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்த திருமுருகன் காந்தியை குண்டர் சட்டத்தில் கைது செய்தமைக்கு ஈழத் தமிழர்கள் தமது எதிர்ப்பையும் வருத்தத்தையும் தெரிவித்து கொள்கின்றார்கள் என்றார்.

இப் போராட்டத்தில் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

திருமுருகன் காந்தி உட்பட ஈழத் தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு முற்பட்டமை தொடர்பாக 17 செயற்பாட்டாளர்கள் தமிழக அரசால் கைது செய்யப்பட்டமையானது எமக்கு பேர் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்பதற்காக கைது செய்யப்பட்டார்கள் என பார்த்தால் எதுவும் அவர்கள் செய்யவில்லை. ஈழத் தமிழர்களது நினைவேந்தலை செய்ய முற்பட்டமைக்காக அவர்கள் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

திருமுருகன் காந்தி ஈழத் தமிழர்களது போராட்டத்திற்காக ஜெனிவா மனிதவுரிமை பேரவையிலே உள்ளேயும் வெளியேயும் செயற்பட்ட ஒருவர்.

இவ்வாறான ஒருவர் கைது செய்யப்பட்டமையானது அடக்குமுறையே வெளிப்படுத்துவதுடன் அடக்கி அடக்கி வைத்திருக்க நினைத்தால் அது ஒரு போதும் வெற்றியளிக்காது என்பதுடன் மீண்டும் மேலெழுந்தே வரும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை இப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துரைத்த சட்டத்தரணி சுகாஸ்,

திருமுருகன் காந்தி ஓர் அரசியல்வாதியல்ல. அவர் அரசியல் கட்சி சார்ந்தவரும் அல்ல. அவர் ஒரு ஜனநாயக போராளி. மனிதவுரிமை போராளி. வெகுசன இயக்கத்தை உருவாக்கியவர். இவர் கைது செய்யப்பட்டுள்ளமையானது ஜனநாயகம் முற்றாக குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளதையே காட்டுகின்றது.

உலகிற்கு அகிம்சை போதித்த உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று கூறப்படுகின்ற இந்திய நாட்டில் இந்திய சட்டத்திற்கு மதிப்பளித்து. ஜனநாயக வழியில் போராடிய ஒருவர் கைது செய்யப்பட்டமையானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதுடன் அவர்கள் அனைவரும் உடனடியாக எந்தவிதமான நிபந்தனையுமின்றி பிணையில் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (செ-4)

## தங்க நகைகள்...

திருகோணமலை - பாலையூற்று பகுதியில் திருடப்பட்ட 13 பவுண் தங்க நகைகள் திருகோணமலை பொலிஸ் தலைமையக பெருங்குற்றத் தடுப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டதுடன் குறித்த குற்றச்செயலில் ஈடுபட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த கணவன், மனைவி மற்றும் பிள்ளை ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

மூன்று மாத காலத்திற்கு முன்பு திருகோணமலை - பாலையூற்று பகுதியில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கு குடியேறிய குறித்த குடும்பத்தினர் அயல் வீட்டாருடன் தமது குழந்தையின் மூலமாக நட்புறவினை சம்பாதித்து சந்தேகம் ஏற்படாதவாறு சகஜமாகப் பழகிய பின்னர், திருமண வீடொன்றிற்கு செல்வதற்காக தங்க நகைகள் தேவைப்படுவதாக அயலவர்களை ஏமாற்றி கைமாற்றா வாங்கிக்கொண்டு குறித்த பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச்சென்ற குறித்த குடும்பத்தினரை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் வைத்து கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் குறித்த குற்றச்செயல்களை நீண்டகாலமாக மேற்கொண்டு வந்ததாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

மேலும் இவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது குழந்தை நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றிற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. (செ-11)


வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

O/L உடன் மாதம் 25,000/-க்கு மேல் சம்பாதிக்க
யாழ் முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள்!





8 அணிகளாக மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
வடக்கின் 1வது ஹொட்டேல் கல்லூரி
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
Diploma in Tourism & Hotel Management
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
9ம் அணி பயிற்சிகள் ஆரம்பம்
மேலதிக விபரங்கள் www.sikaram.lk
அனுமதிகளுக்கு:
077 3616 798
021 222 0011

விற்பனைக்கு
கிளிநொச்சி நகரத்தை அண்டி 3/4 ஏக்கர் காணி, வீடு வளவுடன் விற்பனைக்கு உண்டு.
0765232218, 0767951279

IELTS
IELTS Test Prep
(PERSONAL CLASSES) உண்டு.
தொடர்புகளுக்கு: 0768226236
49 A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

கணக்கீடு
A/L - 2019
தேர்ச்சி - 03
ஆரம்பம் நாளை 11am
S.தவா
DCM யாழ்.நகர்

கணக்கீடு
A/L - 2019
தேர்ச்சி - 03
ஆரம்பம் நாளை
NIRU - 1pm கோண்டாவில்
Universal - 3pm கந்தர்மடம்
S.தவா

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
முன்பள்ளி ஆசிரியர் தெரிவு
பிரதி ஞாயிறு- 11.00 - 3.00வரை
சுங்க திணைக்கள பதவிகள்
பிரதி சனி 2.00 - 5.00pm
SLAS
பிரதி ஞாயிறு- 9.00 - 4.00pm
முகாமைத்துவ உதவியாளர்
பிரதி ஞாயிறு- 11.00 - 2.00வரை
வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதி சனி 10.00 - 2.00pm
தொடர்புகளுக்கு: 076 688 3394, 021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
UK-550/=Kg
V2 TRAVELS-0768226240

கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு
இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
STUDENT VISA
கருத்தரங்கு நாள் 11-06-2017 காலை 09 மணி
V2 Travels
முற்பதிவு அவசியம் - 0768226236 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

பதவி வெற்றிடங்கள்
O/L, A/L படித்தவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு...
யாழ்.மண்ணில் ஒரு தசாப்தகாலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் DYNAMIC HOLDINGS (PVT) LTD இன் வடக்கு மற்றும் கிழக்கில் திறக்கப்படவிருக்கும் புதிய கிளைகளுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.
வயதெல்லை 18 -30
தகுதிக்கேற்ப சிறந்த வருமானம் (20,000-45,000)
தொடர்பு: 077 520 2903, 021 567 9001


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் ... 09.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org